



# சுகுணாவின் அமுதவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகணாவின் அமுத விழா
## மலர்

### வெளியிடுவோர்:~

01. க.தமிழ்அழகன்

02. ச.பூங்கோதை

03. பா.தமிழ்மலர்

04. செ.மணிமேகலை

05. ப.கனிமொழி

06. க.கணேசானந்தன்

### மலர்க்குழு:~

01. திரு.கி.நடராசா

02. திரு.செ.சதானந்தன்

03. திரு.மு.சுந்தரலிங்கம்

04. திரு.நா.சந்திரசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

கடலுக்குப் பெருமை கோடிக் கணக்கில் கொழித்துக் கிடக்கிற நுரைகளால் அல்ல ஆழத்தில் அடங்கிக் கிடக்கும் முத்துக்களால்தாம். தமிழறிஞர் சுகணா என்ற நல்முத்தை அறியாதவர்கள் இல்லை. நல்லாசிரியராக, நல்ல அதிபராக, நன்மானுடனாக, வாழ்ந்துவரும் சுகணா அவர்களுக்கு அவர்தம் குழந்தைகள் எண்பதாவது அகவை நிறைவைக் கொண்டாட விழா எடுக்கின்றனர்.

கேளாரும் வேட்பமொழியும் இலக்கியத்திறனும், கருத்தாழமும் புரட்சிகர சிந்தனையும் கொண்ட எழுத்தோவியமும், பட்டிமன்றங்களிலும், கருத்தரங்குகளிலும் வெளிவரும் இலக்கிய ஆற்றலும் ஆற்றொழுக்குப் போன்ற மொழி நடையும் இவையாவும் சொற்களால் கூறிவிடுவனவல்ல. இலக்கியத்தின் எந்த வடிவத்தில் எழுதினாலும், தமிழ்மொழிக்கென்று ஆண்டான்டு காலமாய் அமைந்து கிடக்கும் அழகியல் உணர்ச்சியை கரம் பிடித்த கலாபூர்வ எழுத்து நடை அதிசயிக்க வைக்கும். தமிழ்மொழி வளர்ச்சிக்காக அவர் படைத்த படைப்புக்கள் பல வெளிக்கொணரப்படாதிருப்பது வேதனைக்குரியது. எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாத அவரது ஆக்கங்கள் சிலவற்றை வெளிக்கொணர வேண்டும் என்ற அவாவில் தோன்றியதே இவ் அமுதவிழா மலர்.

பொதுவாக இம்மலரில் ஒரு வேறுபாடான தன்மையுண்டு. சுகணாவைப் பற்றி பிறஅறிஞர்களது கட்டுரைகளுக்குப்பதிலாக சுகணாவின் ஆக்கங்கள் மட்டுமே இம்மலரைத் தாங்கி வருவது ஒரு சிறப்பம்சமாகும். இதனால் அவரின் இறந்தகாலத்தில் மீண்டும் வசித்துவர எமக்கொரு வசதிகிடைப்பதோடு, ஒரு மாமனிதனின் சமூகப்பாங்கை சத்தமில்லாமல் மதிப்பிடவும் முடிகிறது. காலம் கடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவருகின்றன ஆயினும் அவரது சிந்தனைகளை உலகறியச் செய்யவேண்டியது எம்பணி ஆகும்.

நமது மண்-நமது மொழி-நமது இனம்-நமது நாகரிகம்-நமது பண்பாடு-நமது வரலாறு இவைகளைப் பற்றிய அறிவும் உணர்வும் இல்லாமல் நாம் முழுமையான மனிதர்களாக மூச்சுவிட முடியாது. வாழ்க்கை என்பது பழைய சம்பவங்களின் பரிணாமம் தான்.

போலித்தனம் இன்றி இம்மண்ணையும் மனிதர்களையும் நிஜமாய் நேசித்து அமுதவிழாக்காணும் சுகணா தம்பதியினர் தமிழமுதினை உண்டு களித்து மேலும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

**மலர்க்குழுவினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலர் அவர்களின் வாழ்த்துரை.

எமது பிரதேசத்தைச் சேர்ந்த மூதறிஞர் சுகணா அவர்களுக்கு அவரது பிள்ளைகள் எண்பதாவது வயது நிறைவையொட்டி எடுக்கும் அமுதவிழாவிற்கு வாழ்த்துரை வழங்கவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நான் மாணவனாக இருந்த காலத்தில் சுகணா அவர்கள் தமிழாசிரியராகக் கடமை புரிந்தவர். இன்முகத்துடன் இலக்கிய பாடங்களைக் கற்பிப்பதே ஒரு தனிரகம் மாணவர்க்கு சோர்வு ஏற்படாத வகையில் உற்சாகப்படுத்தும் பல கற்பித்தல் உத்திகளைக் கையாள்வதில் மிகுந்த வல்லவர்.

நிகழ்காலத்தின்
பாய்விரிப்பில் படுத்துக்கொண்டே
நேற்றுகளிலும்....... நாளைகளிலும்
வாசம் புரிய வல்லவன் அவனே
அவன் கனவுகள்
தூக்கங்களால் மட்டும்
கௌரவிக்கப்படுவதில்லை
அவன் கனவுகளுக்கு
விழிப்புகளும் சம்மதிக்கின்றன.

என்ற வைரமுத்துவின் பாடல் வரிகளை மேற்கோள் காட்டி அவரது எழுத்தாக்கப் பணி மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

பிரதேசச்செயலகம்,
கரவெட்டி.
04.08.2003.

வே.வீரபத்திரபிள்ளை,
பிரதேசச்செயலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகணாவின் பத்து திருமுகங்கள்:

திருமுகம் என்பது கடிதத்தைக் குறிக்கும் செய்திப் பரிமாற்றத்தில் கடிதமும் காத்திரமான தொன்றாகும். உலகப் புகழ் வாய்ந்த பல பெரியார்கள் தாம் வாழ்ந்த காலங்களில் பிள்ளைகளுக்கோ அன்றி நண்பர்களுக்கோ எழுதிய கடிதங்கள் பிற்காலத்தில் அவை தாங்கி வந்த கருவிப்பொருளினால் முக்கியத்துவம் வாய்ந்ததுடன் இலக்கியத்திலும் இம்மரபு பேணப்படுவதாயிற்று. இதில் பண்டிதர் ஜவகர்லால் நேரு மகளுக்கு எழுதிய திருமுகங்கள் அவருடைய வாழ்க்கைச் சரிதமாக நூலுரு பெற்றமையும் பின்னர் இந்தியாவின் பிரசித்தி வாய்ந்த எழுத்தாளரான டாக்டர் மு.வரதராசனார், ஈழத்துமுன்னோடி எழுத்தாளர்களுள் ஒருவரான பேராசிரியர் டாக்டர் நந்தி போன்றோரின் இலக்கிய ஆளுமையில் கடிதப்பாணியில் தாம் சொல்ல வந்தவற்றைப் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

திரு.சுகணா அவர்களும் இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலப்பிரிவில் அதாவது, ஐம்பதுக்கும், எண்பதுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தனக்கே உரித்தான சமூக சீர்திருத்தப் பார்வையில் மகளுக்கு எழுதிய திருமுகங்கள்பத்து அவருடைய அமுதவிழா மலரில் இடம் பெறுவது அவருடைய சமூக ஆளுமைக்கு ஓர் அடையாளமாகஅமைகிறது எனக் கொள்ளலாம்.




**பொ.சதானந்தன்,**
**மலர்க்குழுவின் சார்பில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுகம் ஒன்று

"அண்ணா இல்லம்"
அல்வாய்.
01.11.2001.

**எங்கள் அருமை மகனே பூங்கோதை,**

முன்பு நான் எழுதியபடி இத்திருமுகம் எழுதப் படுகிறது. நேரு அவர்கள் சிறையிலிருந்த சமயம் தனது மகள் இந்திராகாந்திக்கு பிரியதர்சினி என்று விளித்து எழுதிய கடிதங்கள் போல, திறந்த வெளிச்சிறைச்சாலையில் இருந்து எழுதுகிறேன்.

நான் மிகமிகச் சாதாரண தமிழ்மகன். இன்று எனக்கு எழுபத்தெட்டு நடக்கிறது. எமது தாயகத்திலேயே திறந்தவெளிச் சிறையில் இருக்கும் துர்ப்பாக்கிய நிலையிலேயே இதனை எழுதுகின்றேன்.

உன் உடன்பிறந்தாள் தமிழ்மலர் நோர்வேக்கு வரும்போது, நான் இளமையிலும் பின்னரும் எழுதி அடைக்கலாம் குருவிபோல பாதுகாத்து வைத்திருந்த குறுங்கதைகள், நாவல்கள், கட்டுரைகள் என்பவற்றை ஆசையோடு எடுத்து வந்திருக்கிறாள். நான் அவற்றை எடுத்துப்போக அனுமதித்தது கடைசிக் காலமான இனியாவது பிரசுரம் செய்யப்படவேண்டும் என்கிற அபிலாசையால் அல்ல.

அவை இன்றைய காலகட்டத்தில் பிரசுரிக்கத் தகுதி வாய்ந்தவை அல்ல. மிகப்பெரிய செலவும் பாரிய நட்டமும் தரக்கூடியன. காகம் ஒன்று தான் கூட்டில் இட்ட முட்டைகளை ஒவ்வொன்றாகத் தன் சொண்டினால் அடிக்கடி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புரட்டிப் பார்ப்பதுபோல அடிக்கடி நானே படித்து, ஆகா! 'சுகணா' இப்படியும் எழுதும் ஆற்றல் பெற்றவரா? என்று மனதுள் எண்ணியதுண்டு. இவைகளை வீணே அடுப்புக்கும், நெருப்புக்கும் தீனியாக்கிடாமல் அறிவுப்பசியாய் இருக்கக்கூடிய எமது பிள்ளைகள் தின்று பார்த்துவிட வேண்டும் என்ற அங்கலாய்ப்பினாலேயே அனுப்பப்பட்டன.

மலர் மூலம் அனுப்பினேன்,

**பூவே,**

நீயும் மலரும் துணிச்சல்காரிகள் தான். ஆனால் அவற்றைப் பிரசுரம் செய்ய முயற்சிக்க வேண்டாம். வேண்டுமானால் எனது இறுதிப் பயணத்தின் பின்னர் என்னை நினைவுகூர வேண்டில் தற்போது பூவுக்கெழுதும் திருமுகங்கள் பத்தையும் ஒன்றிணைத்து சிறிய மலராக வெளியிட்டு (வசதியிருந்தால் மாத்திரம்) அன்பளிப்பாகக் கொடுப்பது தந்தைக்கு ஆற்றும் கடமையில் ஒன்றாக அமையும். எழுத்துலகில் எனது பேனா எப்படி எல்லாம் செயற்பட்டது என்பதை அன்பர்கள் அறிவார்கள் அல்லவா? 'முற்றத்து மல்லிகையாக இருந்து போனாரே' என்று ஆதங்கப்படுவார்கள்.

பதினாறுமுழக் கூறைச்சேலையும், எட்டுமுழ பட்டு வேட்டியும் இன்று 'பாஷன்' இழந்து வீட்டில் அடிப்பெட்டியில் இறுதி யாத்திரைக்காகத் தவம் கிடக்கும் காலமிது! வெங்காயச் சருகுச்சேலையும், பஞ்சாபிகளும், ஜீன்ஸ் என்ற ஏதோ ஒன்றும் பொப்பிசை சகிதம் ஆட்டமாடும் காலமிது!

பாலியல் நுட்பங்களை வெளிப்படையாகச் சொல்லியும் காட்டியும் இரசிகத் தன்மையை உலகளாவிய ரீதியில் மாற்றியுள்ள, பழையன கழியும் கணனிக் காலமிது!

இக்காலத்தில்போய் சென்றகாலச் சங்கதிகளை மையமாக வைத்து எழுதியவற்றை பத்தாம் பசலிக்கதைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி வாங்கத்தான் படிக்கத்தான் யார் வருவார்கள்? இன்றைய இளையதலைமுறையினர் அதுவும் புதுமைக்கு லேசில் எடுபடாத - பக்குவம் உள்ள உயர்வகுப்புப் படிக்கின்ற - தட்டச்சுப் பயிற்சியுள்ள மாணவி ஒருத்தியிடம் நான் முன்பு எழுதிவைத்திருந்த 'தாலி'என்ற குறுங்கதையைப்படித்து அடித்துத்தரும்படி கொடுத்-திருந்தேன். அதனை அவள் பார்த்தாளோ படித்தாளோ தெரியாது.

அந்தத் தியாகத் 'தாலி' க்கதை அவள் மனதைக் கவரவில்லைப்போலும். 'தாலி' திரும்பவேயில்லை. நான் குறைசொல்லவில்லை. உலகம் இன்று அப்படித்தான். இன்றைய இளமை வேகமானது, ஆனால் விவேகமில்லாதது. இளம் மனங்களைக் கவரவல்லவை யல்ல பழைய கதைகள், நமது கலாசாரமும் கூட. ஆகவேதான் மலர் தூக்கிவந்தவற்றை நீங்கள் மட்டும் வாசித்துப் பார்த்தாலே போதும். எனது ஆத்ம தாகமும் தீரும். உங்களுக்கு நேரம் கிடைக்குமோ தெரியாது.

**ஆசை மகளே,**

உனது தந்தையின் வாழ்வில் அவர் ஒரு யதார்த்த வாதியாகவும், புரட்சிகரமான நல்லவொரு செயற்பாட்டாளராகவும், சமூக அரசியல் துறைகளில் விளங்கினார் என்பவற்றை மட்டுமல்ல பொருளாதார முட்டுக்களை எவ்வாறு சரிப்படுத்தினார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

எழுத்துலகில் அவர் நிரந்தர எழுத்தாளியாகாமல் போனதற்குரிய காரணங்களையும் தன்மட்டில் பேனாவை உழுகருவியாகக்கொண்டு சமூகப்பண்பாடு, சுதந்திரம், சமத்துவம் என்பவற்றுக்காக எவ்வாறு பயன்படுத்தினார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் திருமுகம் இரண்டில் இருந்து எழுத இருக்கிறேன்.

"இலட்சங்கள் நடமாடும் இன்றைய உலகில்
இலட்சியங்கள் வெறும் கேலிக்கூத்தே"

~ சு.கணா ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுகம் இரண்டு

**எங்கள் ஆசை மகளே பூங்கோதை,**

இரண்டாவதாக எழுதப்படும் இத்திருமுகத்தில் இருந்து உனது தந்தையின் எழுத்துலகப் பிரவேசம் பற்றி எழுதுவேன் என்று எழுதியிருந்தேன்.

எழுத்தாற்றல் என்னிடம் இருக்கிறதோ இல்லையோ? சொல்லாற்றல் நிரம்ப இருக்கிறதாக அறிஞர்களும், மாணவர்களும் ஏன் பாமரரும் பேசிக்கொள்வதைப் பல தடவைகள் கேட்டிருக்கிறேன். அதனால் அண்ணா இல்லத்துக்கு அடிக்கடி ஆர்வலர்கள் வந்து கலைமகள் விழா, வள்ளுவர் விழா, பாரதிவிழா, கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் இலக்கிய விழா, பட்டிமன்றம் என்றுகூறி சொற்பொழிவுக்காக என்னைப் பரிந்து அழைத்துச் செல்வதை நீங்கள் கண்ணாரக் கண்டிருக்கிறீர்கள்.

நான் எப்போது ஆசிரியத் தொழிலில் இருந்து இளைப்பாறினேனோ, எனக்கிருந்த பல்லாற்றல் வலுவிழந்து சொல்லாற்றலைக் குறைத்ததோ கிட்டத்தட்ட பன்னிரண்டு ஆண்டுகளாக அரங்கேறுவதைத் தவிர்த்துக்கொண்டு வருகிறேன்.

இவைபோக எனது எழுத்து முயற்சி எவ்வாறு தொடங்கியது எந்தெந்த வகையில் வளர்ந்தது என்பதை இந்தத் திருமுகம் அறியத்தரும்.

**மகளே பூ,**

உனக்குத் தெரியாது, எனது நெடுநாளய நண்பனும், அம்மாவின் கூடப்பிறவாத் தம்பியுமாகிய சோமுவை. அவன் ஒரு காந்திய வாதி, நல்ல படிப்பாளி, மிகச்சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகன். அந்தப் பெருமகன்தான் வாசிக்கும் பழக்கத்தினையும், நூல்கள் சேகரித்து வைக்கும் பக்குவத்தையும் எனக்கு ஏற்படுத்தியவன். அந்த நல்லவன் எப்போதோ போய் விட்டான். நல்லவர் பிறக்கார் பிறந்தபின் இருக்கார் என்பார்கள். நான் ஆசிரிய பயிற்சி பெற்ற காலத்திலிருந்தே கணிசமான பல்வகைப்பட்ட நூல்களை வாங்கிப் படித்துவந்தேன்.

கார்ல்மாக்ஸின் "கப்பிற்றல்" எனும் பணம் பற்றிய நூல் சோக்கிரட்டீஸ், அரிஸ்ரோட்டில் போன்றவர்களின் அரசியல் நூல்கள், டால்ஸ்டாய் என்கின்ற ரஷ்ய அறிஞரின் புத்தகங்கள், கடவுள் கொள்கையை மறுக்கும் (பரிணாமவாத) இங்கர்சாலின் வெளியீடுகள், இந்திய கல்விமான்களான கவிதாகூர், காண்டேகர் போன்றோரால் வெளியிடப்பட்ட நூல்கள், மகாத்மாகாந்தியின் சத்தியசோதனை, நேரு தன் மகளுக்கு எழுதிய பலநூறு கடிதங்கள், இன்னும் பலப்பல அக்காலத்தில் தமிழ் மொழி பெயர்ப்பு நூல்களாக என்னால் வாங்கிப்படிக்கப்பட்டன.

மேலும் கலியாணசுந்தரனார், டாக்டர் மு.வரதராசனார், சி.வா.ஜகநாதனார், கல்கியார், அறிஞர் அண்ணாத்துரை போன்ற பலப்பலரின் பலப்பல நூல்களையும் வாசித்து இருக்கிறேன். சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களை மேலோட்டமாகப் படித்திருக்கின்றேன். மகாகவி பாரதியார், புரட்சிக்கவி பாரதிதாசன் போன்ற புலவர்கள் பாடல்களால் கவர்ந்து இழுக்கப்பட்டேன். உலகப் பொதுமறையாம் திருக்குறள் என் வாழ்வை நெறிப்படுத்திய நூலாகவே கருதுகின்றேன்.

சங்க இலக்கியங்களையும் தொட்டுப்பார்த்த அனுபவம் உண்டு. சுருக்கச் சொன்னால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் வெளிவந்த சிறுகதைகள், நாவல்கள், பாடல்கள், காவியங்கள், கட்டுரைகள் என்பவற்றை நான் விட்டுவிடவில்லை. எனது வாசிக்கும் பழக்கம் என் பிள்ளைகளிடமும், என் ஊரவர்களிடமும் ஏற்படவேண்டும் என்பதற்காக பூவே. "பூங்கோதை நூலகம்" என்ற ஒரு நூலகம் அண்ணா இல்லத்தில் இருந்ததை நீயறிவாய். தமிழழகன், பூங்கோதை, தமிழ்மலர், திருவள்ளுவன், மணிமேகலை, கனிமொழி, கடைசிக் கணேசானந்தன் இவையெல்லாம் எனக்கிருந்த இருக்கின்ற தமிழ்ப்பற்றால் இடப்பட்டனவல்லவா?

நான் வாசித்த - படித்த அத்தனை தமிழ் நூல்களால் என் அறிவுப்பசி தீர்ந்தபாடில்லாத போதும் அவை இரத்தமாகி என் உடலில் ஓடிக்கொண்டிருப்பதனால்தான் என்மட்டில் ஓர் எழுத்து வன்மை உடையவனாகவும், சொல்வன்மை பெற்றவனாகவும் கருதப்படுகிறேன்.

இனி எமது விடயத்துக்கு வருகிறேன். எனக்கு அப்போது வயது இருபத்தைந்து இருக்கும் எனது ஆத்ம நண்பன் சோமுவுக்கும் அதே வயது தான். இளைஞர்களுக்குரிய துடிப்பு - மிடுக்கு நம்மிடமும் இருந்தது. அநியாயங்களைக் கண்டு பொறுக்காத இளமை அது. எங்கள் குலதெய்வமாம் அம்மன் கோவில் பரிபாலனத்தாரின் அசமந்தப்போக்கை கண்டிக்க வேண்டியவர்களாக நாம் இருந்தோம். சாடையான புரட்சியுடன் நிர்வாகம் மாறியதும் எமக்கும் அவர்களுக்கும் போர் தொடங்கியது. போர் என்றால் களத்தில் அல்ல, ஆயுதத்தால் அல்ல, பேனாவால் ஒரு பிரசுரப் போரே நடந்தது. இங்கே தான் எனது எழுத்தாற்றல் பரீட்சிக்கப்பட்டது,

அ) "வீழுந்தன விரியன் பாம்புகள், எழுந்தன கதிரொளி"

ஆ) "அரசியலா அன்றி ஆலய மேடையா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) "நானும் ஆனந்திக்கிறேன் நீங்களும் ஆனந்தப்படுங்கள்"

ஈ) "சீ, பாலசிங்கமே"

இவ்வாறு மாறி மாறிப் பல பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. போரின் முடிவில் ரூபா பத்தாயிரம் கோரி என்மீது மானநட்ட வழக்குப் போடப்பட்டது. வழக்குக் கட்டளைகூட உன் அம்மாவைத் திருமணப் பந்தலில் தொட்டுத் தாலிகட்டி முடிய கட்டளைச் சேவகனால் தரப்பட்டது!! இதனை ஏன் எழுதுகிறேன் என்றால், அம்மன் கோயில்தான் எனது எழுத்தாற்றலுக்கு அடியிட்டது என்பதற்காகவே.

பிரசுரப் போரில் துவங்கிய எழுத்து பின்னர் கட்டுரைப் போட்டிகளில் பங்கு பற்றத் தூண்டியதும் பரிசுகள் பெற்றதும் பற்றி அடுத்த திருமுகத்தில் எழுதுவேன்.

குறிப்பு:~ பூவே,

எனது கதைகளை நீங்கள் வெளியிடவேண்டும் என்ற உங்கள் ஆசையைக் கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். காலத்தால் பழைய நடையால், பழைய கருத்தால் ஒத்துவராத அக்கதைகளை வெளியிடும் எண்ணத்தை விட்டுவிட்டு நான் தற்போது உனக்கு எழுதுகின்ற இந்தப் பத்தோ பன்னிரண்டு திருமுகங்களை. உங்கள் தந்தை கண்மூடிய பின்னர் நடக்கவிருக்கும் காரியங்களில் எனக்கு நம்பிக்கை இல்லாதபடியால், எனது நினைவு நாளில் தொகுத்து இருபத்தைந்தோ முப்பதோ பக்கங்களைக் கொண்ட இதழாக அச்சிட்டு அன்பர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதையும், இத்தனை நூல்களைப் படித்தும் பார்த்தும் மங்கிடாத என் கண்களை ஒரு விடுதலை வீரனின் மங்கிய கண்களில் பொருத்தி அவன் ஒளி பெறவும் ஆவன செய்வீர்கள் என்று நம்பி இத்திருமுகத்தை முடிக்கிறேன்.

~ சு.கனா ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுகம் மூன்று

**எங்கள் இனிய மகளாம் பூங்கோதை,**

இன்று, நான் ஆசிரியனாகப் பயிற்சி பெற்று முதன்முதல் ஆசிரியப் பணி புரிந்த நன்மக்கள் வாழ் கற்பிட்டி என்னும் ஊரில் ஆற்றிய சேவைகளில் எழுத்துத்துறையில் என்ன செய்தேன் என்பதையும் எழுதப்போகிறேன்.

தமிழ்ப் பற்றும் இஸ்லாமியப் பண்பாடும் மிக்க அவ்வூர் மக்களையும் அவர்களின் நன்றி உணர்வையும் நானோ உன் அம்மாவோ என்றும் மறக்கமுடியாது. கற்பிட்டி அல்அஸார் முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் நான் கடமைபுரிந்த ஒன்பது ஆண்டுகளும் "சுகணா" சிறந்த ஒரு நல்லாசிரியன் என்ற முத்திரை புத்தளம் மாவட்டத்திலே பதிக்கப்பட்டிருந்தது.

கற்பித்தல், மாணவரைக் கவர்ந்திழுத்து தமிழ்ப்பற்றை வளர்த்தல், சிறந்த எழுத்தாளிகளான காண்டேகர், டாக்டர் மு.வ. அறிஞர் அண்ணா போன்றோரின் வெளியீடுகளை வாசிக்கப் பழக்கியமை இஸ்லாமிய வீடுகளிலே திருக்குறளும் இருக்கவேண்டுமென்ற அவர்களின் அவாவினை நிறைவேற்ற இருநூறு திருக்குறள் (மலிவுப்பதிப்பு) நூல்களை இந்தியாவிலிருந்து தருவித்து கொடுத்தமை ஆகிய தமிழ்ப்பணிகளை இத்துடன் நிறுத்திக்கொண்டு,

பாடசாலையில் வருடாவருடம் நடைபெறும் பேச்சு, எழுத்து, நாடகப் போட்டிகளுக்கான விடயங்களை நானே எழுதிப் பழக்க வேண்டியிருந்தது. நாடகத்துறையில் என் மன வண்ணமும், கைவண்ணமும் பாராட்டுக்குரியனவாக விளங்கின. அவற்றில் ஒரு நாடகம் புத்தளம் மாநகரில் அரங்கேறியது. ஐம்பது ஆண்டுகளாகியும் அந்நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனதில் பசுமையாக இருக்கிறது. "ஒரு பிச்சைக் காரனின் வாழ்வு" என்பதுதான் நான் எழுதி அரங்கேற்றிய நாடகம். பிச்சைக்காரனாக நடித்து அனைவரையும் கவர்ந்து தனது பிச்சைப் பாத்திரம் நிறைய பார்வையாளாரிடம் பிச்சை பெற்றவர் வேறுயாருமில்லை, எனது மச்சானும் உனது மாமாவுமான சந்திரம்தான்.

சிவாஜிக்கு நிகரான நடிகன் என்ற பாராட்டையும் மாமா பெற்றுக் கொண்டது எனக்கு மிகமிக மகிழ்ச்சி. இன்னும் பல நாடகங்களை எழுதி அவரைக் கதாநாயகனாக வைத்து அரங்கேற்றவேண்டும் என்ற விருப்புடையவனாக நான் இருந்தேன். இதனைவிட "நாமிருவர்" என்ற நாடகத்தினை நானே பழக்கி ஒப்பனை -அலங்காரம்- அரங்கேற்றம் எல்லாம் நானே செய்து வரலாற்றுப்புகழ் மிக்க ஒல்லாந்தர் கோட்டையில் மேடையேற்றி அனைவரதும் பாராட்டுக்குரியவனாயிருந்திருக்கிறேன்.

**பூவே,**

நான் கற்பிட்டியில் கடைமையாற்றிய காலம் காதற்பருவக் காலம். ஏனோ தெரியாது இதுவரை நான் அம்மாவைத் தவிர யாரையும் காதலிக்கவேயில்லை. அம்மாவின் கழுத்தில் நான் மாங்கல்யம் பூட்டியது ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு என்று நினைக்கிறேன். நீ பிறந்து பூப்படைந்து மணம் நுகர்ந்து சத்தியனைப் பெற்றெடுத்தபின், கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளின் பின்னர் நீயும் நானும் சத்தியனுமாக கற்பிட்டி நகருக்கு சென்றது சமீபத்துச் சங்கதி.

அத்தனை ஆண்டுகளின் பின்னரும் அந்த இஸ்லாமிய மக்களிடையே உன் ஐயாவுக்கு இருந்த மதிப்பையும் உங்களுக்கு இருந்த வரவேற்பையும் நீ லேசில் மறந்து விடமாட்டாய். பிற ஆடவரை நோக்காத இஸ்லாமிய பெண்பிள்ளைகள், (படித்தவர்கள்) ஐயாவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் ஆசையால் தம்வீடுகளுக்கு அழைத்ததை நான் என்றும் எப்படி மறக்கமுடியும்? இத்தகைய ஓர் ஆசிரிய சேவையை நான் ஆற்றியிருக்கிறேன் என்று பெருமைப்படலாம் அல்லவா?

இந்தக்கால கட்டத்திலேதான் எனக்கு நல்லறமாம் இல்லறம் வாய்த்தது. தமிழ் அழகன் பிறந்தான். பூங்கோதை அவதரித்தாள்!. தமிழ்மலரும் மலர்ந்தாள். அப்போது எனக்குச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? ரூபா நூற்றைம்பதேதான். இத்தனைக்கும் மாதா மாதம் புத்தகங்கள் வாங்க ரூபா பத்துப்பறந்துவிடும். ஊருக்கு சென்றால் வாழ்க்கையைச் சமாளிக்கலாம். விட்டுவந்த மண்வெட்டியும் உதவும் என்று அங்கலாய்ப்புடன் இருக்க வந்தது கொழும்பு மாற்றம். இந்த மாற்றம் எனது எழுத்துலகப் பிரவேசத்துக்கு அடியிட்டது. கொழும்பு ஈழத்தின் தலைநகரம். நாளும் தினசரிகள், சஞ்சிகைகள் வெளியிடப்படும் நகரம். மேலும் கொழும்பு விவேகானந்தா கல்லூரி தமிழ் மணக்கும் கல்லூரி. இத்தகைய சுற்றுச்சூழல் எனது பேச்சாற்றலுக்கும், எழுத்தாற்றலுக்கும் களம் அமைத்துத் தரும் என்ற நம்பிக்கை எனக்கு.

**ஆசை மகளே,**

நீயும் உன் அம்மாவும் அண்ணா அழகனும் அன்பர் ஒருவரின் மருதானை வீட்டில் ஒட்டுக் குடித்தனம் செய்துவரும்போது வீரகேசரி இதழில் ஒரு விளம்பரம் வந்தது. அகில இலங்கை ரீதியில் நடாத்தும் கட்டுரைப் போட்டி ஒன்று இந்தியத் தூதுவரால் நடத்தப்படுகிறது என்று. "அணுசக்தியின் பயன்" என்பதுதான் கட்டுரைத் தலைப்பு. இது விஞ்ஞானக் கட்டுரை. தமிழ் ஆசிரியன் அதுவும் விஞ்ஞான பாடத்தினை ஒரு பாடமாகக் கூட கற்காதவன் போட்டியில் பங்குபற்றத் துணிவானா? அந்தத் துணிவு வாசிப்பு பழக்கமுள்ள எனக்கு எப்படி வந்ததோ தெரியாது. அந்த அக்கினிப் பரீட்சையில் ஒருமுறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றிப் பார்க்க மனம் நாடியது. தோற்றினேன்.

தமிழினம்தான் இழந்த தாயக உரிமைக்காக தந்தை செல்வாவின் தலைமையில் அகிம்சை வழியில் போராட்டம் எனது மனதை ஈர்த்தது. அப்போது என் மனதில் உதித்து புனையப்பட்டதுதான் "தாலி" என்கிற குறுங்கதை. "அது" தியாகத்தின் மேன்மையை சித்தரிப்பது. தமிழ்ப் போர்வீரன் எல்லைப்புறப் போருக்கு சென்றவன், வடநாட்டுப் பெண்ணைக் காதலித்து மணம்முடித்து ஓர் ஆண் குழந்தைக்கு தந்தையாகி அவன் விடுதலைப் போரில் மாண்டுவிட, அந்தப் பதிவிரதை தன் தாலியையும் குழந்தையையும் தன்னையும் தாய்நாட்டிற்காகத் தியாகம் செய்தகதை அது.

திருமுகம் மூன்று நீண்டுவிட்டது. நான்கில் தொடருவோம்.

~ சுகணா ~



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமுகம் நான்கு

## இல்லறம் காக்கும் எங்கள் இனிய பூவே!

திருமுகம் மூன்றில் விட்ட இடத்திலிருந்து துவங்கு கின்றேன். அந்த தியாகத் தாலிக் கதையை வீரகேசரி இதழில் பிரசுரிக்கத் தகுதிபெறுமோ என்று பார்ப்பதற்காக பதிவு அஞ்சலில் அனுப்பிப் பார்த்தேன். ஒருவன் எழுத்தாளியாவதற்கு கைகொடுத்து உதவுவன பத்திரிகைகளே. ஆனால் இன்று வரை எவனொருவன் இதழ் ஆசிரியனின் கடைக்கண் பெறாதவனோ அன்றி அவ்விதழ் ஆசிரியர் குழுவின் செல்வாக்கு பெறாதவனோ முன்னுக்கு அதாவது எழுத்தாளி எனப் பெயர் வாங்குவது அபூர்வம்.

இதனால் தரம்வாய்ந்த எழுத்தாளிகளை நான் குறைத்து மதிப்பிடுபவனல்லன். எழுத்தாளியோ, பேச்சாளியோ படிப்பவர்களால் கேட்பவர்களால் மதிப்பிடப்பட வேண்டியவர்கள். இத்தகைய காரணங்களால் காக்கை தன் பொன்குஞ்சுகளை பாதுகாத்து கூட்டிலேயே வைத்திருக்கிறது!

தமது ஆக்கங்களை பொதுமக்கள் முன்னிலையில் பிரசுரிக்க வக்கில்லாதவர்கள் எழுத்துலகில் பிரவேசித்தல் லேசான காரியமல்ல. இதனை விரிவாக நான் எழுதுவது ஏனென்றால், நான் கொழும்பில் கடமையாற்றியபோது சில பல வானொலி நாடகங்களை எழுதி அனுப்பிப் பார்த்திருக்கிறேன். நான் எழுதி எடுபடாத நாடகங்களில் இரண்டினை என் உடனாசிரியையின் பேரில் அனுப்பிப் பார்த்தோம். என்ன ஆச்சரியம்! இரண்டும் ஒலிபரப்பப் பட்டன! இத்தகைய நிகழ்வுகள் என்னைப் பத்திரிகை களை அணுக விடவில்லை. எனக்கு இயல்பாகவேயுள்ள அடிவருடி - பந்தம் பிடியாக் குணம். ஒன்று, நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறக்காப் பாவம் இன்னொன்று அதனால் சிலர் என்னைக் "குடத்துள் விளக்கு" என்று குறிப்பிடும்போது நிம்மதி பெறுகிறேன்.
நிற்க,

**பாசமிகு மகளே,**

நான் விஞ்ஞானத்தினை ஒரு பாடமாகக்கூட உயர்வகுப்பில் படிக்கவில்லை. கணிதமோ எனக்குக் கைவந்ததாக இருந்தது. அந்த நாட்களில் விஞ்ஞானம் சம்பந்தமான பலவகை நூல்கள் தமிழில் வெளிவந்தன. அவற்றைத் தேடி வாங்கிப் படிப்பது என் வழக்கம். பத்திரிகைகளில் வரும் விஞ்ஞானக் கட்டுரைகள் பலவற்றை வாசித்திருந்தேன். என்றாலும் விஞ்ஞானம் கற்றுத்தேர்ந்த பலர் பங்குபற்றும் அந்தப் போட்டியில் "அணுசக்தியின் பயன்" பற்றி நானும் கட்டுரை எழுதத் துணிந்தது ஓர் அசட்டுத்துணிவுதான்.

அத்துணிவு அசடு அல்ல, அறிவுத்துணிவு என்பதைப் போட்டி முடிவு ஒப்புக்கொண்டது. அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பெற்ற இப்போட்டியின் முதற்பரிசாக ஒரு தங்கப்பதக்கமும் சான்றிதழ் ஒன்றும் கிடைத்தது. எனக்கும் எழுதும் ஆற்றல் மட்டுமல்ல ஆய்வுக் கட்டுரைகளை எழுதும் அறிவும் உண்டு என்பதை பத்திரிகைகள் அடக்கிவிட்டாலும் அறிவுசீவிகளான உயர்தரம் வாய்ந்தோரே பரிசளித்து கௌரவித்தார்கள். இந்நிகழ்வு என்னை எழுத்துலகுக்கு அழைத்தது.

கொழும்பு பகுத்தறிவுச் சங்கம் அகில இலங்கை ரீதியில் 'சாதியொழிப்பது எப்படி?' என்ற தலைப்பில் ஒரு கட்டுரைப் போட்டி நடாத்தியது. நான் விடுவேனா, அப்போட்டியில் எனக்கு இரண்டாமிடம் தந்து பொங்கல் விழாவில் சொற்பெருக்காற்ற கொழும்பு விவேகானந்தா கல்லூரிக்கு என்னை அழைத்து மதிப்பளித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாவில் என்னால் ஆற்றப்பட்ட பகுத்தறிவுக் கருத்துக்களை வீரகேசரி இதழ் ஆசிரியர் "ஹரன்" அவர்கள் செவிமடுத்துவிட்டு அடுத்த நாள் இதழில் எனது பேச்சுக்குப் பதில்போல **"கண்ணன் காட்டிய வழி"** என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் எழுதினாரென்றால் பாரேன். நான் விட்டேனா? அத்தலையங்கத்தில் கூறப்பட்டவற்றை மறுதலித்து ஒரு கடிதம் எழுதி "ஹரன்" அவர்களின் முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பினேன். அப்பேரறிஞர் வாளா விட்டுவிட்டார். இதுதான் அக்கால இதழ்களின் போக்கு.

**இனிய மகளே!**

இடையில் ஒன்று சொல்லவேண்டும். எனது புகைப்படம் ஒன்றில் நான் மானசீகக் குருவாக (ஏகலைவன் போல) அறிஞர் அண்ணாவின் படத்தினை என் மார்பில் தொங்கும் அந்தத் தங்கப்பதக்கத்தில் தொங்கவிட்டிருப்பதை நீயறிவாய். அண்ணா போல அல்ல அவரின் ஒரு சிஷ்யனாக ஆகவேண்டும். என்ற ஆசை இன்றும் இருந்து வருகிறது.

மேலும் கொழும்பு வாழ்வு பற்றி ஒரு நாவல் எழுதிப் பார்க்கவேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. இதற்கிடையில் "தெய்வம் சிரிக்கிறது", "அக்கா" என்ற இரு குறுங்கதைகள் எழுதி வைத்திருந்தேன். கொழும்பு வாழ்வை மையமாக வைத்து இருவேறு குணாம்சங்களையுடைய இரு பெண்களின் வாழ்க்கையை சித்தரிப்பதாக - அதாவது, **"இப்படித்தான் வாழவேண்டும்" "எப்படியும் வாழலாம"** என்கிற மனித நடத்தையை படம் பிடிப்பதாக அமைந்த அந்நாவல் **"மங்கை சீதா"** என்பதாகும்.

நாவலின் இரண்டு பகுதிகள் முடிந்தபோது வந்தது இடமாற்றம். தாயக மண்ணை மீண்டும் பண்படுத்தவோ என்னவோ வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அப்போதும் ஒரு பொதுவுடமைக் கொள்கையில் பற்றுறுதி கொண்டவனாகவே இருந்தேன். தோழர் பொன். கந்தையா எம்.ஏ. அவர்கள் உடுப்பிட்டி பாராளுமன்றத்துக்கு போட்டியிட்டபோது அவருக்கு ஆதரவாளனாகச் செயற்பட்டது அப்பெருமகனின் மனதில் நன்கு பிடித்திருந்தது. ஒருநாள் கொழும்பு நகரில் அவர் என்னைக் கண்டபோது "தம்பி கணபதிப்பிள்ளை ஊருக்கு வாவன். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைத் தரமான கல்லூரியாக்க விரும்புகிறேன். உன்னைப் போன்றவர்கள் தேவைப்படுகினம்" இப்படிக் கேட்டதும் நான் சொன்னேன், "ஊருக்கு மாற்றம் கேட்டு விண்ணப்பித்திருக்கிறேன். அவங்கள் கவனி யாங்களாம்" என்று, நாளைக்கே மந்திரி தகாவுடன் கதைத்து செய்விக்கிறேன் இப்படிக் கூறிச்சென்ற மூன்றாம் நாள்தான் அந்த மாற்றம் வந்தது. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு.

மிகச் சிறந்த அதிபர்களாக மக்களால் கருதப்பட்ட உயர்திரு.சபாரத்தினம் கணிதப்புலி (எம்.எஸ்.சி) எனக் கருதப்பட்ட திரு.இரத்தினசபாபதி ஆகிய இருவரின் கீழும் நான் கடமைபுரியக் கிடைத்தது. இவர்களது ஆதரவு எனது திறமைகளை மேலும் வளர்க்கவும் வெளிக்கொணரவும் பெரிதும் உதவியது.

உயர்வகுப்புக்களில் எனது ஆசிரியப்பணி கலகலப்பாக இருந்தது. ஆண்டாண்டு உயர் வகுப்புக்களில் நான் படிப்பித்த பாடங்களின் பெறுபேறுகள் பற்றி யாவரும் அறிவர். மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் மதிப்பு மிக்க ஓர் ஆசிரியனாகக் கருதப்பட்டேன். மாணவர்கள் என்னைத் தங்கள் உயர்வுக்குப் பாடுபடும் நண்பனாகக் கருதினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரும்பெரு மகளே!**

நெல்லியடிதான் எனது பலதுறை முயற்சிகளுக்கும் இடம்தந்தது. அம்முயற்சிகள் பற்றி அடுத்த திருமுகத்தில் பார்ப்பாயாக.

~ சுகணா ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுகம் ஐந்து

**பூவே,**

நான் ஊர் வந்ததும் பல்துறைகளிலும் பணிகள் காத்திருந்தன. அப்போது அண்ணாவுக்கு ஆறு, உனக்கு நான்கு மணி, பிறந்திருந்தாள். குடும்ப நலன்கருதி மீண்டும் மண்வெட்டி ஒரு கையிலும், சமூகநலனுக்காக பேனாவை மறு கையிலுமாக நடைபோடத் துவங்கினேன். சமூகப் பணிகளில் ஒன்றாக அல்வை இந்து வாலிப சங்கத்தில் வாராந்தம் ஒரு திருக்குறள் வகுப்பு நடத்தினோம். குறிப்பு: யாரும் ஏறெடுத்துப் பார்க்காத பழைய இந்து வாலிப சங்கக் கட்டிடத்தை மீளப் புனரமைத்து ஓர் படிப்பக மாகவும் நூல்நிலையமாகவும் மாற்றியமைத்த பெருமை எனதுஆத்ம நண்பன் சோமுவுக்கும், திரு.ஆ.கதிர்காமத்தம்பி, உபாத்தியாயர் திரு.ச.கணபதிப்பிள்ளை (சின்னத்தம்பி), திரு.பொன் அரியரத்தினம் அவர்களுடன் சுகணாவையும் சாரும்.

அடுத்து அல்வை வள்ளுவர் கலைமன்றம் ஒன்றினை உருவாக்கி ஆண்டாண்டு வைகாசித் திங்களில் திருவள்ளுவர்க்கு விழா எடுத்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. இவ்விழா நான் ஊரில் கடமையாற்றிய ஐந்து ஆறு ஆண்டுகள் தான்(1959-65) நடைபெற முடிந்தது விடிய விடிய முத்தமிழ் விழாவாக நடந்த இந்த விழாவுக்கு இந்திய இலங்கை அறிஞர்கள் கலந்துகொண்டு உரையாற்றியதும், இயல்-இசை-நாடக விழாவாகவும் மக்கள் மனதைக் கவர்ந்த நிகழ்வாகவும் விளங்கியது. நாட்டியங்கள் சிறந்த நட்டுவாங்க அறிஞர்களாலும் நாடகங்கள் இத்திருமுகங்கள் தரும் உனது அப்பனாலும் எழுதிப் பழக்கி அரங்கேற்றப் பட்டன. சுருங்கச் சொன்னால் இன்று குச்சுப்பிடி நடன நாட்டிகை அன்றைய செல்வி. விவேகானந்தன் ஆடிய முதல் அரங்கும் இதுவேயாகும். என்னால் எழுதப்பட்டு பழக்கி அரங்கேறிய நாடகங்கள் பற்றிப் பிறிதொரு இடத்தில் எழுதுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் கலைமன்ற நிகழ்வுகள் மக்களின் மனங்கவர்ந்தவனாக, அவர்களின் மனமுவந்த பங்களிப்புடன் நடந்து வந்தது.

ஊர் வந்த பின்னர் தாயக சுதந்திர போராட்டத்திலும் அடியேன் ஈடுபட வேண்டியிருந்தது. யாழ் கச்சேரியடியில் தந்தை செல்வா தலைமையில் நடந்த சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்ட போது "மானம் பெரிதா? சோறு பெரிதா மறத்தமிழா நீ சொல்லு" என்ற தலைப்பில் ஆயிரம் பாடல்ப்பிரசுரங்களை அச்சிட்டு வழங்கினேன். அவற்றில் ஒன்று மாதிரிக்காக எனது கோவையில் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றைவிட அண்ணா இல்லம் நோக்கி வரும் மாணவர்க்கும், ஆசிரிய அன்பர்களுக்கும், சமூகப்பணியாளர்களுக்கும் அவரவர் தரும் தலைப்புக்களில் கட்டுரை, வாழ்த்துப்பா, வரவேற்புரை, சொற்பொழிவு ஆகியன எழுதிக்கொடுப்பது எனது வாழ்வில் ஓர் அச்சமாகியே விட்டது. இவற்றைப் பெருமைக்காக நான் சொல்லவில்லை பல்கலைகழப் பட்டதாரிகள் டிப்ளோமாப் பட்டத்துக்காக இரண்டு ஆய்வுக் கட்டுரை எழுதி உதவிப் பட்டம் பெற துணை நின்றுள்ளேன்.

"சிந்திய சிலம்பு" "ஏகலைவன்" "தந்தேன் வரம்" "கிருஷ்ணன் தூது" "பழிக்குப்பழி" ஆகிய மாணவர்க்காகிய சிறிய நாடகங்களும் என்னால் எழுதுப்பட்டன, எழுதிக்கொடுக்கப்பட்டனவே இந்நாடகங்கள் என்கையில் நழுவிப்போய்விட்டன. நசிந்தும்-கீழிந்தும் போன சில பக்கங்களே உள்ளன. நான் இவற்றைப் பேணாமைக்குக் காரணம், எனது ஆக்கங்களை வாங்குபவர் படிக்கட்டுமே, நடிக்கட்டுமே என்ற ஆசைதான்.

பணத்தினைத் தான் வாங்குபவர்கள் தராது போயினும், எழுத்தை, நாடகத்தை வாங்கிப் போனவர்களும் போனவர்கள் தான். என்னிடம் சேமிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கோதை நூலகத்திலிருந்த நூல்களும் கேட்டவர்களுக்கு இல்லையென்னாது கொடுத்துக் கெட்டேனா? கெட்டேன். எஞ்சியிருந்த நூல்களை யாழ்நூலகத்திற்கும், பாரதிதாசனுக்கும் கொடுத்து அமைதி பெறுகின்றேன். ஏன் நான் எழுதிய முன்னூறு பக்கங்கள் கொண்ட “கம்பனும் பாரதியும்” என்ற இலக்கிய நூலை இங்கு தேடிப்பார்கிறேன் கிடைக்கவில்லையே. இதுதான் என் சுபாவம் ஆகிவிட்டது. மகளே, போகட்டும்.

நெல்லியடிக்கு வந்தபின்னர்தான் உன் அம்மா தவழ்ந்து விளையாடிய தாய்மண்ணைவிட்டு தற்போது குடியிருக்கும் இல்லத்தில் குடும்பசமேதராய்க் குடிபுகுந்தோம். இங்கேதான் இறுதிப்பிரசவம் கணேசன் பிறந்தான் மிக இடஞ்சலான இல்லாமை மிக்க நிலையில்-ஈடு-அடைவு-கைமாற்று என்று வாங்கி ஒரு சிறு குடிலையும் கிணறு ஒன்றினையும் உருவாக்கினோம். உன்னைப்பெற்றவன் அன்றிருந்து இன்றுவரை மகாலட்சுமி என்பார்களே அத்திருமகள் போல எமது குடிபுகுந்த இந்த வீடு விளங்குவதும், வருவோர், போவோர், உற்றார், உறவினர் எல்லார்க்கும் முக மலர்ந்து உபசாரம் செய்வதும் நாம் செய்த பாக்கியமே. எமது வாழ்வின் சுடர் விளக்கு உன் தாய். எனது சிறப்புக்களுக்கெல்லாம் அவளே காரணம். கதிராசி வாழ்க!

நிற்க, நான் ஊர் வந்த பின்னர் அரசியல் சார்ந்த செயற்பாடுகளிலும் நாட்டமுடையவனாய் இருந்தேன். படிக்கும் காலத்திலேயே தமிழன் சுதந்திரமாக வாழவேண்டுமானால் தாயகம் விடுதலை பெற்று சமதர்ம ஈழம் மலரவேண்டும் என்ற கருத்துடையவனாக இருந்தேன். ஏன் இன்றுகூட அப்படித்தானே. அறிஞர் அண்ணாவின் அரசியல் அணுகுமுறைகளால் கவரப்பட்டிருந்தபடியால் எமது வாழ்விடத்துக்கு“அண்ணா இல்லம்” என்ற பெயரிட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமை மகனே!

எனது எழுத்துக்களைப் பற்றி எழுதப் புகுந்த நான் அரசியல் காரணங்களால் எனது தொழிலை இழக்கவும், சில காலம் கைதியாகவும் ஆகவேண்டியிருந்ததையும் அனைவரும் அறியவேண்டும் என்பதற்காகவே. எம் உறவினர் ஒருவர் "அண்ணா இல்லம்" என்ற பெயரைச் சுட்டி என்னை அரசியல் பேசுபவன் எனக் கல்விக் கந்தோருக்குப் போட்ட மனு ஈற்றில் அவர் வாயடைபட வேண்டி வந்ததை மறந்துவிடமுடியாது. அந்த அன்பர் மட்டுமல்ல நம்மூரில் பலர் பணம் படைத்தவர் உட்பட என்மீது அழுக்காறு கொண்டு (எமது யதார்த்தம் அவர்களுக்கு வேம்பாக இருந்தமை) செய்யப்பட்ட முறைப்பாடுகளால் இரண்டு தடவை கைது செய்யப்பட்டிருந்தேன். இரண்டு மான நட்ட வழக்குகளை சந்தித்து இருக்கிறேன். உண்மைக்கு மாறானவை நீதிமன்றில் எப்படி எடுபடமுடியும்? அவை அனைத்தும் எனது செயற்பாடுகளை எவ்விதத்திலும் பாதிக்க முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில் என்னால் எழுதப்பட்ட கதைகள் வெளியிடப்பட்டிருந்தாலும், நம் ஊரவர் வாங்குவார்களா? படிப்பார்களா? என்னை கைதூக்கித்தான் விடுவார்களா? அதனால் எனது எழுத்துக்கள் அடிப்பெட்டியில் உறங்கிக் கிடந்தன.

சில பல ஈழத்து எழுத்தாளர்களை நான் அறிவேன். எழுத்தாற்றல் மட்டுங்கொண்டு அவர்கள் எழுத்தாளர் வரிசையில் வைக்கப்படவில்லை. அவர்களின் ஆக்கங்கள் தரமோ, தரமில்லையோ அவர்கள் சார்ந்த சமூகம் பேராதரவு கொடுத்து தூக்கிவிட்டிருக்கிறது. அப்படியான மக்கள் அல்லவே நம்மூரவர்!

நான் ஊரில் படிப்பித்த பத்து ஆண்டுகளிலும் எழுத்துத்துறையில் மட்டுமன்றி சொற்பொழிவு, நாடகம், கவிதை, அரசியல் சமூகத்துறைகளில் ஈடுபாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவனாயும் மேலும் மேலும் எனது அறிவுப் பசிக்கு இரை தேடுபவனாகவும் இருந்திருக்கிறேன். ஆசிரியனாகக் கடமையாற்றிக்கொண்டு வரைதல் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில சித்தியடைந்துள்ளேன். சைவ சித்தாந்தங்களைப் படிக்க அவாவி சைவப் புலவராகத் தேறியிருக்கிறேன். மேலும் பல்கலைக்கழகப் பட்டம் பெறவேண்டும் என்ற அபிலாசையினால் **G.A.Q** சித்தியடைந்து பட்டப் பரீட்சைக்குத் தோற்றி தமிழ், பொருளாதாரம் ஆகிய பாடங்களில் சித்தியும் பெற்றவன் உன் அப்பன். இடமாற்றமும் வயதும் தொடரமுடியாமல் போயிற்று.

இன்றைய திருமுகம் நீண்டுவிட்டது. தொடர்ந்து ஊரின் செயற்பாடுகளை அடுத்து எழுதுவேன்.

~ *சுகணா* ~

★★★★

★★★

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுகம் ஆறு

**எம் திருமகளே,**

பல்கலைக்கழகப் பட்டப் படிப்புப் பற்றி முன்பு குறிப்பிட்டிருந்தேன். நான் பல்கலைக்கழக வெளிவாரி மாணவனாக என்னைப் பதிந்துகொண்டு அதற்கான கல்வியைக் கற்பதற்காக வட்டுக்கோட்டையில் உள்ள பிரபலமான யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சென்று பயின்று வந்தேன்.

அதிபர்களுக்கு உதாரண புருஷராக விளங்கிய உயர்திரு.இரத்தினசபாபதி அவர்களின் ஆதரவு இருந்ததால் பி.பகல் இரண்டு மணிக்கே நான் யாழ் பஸ் பிடித்து அங்கிருந்து வட்டுக்கோட்டை பஸ் ஏறி தினமும் வகுப்புக்கு செல்லமுடிந்தது. அம்மா தருகின்ற சிற்றுண்டியை மதியம் உண்டுவிட்டு இரவு எட்டு, ஒன்பது மணியளவில் வீடுவந்து இரவு பசிதீரச் சாப்பிடுவேன். இச்சிறு நிகழ்வினை நான் குறிப்பிடுவது, வயதான நாற்பத்திரண்டிலும் அறிவினை மேலும் பெறவேண்டும் என்ற ஆர்வம், பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக. அப்போ நான் ஆறு பிள்ளைகளுக்குத் தந்தையும் கூட.

தற்போது யாழ் பல்கலைக்கழகப் பேரறிஞரும் உயர்பீடத் தமிழ் தலைவருமான திரு.சண்முகதாஸ் அவர்களிடம் தமிழினை விரிவாகப் படிக்க அங்கேதான் வழி பிறந்தது. **G.A.Q.** அதாவது, பொதுக்கலைத் தேர்வில் சித்திபெற்ற பின்னர் பட்டப்பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய-பேராதனை அல்லது கண்டிக்கு மாற மனங் கொண்டது.

இந்த காலகட்டத்தில்தான் என் இனிய மாணவர்களின் வேண்டுதலை நான் மறுக்கமுடியவில்லை. "சேர்! சேர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கிருக்கும் இலக்கிய அறிவை - அதன் சுவையை நாம் கேட்டால் மாத்திரம் போதாது. நாம் என்றும் வாசித்து இன்புறத் தக்கதாய் ஓர் இலக்கிய நூல் வெளியிடுங்கோ! நாமெல்லாம் வாங்குவோம். விற்றுத் தருவோம்" என்ற மாணவரின் கோரிக்கை என்னை இரவு இரவாக எழுதத் தூண்டியது. வாசித்து அறிஞர் பலருக்குக் காட்டினேன். **"சுகணா"** வெளியீடு. புதிய முறையில் மாணவர் மனம் கவரும் முறையில் எழுதி இருக்கிறாய்" என்று என்னைத் தூண்டினார்கள்.

சரி வெளியிடுவோம் "கம்பனும் பாரதியும்" என்ற நூலாக என்று மனம் ஒப்பியது. வெளியிடுதல் லேசான காரியமல்லவே. அதன் அத்திபாரமே பணந்தானே. மாதாந்த ஊதியம் வீட்டுக்கே போதாது. பணத்துக்கு என்ன செய்வது? அம்மாவிடம் என் ஆசையைக் கொட்டினேன். அவள்தானே மகாலட்சுமி. தன் தாலியை தொட்டுச் சிரித்தாள்! கலாபவன அச்சக நிறுவனர். திரு.வே.சிவக்கொழுந்து அவர்கள் பிரதியைப் படித்துப் பார்த்துவிட்டு, பிரசுரிக்கும் உரிமையை தம்மிடம் தந்தால் ரூபா மூவாயிரம் தருவதாகக் கூறவும் என் மனைவியின் விருப்பப்படி "கம்பனும் பாரதியும்" என்ற இலக்கிய விளக்கம் "சுகணா" என்ற புனை பெயருடன் சிறையிருந்த சீதையின் அட்டைப் படத்துடன் முந்நூறு பக்கங்கள் தாங்கி வெளிவந்தது. ஒன்று ரூபா மூன்றேதான்.

ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆதரவு கிடைத்தது. மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு, புத்தளம் எல்லாம் "கம்பனும் பாரதியும்" சென்றார்கள்! தினகரன், வீரகேசரி போன்ற நாளிதழ்கள் திறனாய்வு, விமர்சனம்கூட வெளியிட்டன. பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ் நூலகம் எல்லாவற்றிற்கும் பிரதிகள் அனுப்பப்பட்டன. தாலி! மீண்டது. அதுவே பெரிய ஆறுதலாக இருந்தது.
நீங்கள்தானே 'கம்பனும் பாரதியும்' ஆசிரியர் "சுகணா"? 'ஆம்"என்று புன்முறுவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கடை புத்தகத்தால் இலக்கிய பாடத்தில் எனக்கு டீ கிடைத்தது சேர்! இத்தகைய உரையாடலை அடிக்கடி கேட்கிறபோது மட்டும் எனக்கொரு ஆத்ம திருப்தி!

இதனால் அண்ணா இல்லமும், சுகணாவும் யார் வாயிலும் சரளமாக வருகிறது. மகளே, உனக்கும் உன் உடன் பிறந்தார்க்கும் மகிழ்ச்சிதானே.

கம்பனும் பாரதியையும் தொடர்ந்து மாணவரின் தமிழ்ப்பற்றையும், அறிவு வளர்ச்சியையும் கருதி ஒரு மாணவர் இதழ் வெளியிடவேண்டும் என்ற எனது விருப்பத்தினை அறிஞர் சிலர் கண்டு அவ்வழி செல்ல உதவினார்கள்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு"

இந்தத் திருள்ளுவரின் பொன்மொழியை அடிநாதமாகக் கொண்டு "கண்கள்" என்கின்ற முத்திங்கள் இதழ் ஒன்று வெளியிட முயன்றேன். என்னுடன் ஆசிரியர்களாய் இருந்த பண்டிதர், பட்டதாரிகள், அன்பர்கள், மாணவர்கள் ஆக்கங்களை வெளியிடுவதெனத் தீர்மானித்து அவர்களை அணுகினேன். கண்கள் இதழை தரமானதாக ஆக்கிய பெருமை அவர்களையே சாரும். அவர்களில் சிலரின் பெயர்களை நான் குறிப்பிட்டாகத்தான் வேண்டும். திரு.செல்லப்பா **B.A,** திரு.குகதாசன் **Msc** செல்வன் சிவலிங்கம், செல்வன் குனேந்திரன் புத்தளம் ஜனாப் கமீது இன்னும் பலர்.

அத்துடன் வெளிவந்த மூன்று இதழ்களிலும் ஆசிரியத் தலையங்கம், கேள்வி பதில் இவற்றுடன், "திருமணம் செய்வதெப்படி?" "வேரிற் பழுத்த பலா" "புதுச்சோறு" ஆகியன என்னாலேயே எழுதப்பட்டன. பொங்கல் இதழாக வெளிவந்த "கண்கள்" கவர்ச்சிமிக்க


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அட்டைப் படத்துடனும் பொங்கற் புதுப்பெண் படம் பின்புறமாய் மிக அழகாக வெளியிடப் பட்டது. ஒவ்வொரு இதழிலும் கீழ்க் காணும் சுலோகம் இருக்கும்.

"சாதி! சாதி! சாதி! - தம்பி
சாதிக்க வேண்டியதைச் சாதி
ஆண்சாதி பெண்சாதி இரண்டே சாதி"

இத்தகைய கண்களை நம்மூரவர்கள் வாங்கிப் பார்ப்பார்களா? இந்தக் கண்கள் இதழ் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியத் தமிழகத்திலும் தரமிக்கதாகக் கருதப்பட்டது. இவ்விதழில் வெளியான "காதல் செய்யும் விலங்கினம்" என்ற குகன் **Msc** யின் கட்டுரை, கலைஞர் கருணாநிதியின் "முத்தாரம்" என்ற சஞ்சிகையில் மறு பிரசுரம் செய்யப்பட்ட தென்றால் பாரேன். "கண்கள்" மாணவர் ஏட்டினை வீரகேசரி, தினகரன் எல்லாம் எழுதின. ஆனால் அந்தக் கண்கள் மூன்றுடன் மூடிக்கொள்ளும் என்று வாசகர்கள் எதிர்பாத்திருக்கமாட்டார்கள். திடீரென கடதாசி விலையேற்றத்தால் இருபத்தைந்து சதம் நூறு சதமாக விலைமாற்றம் செய்து மாணவரிடையே விற்க இயலாத காலம் ஆதலால் நாலாவது இதழ் வெளிவராமல் போயிற்று. இதற்கும் தாலி கேட்கலாமா? நான் இடம்மாறிப் பேராதனை சென்றதும் மற்றொரு காரணம்!

இவற்றிற்கிடையே ஒன்றைச் சொல்ல மறந்து விட்டேன். கண்கள் இதழில் என்னால் எழுதப்பட்ட "புதுச்சோறு என்ற கதையைப் படித்த அறிஞர், கவிஞருங்கூட என்னிடம் ஓடோடிவந்து, "மாஸ்ரர்" புதுச்சோறு நன்றாயிருக்கு. தரமான கதை" இன்னும் எழுதுங்கோ என்றார். அவர் வேறு யாருமல்ல "கவிஞர் செல்லையா" அவர்கள் தான். நானும் கதை எழுதக் கூடியவன் என்ற அங்கீகாரம் பலப்பல அறிஞர்கள், வாசகர்கள் வாயிலிருந்து மலர்வது எனக்கு ஒருவித ஆறுதல் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகனே,**

கண்கள் மூடியது எனக்கும் கவலைதான். அச்சகம் ஒன்றை நிறுவினால் என்ன என்ற ஆசையும் இருந்தது. ஆசை பணமாக மாறுமா? எனது பிள்ளைகள் நல்லாய் இருந்தால் பார்ப்போம். என்றிருந்தேன். இன்று வேகமாக காலம் நடைபோடுகிறது. எனது காலம் ஓடிக் கிழண்டி விட்டது. பிறப்பு இன்னம் இருக்கிறதுதானே? "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" இனி எப்படியோ? நெல்லியடியில் அந்த ஒன்பது ஆண்டுகளும் இப்படி இப்படிக் கழிந்துபோக, சாதாரண ஆசிரியனாக இருந்த என்னை அதிபர் பதவி ஒதியமலைக் காட்டுக்கு அழைத்தது.

~ *சுகனா* ~

*****
***
*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுகம் ஏழு

**எண்ணற்கு இனிய எம் மகளே!**

01.01.1968இலிருந்து நீர் ஐந்தாம்தரஅதிபராக ஒதியமலை அ.த.கலவன் பாடசாலைக்கு நியமனம் பெறுகின்றீர் என்ற கடிதம் வந்தது. ஆம் என்னை இறை எங்கோ அழைத்துச் செல்கிறார். ஒருவேளை மலைநாடான அந்தப் பேராதனைக்குத் தானோ என்று எண்ணிக் கொண்டேன்

ஒதியமலை மலை நாடல்ல. சற்று உயரமான பூமி அடர்ந்த காடு மண்டிய பிரதேசம். வழிநெடுக யானைகளின் அடிச்சுவடுகளும் அவற்றின் "லத்தி" குவியல்களும். திருகோணமலைக்குச் செல்லும் பஸ்ஸை மாலிசந்தியில் பிடித்தால் புளியங்குளச் சந்தியில் இறங்கலாம். அங்கிருந்து முல்லைத்தீவுப் பஸ்ஸில் ஏறினால் நெல் வயல்கள் சூழ்ந்த நெடுங்கேணியில் இறங்கலாம். அடுத்து நான்கு மைல் கால்நடையாக அந்தப் பயங்கரக் காட்டின் ஊடே மனங்களைக்க நடந்தால் வருவது ஒதியமலை! இந்தவழிப் பாதையிலே தான் "ஹென்ட்பாம்" "டொலர்பாம்" போன்ற ஆயிரம் ஏக்கர் பண்ணைகள். அதிபர் பதவியாச்சே, போனேன் மிகச்சிறிய பழைய கிராமந்தான் ஒதியமலை.

திங்கள் காலை அம்மா கட்டித்தரும் சோற்றுப் பொதியுடன் பயணம் ஆரம்பம். எப்படியோ மாலை மூன்று மணிக்கு பாடசாலை முடிவடையும் நேரம் சேர்ந்து விடுவேன். ஒதியமலை அக்கா ஒருத்தி உதவி ஆசிரியை. மீளவும் வெள்ளி காலை நடக்கத்துவங்கி மாலை சிலவேளை இரவு அண்ணா இல்லம் வந்துவிடுவேன். அப்போது அண்ணா அமுதன் நெல்லியடியில் மாணவன். நீ மகளிர் கல்லூரியில் படிக்கிறாய். கனிக்கு ஆறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசனுக்கு நாலு வயது. மலர் பூப்படையும் பருவம். இப்படிச் சில திங்கள் ஒதியமலை அதிபர் நான். இது என்ன சோதனையோ?

எமது சீவியப்பாடோ கஷ்டமயமானது. எமக்கு உதவக்கூடிய பணமுள்ளவர்கள் அப்போ இருக்கவில்லை. காணிகள் இருந்தும் அண்டங்காய்ச்சிகள். மண்வெட்டிக்கு ஓய்வு கிடைத்தமையும் பிள்ளைகளைச் செல்லமாக வளர்க்கமுடியாமைக்கு ஒரு காரணம். இந்த இடர்பாடுகள் நிறைந்த நேரத்தில் வவுனியா கல்விப் பணிப்பாளர் திடீரென ஒதியமலைக்கு வந்தார். எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயக்கொடி அவர்களின் சகலன் திரு.சந்திரசேகரம்தான் அவர்கள்.

"நீங்கள் தானே அதிபர்?"
"ஆம்"
"கணபதிப்பிள்ளை சுகணா?"
"ஆம்"
"இரத்தினசபாபதி நெல்லியடி அதிபர் தெரியுமோ?"
"தெரியும் அவரின் கீழ்த்தானே கடமையாற்றினேன்"
"அவர் உங்களைப் பற்றி நிரம்பச் சொல்லியிருக்கிறார்"
"ஓமந்தை மகாவித்தியாலயத்தில் உயர்வகுப்பில் தமிழ் கற்பிக்க உங்களை அங்கு மாற்றப் போகிறேன்"
"பெரிய உபகாரம்"

அந்த பெரியவர் காரில் ஏறிப்போய்விட்டார்.

ஒதியமலை வாழ்வு பற்றியும் என்னை கண்டிக்கு மாற்றும் படியும் ஒரு குரங்குக் குட்டியினை கொழும்பு சென்று தூது உரைக்கும்படியாக சில கவிதைகள் எழுதத் தொடங்கினேன். அதுதான் "சிறுகவித்தூது" என்று நான் உருப்படியாக எழுதிய கவிதை. வரணியில் அடைக்கலம் வைத்தபோது காணாமல் போய்விட்டதாம். போகட்டுமே. அந்தக் கல்விமான் ஓமந்தைக்கு என்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பினார். யானை அடிக்கும் பயப்பீதியும் நீங்கியது.

உயர்வகுப்புகளும், விடுதி வசதிகளும் சிறந்த பாட ஆசிரியர்களும் உள்ள வித்தியாலயமாக அது விளங்கியது. எனக்கோ ஆனையிலே ஏறின புளுகம்! இங்கே கடமையாற்றிய பொழுது அனைவரதும் அன்புக்கும் நான் ஆட்பட்டேன். எனது படிப்பித்தல் திறமையையும், எழுத்தாற்றலையும் பலரும் பாராட்டினர்.

அண்ணன் அமுதுவை என்னுடன் கூட்டி வந்து ஓமந்தையில் மாணவனாக்கினேன். தரமான கல்வியாளர் களிடம் அண்ணர் கற்கவேண்டும் என்பது என் விருப்பம். அங்கேதான் முதன்முதல் அண்ணாவுக்கு தமிழ் படிப்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒரு தந்தை மகற்காற்றும் கடமை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது. அண்ணாவுக்கு தூயகணிதம் விருப்பமான பாடம். ஆசிரியர்களும் தட்டிக் கொடுப்பவர்கள். அதனால் எம் மகன் மூன்று கணித பாடங்களிலும் சிறப்புச் சித்தி பெறமுடிந்தது. இது எனக்கு பெருமையாகத்தான் இருந்தது. அதுதான் ஹாட்லிக் கல்லூரியில் அதிபராக அப்போது வந்திருந்த அந்த “மற்ஸ்” புலி இரத்தினசபாபதியிடம் கணிதம் படிக்க அண்ணனால் முடிந்தது. ஹாட்லி மாணவனாகச் சேர்க்கப்பட்டார்.

இக்கால கட்டத்தில் ஓமந்தை ஊரில் நடந்த திருமண விழாக்கள், திறப்பு விழாக்கள் வரவேற்பு வைபவங்கள் யாவற்றிற்கும் கவிதை எழுதும் பணி சுகணாவுக்கே வழங்கப்பட்டிருந்தது. என்னால் எழுதப்பட்ட சில எனது கோவையில் இப்போதும் உள.

**மகனே!**

கற்கவேண்டும். கசடறக் கற்கவேண்டும். இன்னும் கற்கவேண்டும் என்ற அவா அந்த நாற்பத்தைந்து வயதிலும் தீரவில்லை. அதனால், நந்தன் பாடிய மாதிரி “சிதம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாமலிருப்பேனோ, நான் ஜென்மத்தை வீணாகக் கழிப்பேனோ"என்ற மாதிரி "பேராதனைக்கு நான் செல்வேனோ? பல்கலைப் பட்டம்தான் பெறுவேனோ" என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கையில் ஒருநாள், பேராதனை சிரேட்ட பாடசாலை அதிபராய் இருப்பவர் ஒருவர் என்னிடம் வந்து, "மாஸ்ரர்" பேராதனைக்குப் போக விருப்புகிறீர்களாம். இரண்டு பேரும் ஒத்து மாறுவமோ? என்று கேட்டார். எனது விருப்பக் கடிதத்தை அன்னாரிடம் கொடுத்தேன். பட்ட முன் பரீட்சையின் முதற் தேர்வில **(G.A.Q)** தேறிய சுகணா விரும்பியபடி பல்கலைக்கழக அடிவாரத்திலுள்ள பேராதனைச் சிரேஷ்ட பாடசாலை அதிபராகச் சென்றேன். என் செயலால் யாவதொன்றில்லை என்ற நம்பிக்கை என் மனதில் வலுப்பெற்றது.

~ *சுகணா* ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுகம் எட்டு

**எமது இதயக்கனி பூங்கோதை,**

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு பேராதனைப் பாடசாலை வாய்ப்பாக இருக்கும். அதிபராகப் பணிபுரிந்து கொண்டே பரீட்சைக்கு தயார் பண்ணலாம். விரிவுரையாளர்களின் குறிப்புக்களை மாணவர் மூலம் பெறலாம். இத்தகைய நம்பிக்கையால் மலையகத்து கம்பீரமாக விளங்கும் பல்கலைக் கழகத்தின் அடிவாரத்தில் அதிபர் கடமையை நான் செய்யத் துவங்கினேன்.

இப்பாடசாலை மலையகத் தமிழ் மாணவரையும் அப்பகுதி வாழ் இஸ்லாமிய மாணவர்களையும் ஆங்கில, தமிழ், சிங்கள ஆசிரியர்களையும் கொண்டிருந்தது. பல காலம் வரட்சியால் வாடிய பயிர்கள் மாமழை கண்டதும் துளிர்த்து தலைநிமிர்ந்து நிற்பது போல, எனது வரவை அப்பகுதி மக்கள் மகிழ்வுடன் வரவேற்றார்கள். பாடசாலைக்கு ஒரு நல்ல காலம் வந்துவிட்டது என்று அவர்கள் பேசிக்கொள்வது கேட்டு என் மனம் பூரித்தது.

நல்ல செல்வாக்கோடு, நல்ல பல அறிஞர்களின் ஆதரவோடு பட்டப்பரீட்சைக்கான ஆயத்தங்களைச் செய்து வந்தேன். உயர்வகுப்பு மாணவரும் சரி, பாலர் வகுப்புக் குழந்தைகளும் சரி கற்பிக்கும் ஆசிரியர்களுங்கூட அதிபரான என்னை மிகமிக நேசித்தார்கள். காரணத்தை நான் குறிப்பிட வேண்டியதில்லை. அப்பகுதிக் கல்வி அதிகாரியாக இருந்தவர் ஜனாப் எம்.எம்.சரீப் அவர்கள். இஸ்லாமியப் பெருமகனும் சிறந்த பண்பாட்டாளருமாவார். அவர் என்மீது அலாதியான பிரியம் வைத்திருந்தார். "சுகணா" என்ற புனை பெயர் பல்கலைக்கழகத்திலும், கண்டி விவேகானந்தாக் கல்லூரியிலும் சரளமாகப் பேசப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வை புரியும் விரிவுரையாளர்களும் எமது பாடசாலைக்கு அடிக்கடி வந்து பயிற்சி பெறுவார்கள்.

சொற்பொழிவுக்காக கண்டி விவேகானந்தா, கண்டி யோசப் கல்லூரி, கம்பளை முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியன என்னை அழைத்தன. இதற்கு நடுவில் பாடசாலைப் பெற்றார் ஆசிரிய சங்க வருடாந்த விழாவுக்காக நானே மாணவர்கள் துணையுடன் பல்துறையிலும் கருமம் ஆற்றவேண்டியிருந்தது. பேச்சு, நடனம், நாடகம் மும்மொழிகளிலும் இடம்பெறல் வேண்டும். தமிழ் சம்பந்தமான நிகழ்வுகளுக்கு நான் பொறுப்பேற்க வேண்டியிருந்தது.

ஆண்டவனே! பெயருக்கு ஒரு குழந்தை தா! இனிக் குழந்தை வேண்டாம் ஆண்டவனே! என்னும் வரங்கேட்கும் இரு குடும்பங்களின் கதையை "பத்தாவதும் பெண்" என்ற நாடகமாக நான் எழுதிப் பழக்கி அரங்கேற்றினேன். நடந்த அன்றைய பெற்றார் தின விழாவுக்கு மெருகூட்டிய நிகழ்ச்சி அதுவெனப் பேசிக்கொண்டார்கள் நல்ல வரவேற்பு.

அந்தத் தவணை லீவில் ஊருக்கு வரவேண்டி யிருந்தது. நான் ஊருக்குப் போவதை அறிந்த உயர்வகுப்பு மாணவர் பலர் தேயிலை, கோப்பி, சில பழவகைகளைக் கொண்டுவந்து தந்ததுடன் நில்லாமல் புகையிரதம் பேராதனைக்கு வருமட்டும் என்னோடு நின்று(இரவு எட்டு, ஒன்பது மணிவரை) நான் பெட்டியில் ஏறிக்கையசைக்கும்வரை அவர்களும் மகிழ்வுடன் கையசைத்து அனுப்பும் அந்தக் காட்சி என் மனதை விட்டு என்றும் நீங்காது.

**மகளே பூங்கோதை!**

நான் ஊருக்கு வருவதையெல்லாம் நீங்கள் ஆவலோடு பார்த்திருப்பீர்கள் என்றும் வெறும் கையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் செய்த பழக்கம் என்னிடம் இல்லை. நண்பர்கள், அன்பர்கள் யாராயிருந்தாலும் என்னுடன் ஹோட்டலுக்கு வந்தால் பொக்கற்றிலிருந்து காசு மேசையில் விழுவது எனது பணமாகத்தான் இருக்கும். அப்படியான ஒரு குணம் அண்ணா அமுதுவிடமும் சோதியண்ணாவிடமும் அமைந்துள்ளமை எமது பாரம்பரியமே.

நான் பேராதனையிலிருந்து ஊர் வந்ததை அறிந்த அறிவார்ந்த எனது நண்பர்கள் சும்மா விடுவார்களா? யாழ் நகர மண்டபத்தில் தி.மு.க. மாநில மகாநாட்டில் சொற்பொழிவு என்றும், இன்னும் சிலர் வெவ்வேறு நிறுவனங்களில் பேச்சு, பட்டிமன்றம் என்றும் என்னை அழைத்துப் போனார்கள். நான் கலந்துகொண்ட பல நிகழ்வுகளின் பிரசுரங்களில் சில கோப்பு இடப்பட்டுள்ளன. யாழ் நகர மண்டபத்தில் நிறைய மக்கள் கூட்டம் நாலாபுறமும் பொலிஸ் சூழ்ந்து நிற்க நான் பேச எடுத்துக் கொண்ட விடயம் (எனக்குத் தரப்பட்ட விடயம்) "பகுத்தறிவும் தீண்டாமை ஒழிப்பும்" மகாநாட்டின் முன்புறத்தில் பத்திரிகை நிருபர்களும் பின்பகுதியில் புலனாய்வுப் பிரிவினரும் ஏதோ குறிப்பெழுதிக் கொண்டிருந்தார்கள். எனது பேச்சில் அண்ணாவும், ஈ.வே. ராப் பெரியாரும் அறிஞர் இங்கர்சாலும் வந்தார்கள். மக்கள் மன மகிழ்வுடன் செவிமடுத்துக் கொண்டிருந்தமை எனது பேச்சின் சுருதியைக் கூட்டியிருந்தது. பலத்த ஆரவாரத்துக்கிடையிலும், கை தட்டலுக்கிடையிலும் பேச்சு முற்றுப்பெற்றது.

**மகளே,**

இவ்விடயத்தைச் சற்று விரிவாக நான் எழுதுவது, இந்நிகழ்வினால் எத்தகைய மனக்கஷ்டங்களை நான் அனுபவித்துக் கழித்துள்ளேன் என்பதை எம்மக்களும் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான். நான் முற்கூறிய பெற்றார் தினவிழா நிகழ்வுகள் "தீண்டாமை ஒழிப்பு" சொற்பொழிவின் பின் நான் பேராதனை மீண்ட பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தன என்பதைக் குறிப்பிட வேண்டும். பேராதனை வந்து குறிப்பிட்ட விழாவினை மக்கள் போற்றும்படியாக நடாத்தி, நான் காலையே சமைத்துவைத்த உணவினை(ஒரு காய்கறியும் சோறும்) உண்டு சற்றுக்கண்ணயர்ந்த வேளையில்,

"சார்" தந்தி ரெலிக்கிறாம்" என்ற தபால் சேவகனின் குரல்கேட்டு எழுந்தபோது அந்தத் தந்தி சொன்னது, நீர் இன்றிலிருந்து தற்காலிகமாக அதிபர் பதவியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுகின்றீர். என்பதாகும். எல்லாருக்கும் ஆச்சரியமாகவும், துயரமாகவும் இருந்தது. ஏதோ விழா நிகழ்வுகளால் யாரோ அள்ளி வைத்து விட்டார்கள் என்றும் பேசிக்கொண்டார்கள். துயர்தோய்ந்த முகத்துடன் மக்களும், மாணவரும், ஆசிரியர்களும் என்னை ஊருக்கு வழியனுப்பி வைத்தார்கள். எங்கும் என்றும் பாராட்டுதற்கான கல்விச் சேவை புரிந்த எனக்கு ஏன் இந்தக் கதி? இப்படி மனம் தளதளத்து. கொழும்புக்குச் சென்றேன் ஆராய்ந்த போது, அந்தத் "தீண்டாமை ஒழிப்பு" மகாநாட்டின் பரிசு என்பதறிந்து மனம் நிம்மதியடைந்தது.

இந்த ஐயன் இந்த சுகணா, இந்த அதிபர் ஊர் வந்தபோது வேலை நீங்கப்பட்டு ஊர்வந்தபோது அருமை மக்களாகிய நீங்களும் அம்மாவும் ஏன் இனசனத்தாரும் எத்தகைய துயரத்துடன் என்னைக் கண்கலங்கப் பார்த்து நின்றீர்கள் என் அழாத கண்களும் அழுதன.

என்மீது சுமத்தப்பட்ட அரசியல் குற்றச்சாட்டினை மறுத்துக்கூறி நான் அரசியல் பேசவில்லை என்று என்னால் வாதிடமுடியும் என்ற துணிவு எனக்கிருந்தது. நான்கு மாதங்கள் எனக்கு ஊதியம் கிடைக்கவில்லை. விசாரணை நடந்தது. அந்த இஸ்லாமியப் பெருமகன் விசாரணை முடிவில் அக்குற்றச்சாட்டு ஆதாரமற்ற வெறும் குற்றச்சாட்டு என்று தீர்ப்பளித்தபோது, கற்பிட்டியில் இஸ்லாமிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்க்கு நான்செய்த சேவையின் பலாபலன் இது என்று எண்ணினேன்.

மீண்டும் ரெலிக்கிறாம்! உடனடியாகப் பதவியை ஏற்கும்படி அன்று துயர் தோய்ந்த முகங்கள் எல்லாம் மகிழ்ந்த நிகழ்ச்சியை எப்படி வர்ணிப்பது. மீளவும் பேராதனை அதிபர் பதவியில் அமர்ந்து அந்த ஆண்டு நடந்த பட்டப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தவேளை, இனக்கலவர சூழல் தோன்றியிருந்தது. இந்தவேளையாய்ப் பார்த்து என்னைப் பாதுகாக்கவோ என்னவோ இடமாற்றக் கடிதம் ஒன்று வந்தது. மேலும் ஒரு பதவி உயர்வுடன் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரிக்கு செல்லுமாறு மனிதன் தன்னைவிட ஆள் இல்லை என்கிறான். ஆனால் ஏதோ ஒரு மகாசக்தி அவனை ஆட்டிப் படைக்கிறது. நம்புவோம்.

உடுப்பிட்டியிலும் நான் சோடை போகவில்லை, நல்ல மதிப்பு இருந்தது. **A.L** வகுப்புக்கு தமிழ், வரலாறு பாடங்கள் தரப்பட்டன. சிறப்பாகச் செய்தேன். அதன்பின் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், அதன்பின் எமது குல தெய்வத்தின் பெயர்தாங்கிய அம்பாள் வித்தியாலயம். தற்போதைய முதலாம்தர அதிபர் பதவிக்குச் சமனான அன்றைய மூன்றாம்தர அதிபர் பதவிக்கும் விண்ணப்பித் திருந்தேன். அதற்கான நேர்முகப் பரீட்சைக்காக கொழும்பு, நுவரேலியா கல்வி அலுவலகங்கட்குப் போய் வந்திருந்தேன். எங்கள் ஊரில் சில திங்கள்தான் பணியாற்ற முடிந்தது.

02.01.1973இலிருந்து மீளவும் பதவிஉயர்வு தந்து வல்வை சிவகுரு வித்தியாலயம் அனுப்பினார்கள். எங்கள் கரன் தவழ்ந்த மண்ணல்லவா. எனக்கோ மிக்க மகிழ்ச்சியான மாற்றம். அதிகம் எழுதி கை சாடையாக உளைகிறது. திருமுகம் ஒன்பதில் சந்திப்போம்.

~ சுகணா ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுகம் ஒன்பது

**எங்கள் உயிரனைய பெருமகளே,**
**பூங்கோதை,**

பத்தாவது திருமுகத்தோடு எனது விளம்பரங்களை முடித்துவிடலாம் என்று எண்ணுகிறேன்.

எங்கள் கரன் பிறந்து தவழ்ந்த மண் என்ற மகிழ்வோடு சிவகுருவில் அதிபராக நான் கடமை ஏற்றுக கொண்டேன். எனது இறுதி வல்லமையையும் பாவித்து கடைசிக் கால ஆசிரியப் பணியினை முடித்துவிடவேண்டும் என்ற அவாவுடன்தான் வல்வையில் பதவி ஏற்றேன். ஆயிரத்துக்கு அதிகமான மாணவர்களையும் முப்பது முப்பத்தைந்து ஆசிரியர்களையும், உயர்வகுப்புகளும், உடையதாய் சிவகுரு விளங்கியது. எனது திறமைகளை வெளிக்காட்டக்கூடிய பாடசாலையாகவும், கல்விக்காக எதனையும் அளிக்கவல்ல மக்கள் மனங்கவரும் பள்ளி யாகவும் எனக்கு வாய்த்தது. கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் மிக எழுச்சிமிக்க பணிகளை நான் செய்திடவும், அவ்வூர் மக்கள் என்னைத் தன்னவரில் ஒருவனாக மதித்திடவுமான பணிகளை நான் ஆற்றமுடிந்தது.

கல்விக்கு, கற்றவர்க்கு வல்வை மக்கள் தந்த ஆதரவு அலாதியானது. கடலோடித் திரவியம் தேடி வளமாக வாழும் மக்கள் அல்லவா அவர்கள்? தாமாகவே முன்வந்து கல்விக்காக அன்பளிப்புகளை அள்ளித் தருபவர்கள். வல்வை நகரிலே சிதம்பராக் கல்லூரி இருந்தபோதும் தம் மக்களை சிவகுருவில் சேர்த்திடவே விரும்புபவர்கள். நல்ல தரமான கல்வியினை, நல்ல பரீட்சைப் பெறுபேறுகளை நாம் பெற்றதற்கு, தரமிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களும், எதனையும் சந்திக்கவல்ல பெற்றாரும் எனக்குக் கிடைத்தமை பெரும் பேறெனவே நான் கருதினேன். சுகணா என்ற என் புனை பெயர் வல்வை நாவில் சரளமாகப் புழங்கியது.

அங்கு ஆண்டாண்டு எடுக்கும் பெற்றார் தினவிழாவில் எனது பங்கு கணிசமானது. பேச்சு, இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளில் எம்முடைய பாடசாலை முன்னணியில் நிற்கும். இசை, நடனம், ஓவியம், உடற்பயிற்சி, ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியப் பெருமக்களின் பங்களிப்பை நான் இன்றும் நினைவு கூருகின்றேன்.

வல்வை சிவகுரு வித்தியாலய அறுபதாம் ஆண்டு நிறைவும் எனது காலத்தில் வந்தது. பவளவிழாவுக்காக திறந்த வெளி அரங்கு ஒன்று கட்டப்பட்டது. அது இன்றும் நாடக அரங்காக இருந்து வருகிறது. எழிலார்ந்த பவளவிழா மலர் ஒன்றும் வெளியிட்டோம். அந்த விழா நிகழ்வுகளில் வில்லுப்பாட்டு, "தந்தேன் வரம்" என்ற நாட்டிய நாடகம், கட்டுரைகள் சில என்னால் எழுதப்பட்டன. அந்த மலரில் ஒன்று இன்றும் என்னிடமுள்ளது.

சிவகுருவின் எழுச்சி கண்டு பொறுக்காத அதிகார உள்ளங்களால் உந்தப்பட்டு நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபராக அனுப்பப்பட்டேன். ஐம்பத்தைந்து வயது அப்போ எனக்கு. உணவுப் பொதியுடன் கால்நடையாக மாலிசந்தி சென்று, பேருந்தேறி மந்திகையில் இறங்கி நாகர்கோயில் பேருந்துக்கு காத்துநின்று அதன்மூலமாக நாகர் கோவில் சந்தியில் இறங்கி மீளவும் கால்நடையாக கடற்கரை நோக்கி நடந்தால் மகாவித்தியாலயம் வரும். நாளாந்தம் எனது போக்கும் வரவும் இப்படியே மாலை ஐந்து, ஆறு மணிவரை வீடுவந்துவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூவே,**

உங்களப்பன் இன்றுவரை தனக்கு ஏற்பட்ட இடர்களை, வசதியீனங்களை நீக்க மேலும் படித்துவிட்டு படிப்பிக்க, தொழில் புரியத் தகுதியுள்ள தன் மக்களாகிய உங்களுக்குத் தொழில் தேடுவதற்காக யாரிடமும் போனதும் இல்லை, கேட்பதும் கிடையாது. அக்கால கட்டங்களில் அரசியல்வாதிகளாக பாராளுமன்றத்திற்குச் சென்றவர்களுக்கெல்லாம், எனது உயிரையும் மதியாது நான் உதவிகள் செய்தபோதும் எங்கள் வீட்டிலே தங்கியிருந்து தேர்வில் வெற்றி பெற்றவர்களிடமிருந்து என்றும் நான் எந்த உதவிகளையும் செய்யும்படி கேட்டதில்லை. இதுவே இன்றும் எனது வாழ்வு நெறியாய் உள்ளது.

அண்ணா அமுதுவும், கனி, மணியும் தராதரப் பத்திரங்கள் இருந்தும் என்னோடு தோட்டத்தில் வேலை செய்தது உனக்கு நினைவிருக்கும். படித்த என் மகனும் நானும் நீங்களும் திருவிலந்தையில் மிளகாய் நட்டு வந்த வருமானத்தில்தானே மூன்று அறைக்கடைக் கட்டடம் உருவானது. இவற்றை விரிவாக நான் ஏன் எழுதுகிறேன் என்றால், "சுகணா" எப்படியும் வாழலாம் என்ற கொள்கை உடையவனல்லன் என்பதை வாசிப்பவர் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே.

**ஆசைப்பூவே,**

நான் எங்கெங்கெல்லாம் ஆசிரியப்பணி புரிந்தேனோ அங்கெல்லாம் பெற்றார்களாலும் மாணவர்களாலும் காலம் கடந்தும் மதிக்கப்படுகின்ற சேவையை ஆற்றியுள்ளேன் என்ற திருப்தி எனக்குண்டு. ஏதோ காரணங்கண்டு என்னை நாகர்கோவிலிலிருந்து மாற்றப் போகிறார்கள் என்று அறிந்து பெற்றார் சிலர் எம் வீடுவந்து, "சார் உங்களுக்கு என்ன குறை? போக்கு வரவு, மதியச் சாப்பாடு எல்லாம் நாம் பார்த்துக் கொள்கிறோம். தயவுசெய்து மாறிப்போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாதீர்கள். எம்பிள்ளைகளின் கல்வி மீளவும் பாழ் பட்டுப்போம்" என்று பரிந்து கேட்டதை நீங்கள் அறிவீர்கள்.

நானாக மாற்றம் கேட்கப் போவதில்லை என்று நான் அவர்களைச் சமாதானம் பண்ணினேன். என்றாலும் அரசியல் காய் உருட்டலாய் புலோலி அமெரிக்கன்மிஷன் பாடசாலைக்கு மாற்றம் வந்தது. அதுவே எனது சேவையின் கடைசி மாற்றமாக அமைந்தது. உயர்வகுப்புக்கள் உள்ள இந்தப் பாடசாலையிலும் விழாக்கள் ஆண்டாண்டு நடாத்தப்பெற்றன. பல்வேறு சாகியத்தாரின்பிள்ளைகள் படிக்கின்ற பாடசாலை அது. சமதர்மக் கருத்துடைய எனது சேவை அனைவராலும் பாராட்டப்பட்டது. இங்கே, "ஏகலைவன்", "சிந்திய சிலம்பு", கிருஷ்ணன் தூது" போன்ற நாடகங்களை எழுதி தயாரித்து வழங்கியுள்ளளேன்.

இங்கேயும் ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் என் சேவைக்கு பெரு மதிப்பு அளித்தார்கள். எனது மாணவர்கள் என்க்குப் பரிசாக அளித்த மோதிரந்தான் நான் அணிந்து இருக்கும் அந்த மோதிரம் **PULOLY M.M.V** என எழுதப்பட்ட அந்த மோதிரம் மாணவரின் வேண்டுகோட்படி என் வெறுங்கையை அலங்கரித்துக்கொண்டிருக்கிறது. ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்திநாலாம் ஆண்டு ஆவணித்திங்கள் இருபத்தி நாலாம் திகதி இளைப்பாறினேன். அப்போ எனக்கு அறுபது நிறைந்தது. (24.08.1924). எனது இளைப்பாறலுடன் எனது எழுத்தாற்றலும், சொல்லாற்றலும் மெல்ல மெல்ல இளைப்பாற விரும்புகின்றன.

எம் இனியவளே!

பத்தாவது திருமுகத்துடன் என் உளறல்களை, பிதற்றல்களை முடித்துக்கொள்வேன். பத்தாவது இதுவரை நான் எழுதிய ஒன்பதுகளின் சுருக்கமாக இருக்கும்.

~ *சுகணா* ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுகம் பத்து

## மகளே எங்கள் பூவே,

இதுவரை நான் ஆசிரியனாய்ப் பயிற்சி பெற்று வெளியேறிய பின்னர் எழுத்துத் துறையிலும் சொற்பொழிவு நிகழ்வுகளிலும் செய்தன சிலவற்றை எழுதியுள்ளேன்.

நான் ஒரு சாதாரண மனிதாபிமானியாக இருந்து அரசியல் மற்றும் சமூகத்துறைகளில் பங்குபற்றிய சில விடயங்களை எழுதுவதென்றால் இதனைப்போல பப்பத்து திருமுகங்கள் எழுதவேண்டியிருக்கும். எனினும் அவற்றில் சிலவற்றை நான் இப்பந்தியில் குறிப்பிட்டாக வேண்டும்.

எங்கள் குலதெய்வமாய் அல்வையில் வீற்றிருக்கும் முத்துமாரி அம்மன் ஆலயம் யாவரும் சுதந்திரமாய் வழிபாடாற்றும், பகிரங்க நம்பிக்கைச் சொத்தாகும். நம் முன்னோர் பரந்த மனோ பக்குவத்துடன் செய்த கைங்கரியம் இது. ஆலயத்தின் வரவு செலவுகள் ஆண்டாண்டு மக்கள் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது விதி. ஆனால் பலவாண்டுகளாக வரவு செலவுகளை மக்கள் அறியமுடியாதபடி சர்வாதிகாரப் போக்குடன் தாம் விரும்பியபடி நடந்து வந்த நிர்வாகத்தைக் கண்டித்து நான் சில கண்டனப் பிரசுரங்களை வெளியிட்டேன். 1950-1974 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சுவையான, காரமான அப்பிரசுரங்கள் எனது கோவைக் கட்டுக்குள் உள்ளன. அவை சார்பாக இரண்டு தடவைகள் மானநட்ட வழக்குப் போட்டுப் பார்த்தும் சுகணாவின் எழுதுகோலை முறிக்க நிர்வாகத்தால் முடியவில்லை.

"சுகணா" மிகமிக எளியவன். சாதாரணன். அவன் ஓர் அரசியல்வாதியாக இருந்ததில்லை. ஆனால் சுதந்திர வேட்கையுடைய ஆதரவாளனாக இருந்திருக்கிறான். இன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படித்தான். அப்படியிருந்தும் என்மீது அரச விசாரணைகளும், தொழில் இழப்பு வரவல்ல குற்றங்களும் சுமத்தப்பட்டன. நான் நான்கு மாதங்கள் வரை பேராதனையில் அதிபர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையை அறிவீர்கள்.

மேலும் நானும் வேலுமயிலத்தானும்(மருத்துவர்) சில நாட்கள் பலாலியில் கைதி அந்தஸ்த்துப் பெற்றிருந்தமை அனைவர்க்கும் தெரியும். ஆலயப் பிரவேசத்துக்கு இந்தச் சுகணாதான் காரணமென்று பிரசாரம் செய்து என்னைச் சுட்டுக்கொல்ல முயன்றவர்களும் உண்டு. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலின்போது நடந்த முறைகேடுகளைக் கண்டித்து நான் செய்ததென்ற புரட்சிகர நடவடிக்கையிலும் பொலீசாரால் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டேன். இப்படிப் பலப்பல.

அவை கிடக்க,

நீண்ட நெடும் உறக்கத்தில் கிடக்கும் எனது எழுத்து முயற்சிகளைச் சுருக்கி அட்டவணை போல் தருகிறேன். கீழ்காணும் அனைத்தும் எனது சொந்த ஆக்கங்களே.

**வெளியீடுகள்:**

(அ) "கம்பனும்", "பாரதியும்"
(இலக்கிய விளக்கம்)

(ஆ) "கண்கள்"
(மாணவர் முத்திங்கள் இதழ்)
(பூங்கோதை நூலக வெளியீடாக)

(இ) "முத்துமாரியம்மன் ஊஞ்சல்"

(ஈ) "திருக்குறள் 133"

(உ) "திருக்குறள் முத்துச்சரம்"

(ஊ) "திருவாசகத் தேன்"

இவை நான்கும் கையடக்கமான சிறிய பதிப்புக்கள். இவைகளைத் தவிர பற்பல வரவேற்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கள், வாழ்த்துப்பாக்கள், கண்ணீர் அஞ்சலிகள் போன்ற பாடல்கள்.

**நாடகங்கள்:**

(அ) "கண்ணகி சிலை தந்த கதை"
(ஆ) "மாதவி பெற்ற மாணிக்கம்"
(இ) "தமயந்தி"
இவை முழு இரவு நாடகங்கள்
(ஈ) "பழிக்குப்பழி"
(உ) "சிந்திய சிலம்பு"
(ஊ) "ஏகலைவன்"
(எ) "விக்கிரமன்"
(ஏ) "கருணாகரப் பரணி"
(ஐ) "ஒரு குடும்பப் பிரிவு" (தமிழ் சிங்கள அரசு)
இவை முன்னிரவு நாடகங்கள் (இரண்டு மணித்தியால நாடகங்கள்) நகைச்சுவை நாடகங்களும்.

**நாட்டிய நாடகம்:**

(அ) "தந்தேன் வரம்" (இராமாயணம்)

**வில்லுப்பாட்டு:**

(அ) "நவராத்திரி"
(ஆ) "சோதனை மேல் சோதனை" (நாற்பது கவிதைகள்)

**குறுங்கதைகள் (சிறுகதைகள்)**

(அ) "தாலி" (உயிர்த் தியாகம்)
(ஆ) "அக்கா" (சகோதர பாசம்)
(இ) "தெய்வம் சிரிக்கிறது" (மதுமயக்கம்)
(ஈ) "புதுச்சோறு" (சாதி பேதம்) - கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) வேரிற் பழுத்த பலா "விதவையின் உள்ளம்" - கண்கள்

(ஊ) "செங்கடல் மீன்" (மனச்சாட்சி)

**நெடுங்கதைகள்: (நாவல்)**

ஒன்றே ஒன்றுதான்

"மங்கை சீதா" (கொழும்பு வாழ்க்கை)

**கட்டுரைகள்: பலப்பல**

(அ) "அணுசக்தியின் பயன்" (தங்கப் பதக்கம் பெற்றது)

(ஆ) "சாதியொழிப்பதெப்படி?" (அகில இலங்கையில் இரண்டாம் இடம்)

ஏனைய பல கட்டுரைகள் அவ்வப்போது எழுதிக் கொடுக்கப்பட்டனவற்றின் சில பிரதிகள் எனது கட்டுக்குள் இன்றும் இருக்கின்றன.

இவற்றைவிட எமது குடும்ப சமாசாரங்களையும் எழுதி வைத்திருக்கிறேன். அவற்றின் தலைப்புக்கள் சில.

(அ) "வாழ்வுச் சக்கரம்" (எங்கள் கதை)

(ஆ) "நான் கைதியான கதை"

(இ) "இப்படியும் ஒரு திருமணம்" - கணேசன் கதை-

(ஈ) "தமிழழகன் தொட்டில் பருவம்"

இவையெல்லாம்

"கண்ணே! உறங்கு தாலேலோ" என நான் தாலாட்ட அவை நன்கு உறங்குகின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும்,

எனது எழுத்தாற்றலை நம்மூரவர் அறியாமல் இருப்பதற்கான காரணங்களை முன் திருமுகங்களில் விபரித்துள்ளேன்.

எங்கள் இனிய மகளே,

இந்தப் பத்துத் திருமுகங்களையும் ஒவ்வொன்றாக விஜிதாவிடம் கொடுத்து தட்டச்சுப் பதித்து அனுப்புவேன். எனது கிறுதா எழுத்து விளங்காமல் இருக்கும் என்பதால் இவற்றை நீ படித்துப் பார்த்த பின்னர் உன் உடன் பிறப்புக்களுக்கும் படிக்கக் கொடுத்து திரும்ப வாங்கிப் பத்திரமாக அடிப்பெட்டியில் வைப்பாயாக.

மனிதன் இறந்தபின் அவனுக்கு அமரர் பதவி வேண்டிச் செய்யும் சடங்குகளில் எனக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை, அவன் பிறந்த அவன் மறைந்த நாட்களை ஆண்டு தோறும் மரபு ரீதியாகப் பேணுவது, நினைவு கூர்வதில் தவறேதும் இல்லை என்பது என் கருத்து. ஆகவே எனது பிள்ளைகள் அப்படி என்னை நினைவு கூர்தல் வேண்டில் அந்நாளில் இப்பத்துத் திருமுகங்க்ளையும் ஒன்றிணைத்து (கிட்டத்தட்ட முப்பது பக்கங்கள் வரும்) பிரசுரம் செய்து இலவசமாக ஊரவர் உற்றார், அன்பர்கள் அறிஞர்கள் என்றின்னோருக்கு வழங்குவது எனது ஆன்மாவுக்கு நிம்மதி தருவதொன்றாயிருக்கும்.

இதோ,

என் வாழ்வின் இலக்கியமாகத் திகழ்ந்த புறநானூறுக் கவிதைகளில் ஒன்று,

"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதென
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சி
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி அனையராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

~ புறநானூறு ~

பொருள்:-இவ்வுலகம் என்றும் உள்ளது. எங்கள் மக்கள் தேவாமிர்தம் தமக்குக் கிடைத்தால் கூட அதனை தனியாக உண்ணார்கள். (பகுத்துண்பார்கள்) பிறரிடம் அன்புடைய வராய் இருப்பார்கள். சோம்பியிருக்கமாட்டார்கள். பிறர் எதனைச் செய்யப்பயப்படுவார்களோ அதற்கு தாமும் பயப்படுவார்கள். புகழக்கூடிய காரியங்களுக்காக தமது உயிரையும் கொடுத்து தியாகிகளாவர். பழிவரும் காரியங்களை உலகத் தனைத்தையும் அவர்களுக்கு தருவதென்றாலும் செய்வதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். உறக்கமில்லா உழைப்பாளிகள் இவர்கள். இத்தகைய மாண்புகளை கடைப்பிடித்து தமக்காக மட்டும் வாழாமல் பிறர்க்காக வாழ்வார்கள்! இதுதான் மனிதரின் உண்மை யான வாழ்வாகும்.

~ புறநானூறு ~

இதுபோன்ற தமிழ்ப் பண்பாட்டினைக் கூறும் கவிதைகள் தான் எப்படியும் வாழலாம் என்று எண்ணாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்பை எனக்குத் தந்தன.

~ சுகணா ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமுத விழாக்காணும் மூதறிஞர் சுகணாவின் கட்டுரைகள்:

மூதறிஞர் சு.கணபதிப்பிள்ளை அவர்கள் ஒரு சிறந்த தமிழ் போதிக்கும் ஆசிரியராக இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் பலதரப்பட்ட பாடசாலைகளில் சேவையாற்றியவர் சேவையால் உயர்ந்து அதிபராக விளங்கியதுடன் பட்டபடிப் பினையும் ஒருசேரக்கைக் கொண்டவர். இதனால் அவர் மிகவும் பற்றுக்கொண்ட தமிழ்மொழிப் போதனை யில் ஏற்பட்டக்கூடிய இடர்பாடுகளை நன்கு ஆராய்ந்து தெரிந்து கொண்டவர். அதனாலே அவரிடம் குடிகொண்டிருந்த தமிழ் மோகம் மாணவர்களுக்கு அறிவைப் புகட்டும் ஊடகமாகப் பல கட்டுரைகளை வெளியிட்டார். இது தொடர்பாக **"கண்கள்"** என்ற சிறு சஞ்சிகையினையும், பல்வேறு கட்டுரைகளையும் மஞ்சரிகளாக வெளியீட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். திருவள்ளுவரும், கம்பனும் அவருக்குக் கைவந்தவர்கள். அதேபோல பாரதியும் அண்ணாவும் கருத்துக்குரியவர்கள். பல்வேறு கட்டுரைப் போட்டிகளிலே பங்குபற்றி தங்கப்பதக்கம் வரை பெற்றமை அவருடைய சாதனைகள். இத்தகைய சிறப்புக் குரியவரின் அமுத விழா மலரில் அவருடைய ஆக்கத்திறன் மிக்க கட்டுரை கள்இடம்பெறுவது முக்கிய மானதாகும்.




**பொ.சதானந்தன்**
**மலர்க்குழுவின் சார்பில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதீ ஒழிப்பது எப்படி?

(கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளின் முன்னர் கொழும்புப் பகுத்தறிவுச்சங்கம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய கட்டுரைப் போட்டியில் என்னால் எழுதப்பட்டு இரண்டாவது பரிசுபெற்ற கட்டுரை மீளப்பிரதி பண்ணப்படுகிறது)(2003)சு.க.

**"சாதுர் வர்ணயம் மாயஸ் குஷ்டம்"**

**-பகவத்கீதை-**

இதன் பொருள்: நான்கு வர்ணங்களும் என்னால் உண்டாக்கப்பட்டவை.

**"ஏக மேவது சூத்திரஸ் யப்ரபு கர்மஸ் மாதிடத்"**

**-மனுதர்ம சாஸ்திரம்-**

இதன்பொருள்: பொறாமை இன்றி மூன்று வர்ணத்தாருக்கும் பணிவிடை செய்வதே சூத்திரனுக்கு தொழில் என்று கடவுள் கட்டளையிட்டிருக்கிறார்.

**"சூத்திரஸ்யது ஸனரும் ஸிதம்"**

இதன் கருத்து: காதில் விழும் பொழுதே அருவருப்பை உண்டுபண்ணத்தக்க பெயர்தான் சூத்திரனுக்கு இடவேண்டும்.

**"ந சூத்ராய மதிம்தத்தியாத்"**

இது சூத்திரனுக்குப் பகுத்தறிவு உண்டாகும்படி யாதும் செய்யலாகாது. (கல்வி முதலியன) இப்படி இப்படி எத்தனையோ சங்கதிகளை நான்கு வர்ணங்களுக்கும் உரியதாக கீதை, மனுதர்ம சாத்திரம் போன்றவை எடுத்துரைக்கின்றன. நான்காவது வர்ணமாக கருதப்படும் சூத்திரனைப்பற்றிச் சொல்லும் போதும் நான்கு வர்ணங்களின் திருமணம் பற்றிக் கூறும் போதும் சூத்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போன் மிகமிக தீண்டப்படாத சாதியென்று கூறிக் கொள்கின்றன. உதாரணத்திற்காக பிராமணன் ஏனைய இருவர்ணத்தாரில் இருந்தும் பெண்கொள்ளலாம். ஏன் சூத்திரப் பெண்ணையும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் சூத்திரன் ஒருவன் பிராமணப் பெண்ணை மனையாள் ஆக்கினால் அவனது இன்ன உறுப்புக்களை அகற்றி விடவேண்டும். அநாகரிகமான மனிதத்துவத்திற்கே ஏற்கப்படாத தண்டனைப் படலங்கள் நிறைந்தது தான் மனு-ஸ்மிருதிகள்.

நிற்க,

நோய் எதுவென்று கண்டு நோய்க்கான காரணங்களை அறிந்து, எவ்வித மருத்துவம் சிறந்தது? பயனளிக்கவல்லது என்பதைத் தீர்மானிக்கும் வைத்தியன் போல சாதி ஒழிப்புப் பணியில் ஈடுபடுபவர்கள் அத்தீண்டாத நோய் பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

உலக வரலாற்றினை ஊன்றிப் படித்தால் ஒரு பெரிய உண்மையைக் கண்டுகொள்ள முடியும். இந்தியா இலங்கை போன்ற தென்ஆசிய நாடுகளைத் தவிர ஏனைய உலக மக்களிடையே வர்க்கவேறுபாடுகள் இருந்தனவே தவிர இந்தக் கேடுகெட்ட சாதிப் பிரிவுகள் இருந்திருக்க வில்லை. அரசன், ஆண்டி, பிரபு, ஏழை என்கின்ற வல்லமை வேறுபாட்டினாலும், பொருள் வேறுபாட்டினாலும் பிரிபட்டிருந்தனவே தவிர, பிறப்பு நோக்கி, ஆசாரம் நோக்கி தீண்டப் படக்கூடாத பண்டம் போல, தொடக்கூடாத நோய் போல, நாயினும் கேவலமாய் கருதப்பட்டு மக்கள் ஒடுக்கப்பட்டு வாழவில்லை மேல் நாடுகளிலே. இப்படியான வேறுபாடுகள், கருத்துமாறுபாடுகள் இந்தியாவிலும், இலங்கையிலும் ஏற்பட்டிருப்பதுதான் ஏன்? சாதிமுறை இந்நாடுகளில் வேரூன்றியிருப்பதற்குரிய காரணம்தான் என்ன? கிறிஸ்தவ மதம் பரவியிருக்கும் நாடுகளிலே, இஸ்லாம் மதக்கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிலே புத்தரின் புனித போதனை வாழ்வின் இலட்சிய மாகக் கொண்ட நாடுகளிலே (பர்மா, சீனா, யப்பான்) சாதிப்பாகுபாடுகள் இல்லையே.

எங்கெல்லாம் இந்துமதம் வாழ்கிறதோ அங் கெல்லாம் சாதி உணர்வு கொடிகட்டிப் பறக்கிறது. சாதிப் பிரிவினைக்கும் இந்து மதத்திற்கும் பிரிக்கவொண்ணாத ஒருதன்மை, ஒருமைப்பாடு இருக்கிறது. சாதிச் சாக்கடை யில் உயிர் வாழும் ஒருமதம் இந்துமதமென்றால் மிகை யாகாது. இதனை இந்த மதத்தைச் சேர்ந்த அனைவரும் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். ஆரிய புத்தி சீவிகளால் அக்காலத்தில் எழுதிவைக்கப் பெற்ற வடமொழி நூல்கள் மனுதர்ம சாத்திரம், வருணாச் சிரம தர்மம் போன்றவை எல்லாம் இந்தச் சாதிக் குட்டைகளில் ஊறிய மட்டைகளே.

"இந்து சமயத்தில் சாதியமைப்புக்கு இடமில்லை. இவையெல்லாம் இடையிட்டு வந்த கட்டுக்கதை" என்று கூறுபவர்களை நாம் மன்னிக்கலாம். எனினும், கோயில் அமைப்பு முறைகள், கிரியைமுறைகளில் சாதியமைப்பு புரையோடியிருப்பதை ஆய்வாளர்கள் அறிவார்கள். எல்லாம் அந்த ஆண்டவன் செயல், அவன் விருப்பு, வெறுப்பு அற்றவன் அருளொழுகும் கண்ணன், அருள்முக வரதன், ஏழை பங்காளன். எல்லாம் தானாகி தானே எல்லாமாகியிருக்கும் இறைவன், இந்த முட்டாள்தனமான பகுத்தறிவுக்கு முரணான சாதியமைப்பை, வேதங்களிலோ, இதிகாசங்களிலோ, சாஸ்திரங்களிலோ உட்புகுத்தியிருப்பார் கடவுள் என்ற கற்பனையை எந்த ஆய்வறிஞனும் ஒப்புக்கொள்ள மாட்டான். சாதிக் கருத்து கடவுளின் அளவற்ற அன்புக்கு ஆற்றலுக்குக் களங்கம் கற்பிப்பதாய் முடியும்.

இந்த சாதிக் கட்டுக்கதைகள் தம்மை மேலானவர் களாகக் காட்டிய பிரமணோத்தமர்களின் கைங்கரியமே யன்றி வேறில்லை. இவை சமுதாயத்தை ஏமாற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைப்புத் தேட வந்த, சுருங்கக் கூறின் ஆரியரின் ஆக்கமே.

இவற்றை எல்லாம் ஆய்ந்தறிந்தால் சாதி இறைவனின் சிருஷ்டிப்பு என்ற மாயையிலிருந்து நாம் தெளிவு பெறுதல் வேண்டும். நாம் தெளிவு பெற்றால் சாதிச் சாஸ்திரங்களை குப்பை மேட்டில் தூக்கி எறிந்து நாம் இறைவன் ஒருவனே, அவனுக்கு எல்லாக் குலமும் ஒன்றே என்ற உண்மையினை பட்டி தொட்டிகள் அனைத்திலும் பரவிட, பரப்பிட நாம் செயலாற்றுதல் வேண்டும்.

"இந்துமதம் ஒரு பரந்த ஆலமரம் போன்றது. அம்மரத்தின் வேர்களை தீண்டாமை என்னும் சாதிப்புழுக்கள் அரித்து அரித்து ஈற்றில் ஆலமரம் (இந்துமதம்) வீழ்ந்து அழிந்து போகும்". இப்படிச் சொன்னவர் வேறு யாருமல்ல இந்துமதத் துறவியான சுவாமி விவேகானந்தரே.

இந்து மதத்திலுள்ள சாதியாசார முறை அத்துடன் பிரிக்க முடியாதவாறு பிணைந்து இணைந்து கிடக்கிறது. சாதியொழிந்துவிட்டால் இந்துமதமே ஒழிந்து விடுமளவுக்கு தொடர்பு இருக்கிறது. இதனை நாம் உணர்தல் வேண்டும். வர்ணம் பூசிய கோட்டையல்ல இந்துமதம். அது வர்ணக் கற்களாலேயே கட்டப்பட்டது. எனவேதான் பாரத பூமியில் அகிம்சா மூர்த்தி மகாத்மாகாந்தி பெயர் சொல்லி ஆளும் அரச சட்டங்களாலும், அறிஞர்களின் கருத்துரைகளாலும் காந்தி வினோபவே போன்ற மகான்களின் திருத்தொண்டுகளாலும் கூட அரை நூற்றாண்டாகியும் சாதி யொழிந்த பாடில்லை.

மேலும் தமிழ் நாட்டிலே கூட பகுத்தறிவுத் தந்தை இங்கர்சாலின் வாரிசு எனக் கூறப்படும் பெரியார் ஈ.வே.இராமசாமி, அறிஞர் அண்ணாத்துரை போன்ற நல்மனம் படைத்தவர்களாலும் ஏன் அவர்களின் கட்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரராலும் சாதியொழிப்பை வேகமாக முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. தேர்தல் காலங்களிலே இந்தியாவிலே சாதி நிமிர்ந்து நிற்பதை நாம் காண்கிறோம். அங்கே இன்னமும் கொடிகட்டிப்பறக்கிறது சாதி.

பிராமணீயம் ஆள்வோர் துணையுடன் ஆசாரம் காக்கிறது. நமது ஈழத்திரு நாட்டிலோ பிராமணீயம் வலுவற்றதாய் உள்ளது. பாரதத்திலிருந்து ஆலய பூசகர்களாக குடிபெயர்ந்து வந்த சிறுதொகையினராக இவர்கள் இருக்கின்றனர். பாரதம் போல நிலபுலம் பொருள் ஆகிய வளங்களைத் தம்வசமே வைத்திருக்கின்ற ஆதீனங்களோ உடமையாளர்களோ இங்கில்லை ஈழத்தில் வாழ்ந்துவரும் சூத்திரர்களின் ஆதரவு இன்றி இந்நாட்டுப் பூசகர்கள் வாழமுடியாத நிலை ஆகவே, எமது நாட்டில் நிலவும் சாதியமைப்பு அவ்வளவு இறுக்கமானதன்று.

அடிக்கடி ஆட்சியிலேறும் சிங்கள கட்சிகள் சமதர்மத்தை வாயினால் ஆகுதல் பேசி வருவன ஆகவே இங்கு சாதியமைப்பினை ஒழிக்கப் பணிபுரிவது சுலபம். சாதியொழிப்புப் பணியில் ஈடுபடும் நாம் எச்சந்தர்ப்பத்திலும் வன்முறைக்கு இடமளிக்கக் கூடாது. ஏனென்றால் வன்முறையால், புரட்சியினால் மனித மனங்களை ஆளமுடியாது. ஆகவே அன்புவழியைக் கையாண்டு மனிதமனங்களை வெல்வது எம்பணியாதல் வேண்டும். கல்வி, ஒழுக்கம், பணிவு, தாங்கும் இதயம், மனிதாபிமானம் என்பன இப்பணியாளர்க்கு அத்தியாவசியம்.

பின்வரும் கருத்துக்கள் சாதியொழிப்புப்பணியில் ஈடுபடுபவர்களின் மனத்திருத்தல் இன்றியமையாதது இந்துமதம் காட்டும் பிராமணீயம் கடுமை! மிகக் கடுமை!! கொடுமை! மிகக் கொடுமை!! நான்கு சாதியை வகுத்தான், சூத்திரன் என்றான். அதனை பதினெட்டாய்ப் பிரித்தான் வேளாளன் என்றான், அதனால் உரிமை இழந்து வாழவும் சம்மதித்தான். இதனால் அன்றோ புகழ்பூத்த ஆலயங்களி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெல்லாம் காலால் பிறந்த சூத்திரன் கால்ப் பகுதியான கடைசி வெளிமண்டபத்திலே நின்றுதான் இறைவனை வழிபாடு செய்யும் துர்அதிட்டசாலியாக உள்ளான்.

காலத்துக்குக் காலம் சூத்திரப் பரம்பரையில் தோன்றிய சிந்தனையாளர்கள், பகுத்தறிவுவாதிகள் கோலோச்சுபவர்கள் துணை கொண்டு நசுக்கப்பட்டனர், அழிக்கப்பட்டனர். இதுதான் பிரமாணத்துவத்தின் நீடித்த செயலாக இருந்து வருகின்றதென்பதை படிப்பவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். குடிப்பிறப்பொன்றே காரணமாக அரச பரம்பரையும், பிராமணகுலமும் தொடர்ந்து வரவும், சூத்திரன் குடிப்பிறப்புக் காரணமாகவே வேறெந்த உயர்வும் பெற முடியாது, தீண்டத்தகாதவர் களாய் வாழுகின்ற உலகம் இது.

சூத்திரரின் பலம், வலிமை, உயர்ந்துவிடக் கூடாது என்பதிலே சாத்திரங்கள் ஸ்மிருதிகள் அவர்களிடையே பதினெட்டு சாதி பேதங்களை உருவாக்கி நிலத்தை உழுது உலகுக்கு வாழ்வளிக்கும் ஒரு சாராரை வேளாளர் என்றும் பதினெட்டிலும் அவர்களே உயர்ந்தவர்கள் என்றும் பேதா பேதங்களை மேலும் வளர்த்து விட்டவர் உள்ளே புகுந்த ஆரியரே.

இந்தச் சிக்கலில் மாட்டிக்கொண்டு விடுபட முடியாதபடி ஒவ்வொரு சாதியும் தாம் இன்னாரிலும் உயர்ந்தவர் என்ற மயக்கத்தில் சாதி ஆசாரம் கொடிகட்டிப் பறக்கிறது.

எந்தவிதக் கல்வியறிவாலும் சரி, பொருளாதார மேம்பாட்டாலும்சரி நீக்கப்பட முடியாத ஒன்றாய் சாதியமைப்பு இனிதே வாழ்கிறது.

கருடன் வாய்ப்பட்ட பாம்பு, பாம்பின் வாய்ப்பட்ட தேரை, தேரை வாய்ப்பட்ட வண்டு என்று கூறுவார்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தமிழினம் சாதியமைப்பால் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒன்றுபட்டு நிற்க முடியாதபடி சிதைந்து நிற்கிறது.

பொருள் நிறைவினாலும் கல்விப் பெருக்காலும் ஆசாரத்தினாலும் சாதி ஒழிந்துவிடும் என்பது ஒரு மிகையான கூற்றாகும் இவை ஓரளவு துணையாயிருக்குமே தவிர இவை தீண்டாமை நோய்க்கு மருந்தல்ல சூத்திரர்கள் உள்ளும் கல்வி, பொருள் இவற்றால் மேம்பட்டவர்கள் தத்தம் சாதியில் தாம் உயர்ந்தவர் என்ற மாயையில் கட்டுண்டு கிடப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

ஒடுக்கப்பட்ட மக்கள் மனையில் மதுவருந்தச் செல்லும் உயர் அங்கு காட்டும் சமத்துவ மனப்பான்மை வெறி சார்ந்ததேயன்றி வேறல்ல. இந்தச் சாதியமைப்பு முறை மனித மனங்களில் அழிய முடியாதவாறு வேர் பாய்ச்சியுள்ளது என்பதை, துணி வண்ணம் செய்யும் தொழிலுடையோர் தாம் மேம்பட்டவர் என்ற நினைப்பில் சாதியொழிப்பை விரும்பாதவர்களாக இருப்பதை நாம் அறிவோம். இவர்கள் மயிர் வினைஞர்களிலும் தாம் மேலானவர் என்பது அவர்கள் கருத்து. இவ்வாறான சிக்கல் நிரம்பிய தம் நலம் பெருக்கும் வழியாக சாதிகள் பிரிக்கப்பட்டு என்றும் ஒன்றுபட முடியாத சமுதாயமாக எந்தவிதக் கல்வியறிவாலும் சரி பொருளாதார மேம்பாட்டாலும்சரி நீக்க முடியாத ஒன்று போல சாதியமைப்பு நிலை கொண்டிருக்கிறது. சாதியைக் கட்டிக்காத்து நிற்கிறது இந்து மதம்!.

மீளவும் கூறுவதாயின், "பொருள் நிறைவினாலும், ஆசாரத்தினாலும், கல்விப்பெருக்காலும் சாதியொழிந்து விடும்" என்பது மிகைப்பட்ட கூற்றாகும். இவை ஓரளவுக்குத் துணையாய் இருக்குமே தவிர நோய்க்கு மருந்தல்ல, அனுமானம் இந்தச் சாதியமைப்பு இருக்கிறதே. நாட்டில் ஏழை எளிய மக்களிடையே தோன்றும் பஞ்சம்,பசி, பட்டினி யால் மக்கள் சினங்கொண்டு புரட்சி பண்ணாது அமைதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைத் தாங்கிக்கொள்ள வேதமும், வேதமோதுவோரும், தர்மமும் அவர்களுக்கு சாந்தியை அளித்தன.

சைத்திரியர் எனப்பட்ட அரசனின் மூளையே பிராமணர்க்கு அடைவு நகையாக்கப் பட்டிருந்தது, குருவாக்கிற்கு எதிர்வார்த்தையில்லை என்னும் நிலையை இந்து மதம் ஏற்படுத்தியது. குரு அமைச்சரானார். அமைச்சர் அரசரானார். பிரம்மாவின் தலையிலும் தோளிலும் இருந்து உற்பவித்தவர்கள் என்றும் தம்மைக் கூறிக்கொள்பவர் அரச பதவி பெற்றனர். பாவம் சூத்திரராக்கப்பட்டு பதினெட்டு சாதியாகப் பார்க்கப் பட்டவர்கள் நாம் பிளவுபட்டுக் கெட்டொழிந்ததுதான் மிச்சம்.

இந்தப் பதினெட்டுச் சாதியையும் சாந்தப்படுத்த ஆரியவர்க்கம் செய்த சூழ்ச்சிகள் அனந்தம். அக்காலத்தில் சூத்திரப் பிரிவினர்க்கும் பிராமணர்க்கு ஏற்பட்ட பிணக்குகளை முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக உழவு தொழில் புரிந்து வந்தவர்களை, "நீயன்றோ வேளாளன். நீயன்றோ ஏர்முனையால் யாவர்க்கும் வாழ்வளிக்கும் தேவன், நீயன்றோ கொடை வள்ளல், நீதானே பதினேழுக்கும் மேலோன்" என்ற அழிபுகழ்பாடி வேளாளர்களைத் தமக்கடுத்த சாதியராகவும் ஏனைய தமிழர்களை பதினேழாகச் சின்னா பின்னமாக்கிய பெருமைக்குரியவர்கள் பிராமணோத்தமர்கள், இவர்களது தற்புகழ்ச்சியால் பதினெட்டிலும் பதினேழுகுறைய, பதினேழிலும் பதினாறு குறைய இப்படிப் படிப்படியாக ஏற்றத்தாழ்வினைக் கற்பித்து சூத்திரரால் வரப்பட்ட எதிர்ப்பை முறியடித்த அந்தக் குள்ள நரிப்புத்தியினரை போற்றாமலிருக்கத்தான் முடியுமா?

வேளாளன் அவன் சொல்கேட்டு இறுமாந்து தன்கீழ் இருக்கும் குடிமக்களை அடக்கி, ஒடுக்கி தன்னலம் பெருக்கி வாழ்ந்து வருகிறான். இதுதான் சாதி வரலாற்றின் சுருக்கவிளக்கம். ஆகவே சாதியொழிப்பு பணியில் ஈடுபடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவர்கள் இவற்றை சிந்தனையிலிருத்த வேண்டியது அவசியம்.

எமக்கிடையே சாதியொழிப்பு சம்பந்தமாய் நிகழ்ந்து வரும் சில சங்கதிகளை நாம் அறிந்திருத்தல் வேண்டும். இங்குள்ள கல்லூரிகளில் தொழில் நிலையங்களில் தமக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவில்லை என்பதால், ஒடுக்கப் பட்டதங்கட்கு தனிக் கல்வி நிலையங்கள் தனித்தொகுதி முறைகள் வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட சிலர் பேசிவருவது சாதி ஒழிப்புப் பாதையில் போடப்படும் தடைக்கற்களாகி விடவும் கூடும். மக்கள் மனம் விரிவு படாத காலத்திலே, சீர்திருத்தவாதிகள் தோன்றியிராத காலத்தில் எங்களுக்கென்று தனி நிறுவனங்கள் கேட்டிருந்தால் கல்வியுலகிலாகுதல் முன்னேறியிருக்க முடியும். இன்று நிலமை அப்படியல்ல, மனந் திறபட்டு வரும் காலம் வாலிபர்கள் மனதிலே வேற்றுமை வித்துக்கள் தூபக்கூடாது. என்று கூறிடும் சமத்துவப் பயணகாலம்.

இக்காலத்திலே அனைத்துப் பிள்ளைகளும் ஒன்றாய்ப் பழகிப் படித்து தோழமைபூண்டு சோதரர் போல வாழ்வதற்கு வழிவிடவல்ல கல்வி, பொருளாதார நிலையங்களே பெரும்பயனைத் தரும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

சாதி யொழிப்பதெப்படி? என்ற இந்தக் கட்டுரையில் இதுவரை சொல்லப்பட்டவை சாதியமைப்பு முறை பற்றியதாகும். எப்படியான வேலைத்திட்டங்களால் இதனை முன்னெடுத்துச் செல்லலாம் என்பதற்கு இங்கு பத்துக் கற்பனைகள் மக்கள் முன்வைக்கப்பட்டு அவற்றின் விளக்கங்களும் தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை:

(அ) பிரசாரம் (சமயம் மனிதநேயம்)
(ஆ) ஒழுக்கமும் கல்வியும்
(இ) நிறுவனங்கள்
(ஈ) பொருளாதாரம்
(உ) தொழில் மாற்றம்
(ஊ) அரசியல் மதவிடுதலை
(எ) கலப்பு மணம்
(ஏ) அரசின் சட்டங்கள்
(ஐ) வாலிபப் படை
(ஒ) நல்லாசிரியர்கள்

**பிரசாரம்:**

சாதியக் கோட்பாடுகளைத் தகர்த்தெறியவல்ல நியாயங்களை கருத்துக்களை, நெஞ்சில் உறுதியும் நேர்மைத்திறனும் கொண்ட நாவன்மை படைத்த ஒரு குழு ஊர் ஊராக சமூக நிறுவனங்கள் வாயிலாகப் பிரசாரம் செய்து மக்கள் மனோ நிலையில் மாற்றம் செய்தல். இசை, நாடக நிகழ்ச்சிகள் மூலம் மனிதாபிமானத்தைத் தட்டி எழுப்பல் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாயிலாக சாதிப் பாகுபாட்டின் கேட்டினை அறியவும். மனம் பண்படவுமான கருத்துக்களை வெளியிடுதல், அனைத்து இதழ்களும் சாதி யத்துக்கு மாறான சுலோகம் ஒன்றினை தம் தாரக மந்திரமாக வெளியிடுதல். உதாரணமாக இக்கட்டுரை எழுதிய காலகட்டத்தில் "கண்கள்" என்ற முத்திங்கள் மாணவர் ஏட்டில் என்னால் சுலோகமாக பதிக்கப் பெற்ற

"தம்பி சாதி! சாதி! சாதி!
சாதிக்க வேண்டியதைச் சாதி"
ஆக ஆண்சாதி, பெண்சாதி இரண்டே சாதி"
இது போல,
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"
"சாதி இரண்டொழிய வேறில்லை"
"எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவனே"

இதுபோன்ற தாரக மந்திரங்களைத் தாங்கிவருவதற்கு ஊடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியலாளரின் துணையினைப் பெறுதல், என்றின்னோரன்ன வழிகளில் பிரசாரம் செய்வது தீண்டாமை நோய் படிப்படியாக குறைந்திட வகை செய்யும்.

## ஒழுக்கமும் கல்வியும்

பொதுவாக, ஒடுக்கப்பட்ட மக்களிடையே நிலவிவரும் ஒழுக்கக் கேடுகள், கல்வி குறைவினாலேயே ஏற்படுகின்றன.
**"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"**
**"கண்ணுடையார் என்போர் கற்றோர்"**

ஒழுக்கம் அறிவின்பாற்பட்டது. ஆகவே சாதி ஒழிப்புப் பணியில் ஈடுபடுவோர், ஈடுபடும் நிறுவனங்கள் அச்சமூகத்தின் கல்விநிலையை மேம்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிதல் வேண்டும். அனைத்துப் பிள்ளைகளும் ஒன்றாய்ச் கூடியிருந்து கற்கவும் பாலர் கல்விமுதல் பல்கலைக்கல்வி வரை தடங்கலில்லாத கல்வியினை சாதியத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பெறவும் வாய்ப்பளித்தல் வேண்டும்.

குடிசைகள்தோறும் கல்வி வாசனையில் வாதிருக்கின்ற பிள்ளைகள் கல்வி பெற வழிகாணல், உயர்கல்வியின் தங்கிய மாணவர் பெற்றுயர அரசு மானியம் பெறுவதற்கான அழுத்தங்களைக் கொடுத்தல் இச்சமூக மாணவரிடையே பலவிதமான போட்டிகளை நடாத்தி ஊக்குவிக்கு முகமாகப் பரிசில்களை வழங்குதல், கௌரவித்தல் போன்ற கல்விப்பணிகள் சாதி ஒழிப்புப் பணியாளர்க்குரிய கடன்களாகும்.

## சமூக நிறுவனங்கள்:

பற்பல பெயர்கள் சூடி இயங்கிவரும் நிறுவனங்கள் எல்லாம் எல்லார்க்குமான நிறுவனங்களாக விளங்குதல் அவசியம் சாதியத்தின் சார்பாக விளங்கிவரும் அனைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களும், சமூகமக்களின் நிறுவனமாக மாற்றம் பெறுதல் வேண்டும். அங்கே வேறுபாடின்றி ஏற்றத்தாழ்வு இன்றி பதவிகள் வழங்கப்படுதல் இன்றியமையாதது. இந்நிறுவனங்களில் ஆண்டுக்கு ஒரு தடவையாதல் சாதியொழிப்பு வாரம் கொண்டாடப்படுதல் சிறந்தது. மேலும் நிறுவனங்களின் முகப்பில் திருமந்திரம், (ஒன்றே குலம் ஒருவனே தேவன்) எழுதப்பட்டிருத்தலுடன் நிறுவனத்தாரும் மனதார அக்கருத்தினை சார்ந்தவராக இருத்தல் நன்று.

## பொருளாதாரம்:

கல்வியுடன் பொருள்தான் சமூக அமைப்பினை வேறுபடுத்திக் காண்பிக்கும் காரணி. சாதியமைப்பு எமது சமயத்தின் ஒரு கை என்றால் பொருளாதாரம் மறுகை யாகும். சூத்திரர் எனப்படும் பதினெண் பிரிவினரும் சமயத்தால் மட்டுமல்ல பொருளாலும் பாதிப்புற்று அடிமைத்தனத்தை எம் வாழ்வாகக் கொண்டிருக்கிறோம்.

உலக வரலாற்றிலே அரசியல் சுதந்திரம் வேண்டியும் பொருளாதாரச் சுதந்திரம் கோரியும் போரல்ல புரட்சிகள் நடந்து சிற்சில நாடுகளில் அந்தச் சுதந்திரங்கள் கிடைத்திருக்கின்றன. இங்கோ சூத்திரரான சாதியர் சுரண்டப்படும் வர்க்கமாக வாழ்ந்திட எமது சமயம் பேருதவி புரிந்திருக்கிறது எனின் மிகையாகாது. நிலவுரிமை இல்லை, குடிசை கட்டக்கூட அந்நிலவுரிமை இல்லை, தொழில் புரிய நிதியில்லை, தன்னுடல் உழைப்பைத் தவிர வேறொன்றும் இல்லை. இதனாலன்றோ நாம் நாயிலும் கேவலமாய் நடக்கிறோம், நடத்தப்படுகிறோம். இக்காரணங்களினாலே தான் சமூகம் பொதுவுடமைஆட்சி அதாவது, சமதர்ம ஆட்சி வரவேண்டும் என்று அடிமட்டத்தில் ஏழைகளாய் வாழ்ந்து வரும் நம்மவர்கள் நினைப்பதில் தவறேதும் இல்லை. சாதியமைப்புக் காரணிகளில் பொருளாதார வேறுபாடே தலையானதாக விளங்குகிறது. பொருள் வளம் பெருகின் கல்வியும் அது சார்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவையும் கைகூடி சாதியம் சரிந்து விடும். ஆகவே, நாம் பொருளாதார விடுதலைக்காக முன்னின்று உழைத்தல் வேண்டும்.

**தொழில் மாற்றம்:**

தொழிலால் எதுவும் இழிவில்லை என்பது இன்றைய உலகத்தின் கருத்து. எனினும் இழிதொழிலென்று கற்பிக்கப்பட்ட தொழிலில் பரம்பரையாக ஈடுபடுவதை விட்டுவிட வேண்டும். சாதியைக் கட்டிக்காத்துவரும், தொழிற்ப்பிரிவுகளில் இருந்து நாம் விடுபட்டு வெவ்வேறு தொழிற் துறைகளில் இறங்க வேண்டும். ஒரு தொழில் ஒரு சாராருக்குரியதென்ற நிலை மாறிட வேண்டும். கமமோ, ஆலயமோ, ஆட்சிபீடமோ இன்னாருக்குத்தான் என்ற நிலை மாறி கமக்காரனாகவோ, அர்ச்சகராகவோ, அன்றி மந்திரியாகவோ எவரும் வரக்கூடிய இன்றைய உலகில் நாம் காலடி எடுத்து வைத்தல் இன்றியமையாதது.

**அரசியல் மதவிடுதலை.**

வாக்குரிமை பெறுவதொன்றேயே நோக்காகக் கொண்டு சாதியை வளர்த்திடவும், சாதியை ஒழித்திடவும் கூடிய இருநாக்கு அரசியல்வாதிகளை விட்டு வெளியேறி விடுதலும், மதப்பூச்சுடன் சாதியொழிப்புப் பற்றிப் பேசுகின்ற சனாதன வாதிகளை முதன்மைப் படுத்துவதுமான காரியங்களில் சூத்திரராகிய நாம் ஈடுபடாது. எமாறாது இருத்தல் அவசியம் அதுவும் இந்துசமய தத்துவங்கள் என்று பேசுகின்ற ஆச்சாரியர்களின் உபதேசங்களில் இருந்து நாம் விடுதலை பெறுதல் வேண்டும்.

**கலப்பு மணம்.**

மணந்தான் அதாவது, திருமணந்தான் சமூகவாழ்வின் மையம் மணத்தின் மையப் புள்ளிதான் மனித மனம். இது காறும் கூறியவை மனிதனின் புறத்தே சமுதாயத்தோடு தொடர்புடையவை. மணம் என்பது மனித உள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்தது. அகத்து நிகழ்வு! அது காதல் எனவும் கூறிடலாம் மண நிகழ்வினை சட்டங்களாலோ ஏதும் சம்பிரதாயங்களாலோ செய்திட முடியாது. அது இரு உள்ளங்களின் விருப்பால் நிகழ்வது. சாதியமைப்பின் ஆணிவேர் போன்றது மணம். இது கட்டியடிக்கின்ற விஷயமுமல்ல.

இந்து சமயத்தின் இறுக்கமான நிலை சாதியாசாரம்! மணந்து பார்த்து மணக்கிற சங்கதி விவாகம்! இது மனித மனங்களோடு சம்பந்தப் பட்டிருப்பதால் அது பற்றி சிறிது விரிவாக எழுத வேண்டியுள்ளது. சாதிக் காரணிகளில் ஏனையவை காலத்துக்குக் காலம் அடியுண்டு போகக் கூடியவை. மணமுறையினால் சாதியொழிப்பது அவ்வளவு லேசான தன்று. காதலால் சாதியொழியலாம். ஆனால் இருவருக்கும் காதல் வரவேண்டுமே கட்டுக் கலியாணத் தால் சாதியை ஒழிக்க இயலாமல் போகலாம். அது இன்னும் பல விளைவுகளை கொண்டு வரலாம். அப்படி இறுக்கி வைத்திருக்கிறது இந்துமதம். புரட்சி வடிவத்தில் இதனை சாதிக்க முடியாது என்பது எனது தனிப்பட்ட கருத்து. புரட்சி மணங்கள் தனிமனித மீறலாகிவிடும். ஆனால் கலப்பு மணமுறையினால் சாதியத்தைப் படிப் படியாக ஒழிக்க முடியும். பாரத நாட்டிலே ஈ.வெ.ரா, அண்ணாத்துரை போன்ற பெரியார்கள் இத்திருமண முறையில் தொண்டாற்றி வருவது நாமறிந்ததே. இருவரதும் விருப்பத்தினை அடிப்படையாக வைத்து சாதிக் கலப்பு மணம் அவ்வப்போது நிகழ்கின்றன, ஊக்குவிக்கப் படுகின்றன. சமுதாயம் மட்டுமல்ல அரசினது ஊக்குவிப்பும் இருக்குமாயின் ஈழத்திலும் கலப்பு மணங்களால் சாதிக் கெடுபிடிகள் காலகதியில் குறைந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டங்கள் இயற்றுதல் (அரசு)

(1) பெயர் பதிவுகளிலிருந்து சாதிக்குரிய பெயர்களை நீக்குதல்.
(2) தீண்டாமை ஒழிப்புச் சட்டங்களைக் கொண்டு வருதல்
(3) நிலங்களை, தேவாலயங்களை பொது உடைமை யாக்கல்.
(4) பாடசாலைகள் கல்லூரிகள் அரசுடைமையாக்கல்
(5) நில மில்லார்களுக்கு காணி நிலம் அளித்தல்
(6) பிறபட்ட வகுப்பாருக்கு கல்வி, தொழில், என்பவற்றில் ஈடுபடுவதற்கான ஊக்குவிப்பு வழங்கல்
(7) பொதுவுடைமைச் சமுதாயம் தோன்றற்கான சட்டங்களை இயற்றுதல்.

என்றின்னோரன்ன சட்டவாக்கங்களுக்கும் நிறை வேற்றுதலுக்குமான அழுத்தங்களை சமுதாய ரீதியாக கொடுத்தல் சாதியொழிப்புக்கு பயன்தரவல்லன.

## வாலிபப்படை (அணி)

புதுப்பாதை! ஆமாம் தமிழரின் பழைய சமத்துவப் பாதையில் ஏறுநடை போட்டுச் செல்ல வல்லவர்கள் தம்மை உயர்குலம் என்று சொல்லுகின்ற வாலிபர்களே. எந்தெந்த நாட்டிலே வாலிபர்கள் தீமை கண்டு கொதித்தெழ வில்லையோ அந்த நாடுகளில் இன்னும் அடிமை ஒழியவில்லை. புரட்சியின் சின்னங்கள்! புதுவாழ்வை மலர்விக்கும் உதய சூரியன். வாலிபர்களே, தமிழினம் விழித்தெழுந்திட, சாதியொழிந்திட, சமத்துவம் நிலவிட வாலிபப்படை பெருகிட வேண்டும். வாலிபர்களே ஒன்று சேருங்கள். கைகோர்த்துப் புறப்படுங்கள்! சாதி பேதம் சாகும்! சாகும்!.

## நல்லாசிரியப்பணி

இறைவனைப் போல் முத்தொழில் புரிகின்றவர்கள் ஆசிரியர்கள். நன் மாணவர்களை ஆக்கிடவும் அவர்களை காத்திடவும் ஏன் அவர்கள் வாழ்வை அழித்திடவும் வல்லவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாட்சி நடத்துபவர்களாயினும் சரி, அறிவுரை தரும் பண்பாளராயினுஞ் சரி சிந்தனைச் சிற்பிகளாயினும், சீர்கெட்ட போக்குடைய பதவிப் பித்தர்களாயினும், தன்னலக்காரராயினும் ஆசிரியர் கைப்படாது அவர்கள் வாழ்வு ஆவதில்லை.

ஆகவே மக்கள் சமுதாயம் எழுச்சி பெற்றிட வேண்டிய ஒருதன்மையை சுலபமாக ஏற்படுத்தக் கூடிய வசதி, சூழ்நிலை, அறிவு, ஆசிரியர் உலகத்திலேதான் உண்டு. நல்ல, விரிந்த மனமும் பண்பும் உள்ள ஆசிரியர்கள், பேராசிரியர்கள் நாட்டிலே பெருகிடுவாரானால் சாதியொழிப்பு ஒரு பெரிய காரியமன்று. வகுப்பறையிலே சமத்துவம் பேணி அன்பு வழிகற்பித்து அறிவூட்ட ஆசிரிய உலகம் முன்வந்தால் அடுத்த தலைமுறையில் தீண்டாமை, சாதிவேற்றுமை வேரோடு சாய்ந்துவிடும்.

**வணக்கம்!**

**ஆசிரியர், "சு.கணபதிப்பிள்ளை"**
**நெல்/மத்திய ம.வி. அல்வாய் தெற்கு,**
**யாழ்ப்பாணம். அல்வாய்.**
**24.08.1961.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுசக்தியின் பயன்

## – சுகணா –

அகில இலங்கையிலும் இந்தியத்

தூதரகத்தால் நடத்தப் பெற்ற

"அனுசக்தியின்பயன்"

என்றகட்டுரைப் போட்டியில்

முதற் பரிசான

தங்கப் பதக்கமும்

சான்றிதழும்

பெற்ற கட்டுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுசக்தியின் பயன்

இளஞ்சந்திரன் வான வெளியில் வலம் வரும் ஆண்டு, மனித முயற்சியால் ஆக்கப்பட்ட அணுசக்தி வீண்போகாது என்று காட்டும்(குக்கலை சுமந்து செல்லும் செய்மதி) இரண்டாவது சந்திரனை உலகம் கண்டு வாய் பிளந்து நிற்கும் காலம், அணுயுகம் ஆரம்பமாகி இருக்கிறது. அணுசக்தியின் தீய விளைவுகளை நாம் கண்டும், கேட்டும் ஊகித்துக்கொண்டோம். அணு என்னும் போது மரணதேவதையே நம்மை நோக்கி வருவதுபோல இருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமை வாய்ந்த அணுசக்திதான் எப்படிப்பட்டது? அதனால் நமக்கு சாவே தவிர வாழ்வே இல்லையா?

## அணு:

அணுபற்றிய ஆராய்ச்சி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைபெற்று வந்துள்ளது. அணுவைப்பற்றிய சில முடிவுகள் நம்முன்னோர்க்குத் தெரிந்திருந்தன.

இதற்கு பலசான்றுகள் உள. "அணுப்பிரமாணமளவு" என்றும் அதற்கு ஒருபடி மேலாக, "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி"! எனவும் அதற்கு ஒருபடிமேலாக, "மொழி முதற் காரணமாய் அணுத்திறன் ஒலி" எனவும், ஒலிக்கு மூலமே அணு என்பதனையும் எடுத்தாண்டுள்ளனர்.

அறிவியற்துறையில் **(SCIENCE)** நாம் எட்டிப் பிடிக்க முடியாத மேலை நாட்டினர் இது பற்றி அறிதற்கு முன்பே நம்முன்னோர் (ஆய்ந்தோ) சிந்தித்து அறிந்துள்ளனர்! தமிழர் சமுதாயத்தில் இடைக் காலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட தயக்க நிலை காரணமாக கலைச் செல்வங்கள் வளர்ந்தனவே தவிர அறிவியற்துறை வளரமுடியவில்லை. ஒரு கண் ஒளியிழந்த காரணத்தால் வாழ்க்கைத் துறையில் பின்தங்கி ஒற்றைக் கண்ணராக வாழ்ந்து வந்திருக்கிறோம்.

# மூலகங்கள்

விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ள மூலகங்கள், அதாவது தனிப் பொருள்கள் எல்லாம் அளவிடற்கரிய மிக நுண்ணிய அணுக்களால் ஆனவை. ஒரு சிறு பொருளை எடுத்துப் பகுத்து பகுத்துக் கொண்டு செல்லும் போது பகுக்க முடியாத நிலையை எய்தும் நுண்மம் தான் அணுவாகும். இதனை ஆங்கிலத்தில் அட்டம் **(ATOM)** என்பர். இதனை நாம் சாதாரண பூதக்கண்ணாடி கொண்டும் பார்க்க முடியாது. அவ்வளவு நுண்ணியது. பத்துக்கோடி ஒரு நிரையில் அடுக்கினால் ஓர் அங்குலம் கூட இருக்காது. ஒரு கிராம் வெள்ளியில் அடங்கியுள்ள அணுக்களை ஈழநாட்டு மக்கள் அத்தனை பேரும் சேர்ந்து இராப்பகலாக எண்ணினால் எண்ணி முடிக்க எவ்வளவு காலமாகும் தெரியுமா? பத்துக்கோடி ஆண்டுகளும் செல்லுமாம் இதிலிருந்து நாம் அணுவின் நுண்மையை(சிறுமை) கண்டுகொள்ளலாம் இன்று அணுவை அளக்கும் கருவியைக் கூட அமைத்திருக்கிறார்கள் அறிவியல் மேதைகள்.

குறளின் நுண்மான் நுழை புலத்தை, அணுவைத் துளைத்து, அதற்குள் ஏழ்கடலை புகுத்துவதற் கொப்பிடுகின்ற புலவர்களின் கற்பனை உண்மை தான் என்று காட்டுதற்கோ என்னவோ, விஞ்ஞானிகள் பகுக்க முடியா இவ்வணுவை பிளக்க, உடைக்க முடியுமா என்ற ஆராய்ச்சி காலத்துக்குக் காலம் செயலூக்கம் பெற்று பிளக்க முடியும் என்று கண்டார்கள். அணுவில் நடு (மையப்பகுதி) வில் அணுக்கரு உண்டென்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கருவைச் சுற்றி" "எலெக்டிரான்" "புரோட்டான்", "நியூட்ரான்" "பாசிட்டிரான்" என்னும் துகள்கள் வலம் வருகின்றன என்றும் ஞாயிற்றுத் தொகுதியின் அமைப்பு முறையிலேதான் அணுஅமைப்பும் இருக்கிறது என்றும் ஆய்ந்தறிந்தனர். உட்கருவும் வலம்வரும் துகள்களும் பிரிதிடமுடியாத அளவுக்கு ஏதோவொரு மகாசக்தி (பராசக்தியோ!) யினால் பிணைக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்தது. அதிலிருந்து அணுவை உடைத்துப் பார்க்கும் விருப்பம், பாவை ஒன்றை உடைத்துப் பார்க்கும் சிறுபிள்ளை போல் விஞ்ஞானிகட்கும் ஏற்பட்டது. மிகமிகப் பலமான துணுக்குகளாலும் ஒளிக் கதிர்களாலும் பிளந்து பார்க்க விரும்பினர் ஈற்றில் அணுவிலிருந்து பயங்கரப் பூதம் கிளம்புவதைக் கண்டனர். அதனைப் பார்த்த கண்களும் வாயும் கூட மூடவேயில்லை பல நாட்களாக.

## சக்தி.

இதுவரை மனித வாழ்வில் பயன் கண்ட, பயன்படுத்தப்பட்ட சக்திப் பொருட்கள், எண்ணெய், நீர், நிலக்கரி, மின்சாரம் என்பனவாகும். நீரின் வேகத்தில் சக்தி பிறக்கிறது. மின்சாரமாகப் பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய் வெப்பம் அடையும் போது சக்தி பிறக்கிறது. எந்திரங்கள் கனவேகத்தில் சூழல்கின்றன. நிலக்கரி எரிகிறது, நீர்கொதிக்கிறது. அங்கே சக்தி உந்தித் தள்ளுகிறது. கப்பல்கள் கடலில் உலாவருகின்றன. இரவு பகலாகிறது! இது மந்திரமும் அல்ல, தந்திரமுமல்ல மின்சாரத்தின் விந்தையிது. இவ்வகையான சக்திகளில் மின்சாரந்தான் இதுவரை மனிதரை வியப்பில் ஆழ்த்தி வந்திருக்கிறது. ஆனால் அணுசக்தியின் ஆற்றல் அளவிடற்கரியது. மின்சாரம் கடுகு என்றால் அணுசக்தி உலக கோளம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணுசக்தி

அணுவைப் பிளப்பதற்கு அறிவியலாளர், பலவித மூலகங்களையும் எடுத்துப் பிளக்க முயற்சித்தனர். அவர்கள் றேடியம்**(RADIUM)** தோரியம்**(THORIUM)** யூரேனியம் என்கின்ற இயல்பாகவே கதிர் வீச்சுடைய மூலகங்களைப் பிளக்க முயன்றபோது முதல் ஆய்வில் யூரேனியத்தைப் பிளந்தார்கள். அப்போது ஆயிரம் கிறாம் யூரேனியம் வெடித்துப் பறந்து மாபெரும் சக்தியை வெளியிட்டது. பின்னர் பறந்த பொருட்களை ஒன்றும் விடாமல் சேர்த்துப் பார்த்தார்கள். அப்போது 999 கிறாம் யூரேனியம் இருந்தது. எஞ்சி நிற்க வேண்டிய ஒரு கிராம் யூரேனியம் எங்கே எங்கே யென்று வியப்புடன் தேடிப்பார்த்தனர். உணவும், உறக்கமும் இன்றி சிந்தனை கூடத்தில் தங்கினர் விஞ்ஞானிகள்.

ஈற்றில் அறிவியல் உலக மேதை இருபதாம் நூற்றாண்டுக் கணக்கரசன்! இரண்டு மணியை இரண்டு நிமிடமெனக் நிரூபித்த ஒப்புவமைக் (சார்பு) கொள்கையின் பிதா ஐன்சுடைன் கண்டு பிடித்தார் அதாவது, குறைபட்ட அந்த ஒரு கிராம் யூரேனியம் சக்தி வடிவாய் மாறிவிட்டது என்று கூறினார். இதன் சக்தி எவ்வளவு தெரியுமா? 250,000,000 கிலோ உவாட் ஆகும். ஒரு கிராம் நிலக்கரிச்சக்தி 0.0085 யூனிட் மாத்திரமே. இதிலிருந்து யூரேனிய அணுவின் சக்தியை ஒப்பிட்டுக் கொள்ளுங்கள். மேலும் அணுவைப் பிளக்கும் போது அளப்பரிய சக்தியுடைய ஆல்பா, பீடா, கம்மா கிரணங்கள் வீசுகின்றன. இன்றைய அணுசக்திப்பிறப்பிற்கு அணுவிறகுகள் உபயோகிக்கப்படுகின்றன. ஒன்று, **92U 235** யூரேனியம் + மற்றது **95PU238** புளுட்டோனியம் இவை இரண்டும் ஒன்றிக் கலக்கும் இயல்புடையன.

காஸ்மிக் **(COSMIC RAYS)** கதிரொளியை (நியூட்டிரான்) யூரேனிய அணுக்களில் பாய்ச்சுவதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவின் உட்கரு பிளக்கப்படுகிறது. மேலும் தொடர் முறைக் கிரியைகள் மூலம் சக்தி மேலும் அளவற்றதாகப் பெருகுகிறது! ஆண்டவன் ஆதியில் ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் படைத்தார், என்று கூறுகின்றார்களே அதுபோல ஏவப்பட்ட நியூட்டிரான் இரண்டு நியூட்டிரான் களைப் பெற அவை தொடர்முறையால் சோடிகளை ஆக்கிக் கொண்டே போகின்றன தலைமுறைகளால் அணுசக்தி அதிகரிக்கிறது. எழுபது தலைமுறைகளால் ஒருதொன்பளுவுள்ள சக்தி உற்பத்தியாகும் 70-80 ஆனால் அதன் பளு 20000 தொன்களாகும் இவை நிகழும் நேரம் $\frac{1}{100000}$ செக்கன் ஆகும். என்னே விஞ்ஞானப் புதுமை!

## ஆராய்ச்சியின் நோக்கம்:

மனிதன் தற்பாதுகாப்புக்காகவே ஆயுதங்களை ஆக்கி வந்துள்ளான் என்பது வரலாறு. மிருகங்களைக் கொல்வதற்கு கற்களைத் தீட்டிக் கூராக்கினான். அப்போது நெருப்பைக் கண்டான். காலஞ் செல்லச் செல்ல அவனது நோக்கம் மாறி தீட்டிய கற்களால் எழில்மிகு மாடங்கள் பலம்மிகு கோட்டைகள், அழகான சிற்பங்கள் உருவாக வழிசெய்தான் வாழ்விலே அழிவுதரும் பொருட்களை ஆக்கப் பொருட்களாக மாற்றினான். ஆனால் விஞ்ஞான ஆய்வு மனிதனுக்குப் போர்க் கருவிகள் மீது உள்ள மோகத்தால் வளர்ச்சி பெற்று வருகிறது. வளரும் விஞ்ஞானம் அழிவுக்கு தான் பயன்பட வேண்டுமா? என்பது அந்நாட்டு மக்களின் நல்லறிவிலும் மனித நேயத்திலும் தங்கியுள்ளது.

மனிதன் இயற்கையுடன் போராடும் போராட்டமே ஆராய்ச்சிக்கு வழிவகுக்கிறது. தன்வாழ்வுக்கு நல்லனவற்றை மனிதன் தெரிந்து கொண்டபடியினால் தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இரும்பு பறக்கிறது. மதிபெற்ற மதிமண்டலங்களை வலம் வருகிறது

## அன்பும் பண்பும்:

சங்ககால நூல்களில் ஒரு நாட்டு நலனுக்குப் படை, குடி, கூழ், அமைச்சு என்னும் நான்கு அங்கங்களும் இன்றியமையாதன எனக் கூறப்படுகின்றன, மக்கள் நலம், குடி ஓம்புதற்கு படை வைத்திருப்பது கூடாததன்று ஆள்பவரும் ஆளப்படுபவரும் இல்லாத ஓர் ஆட்சி முறை இதுவரை ஏற்பட்டதாக இல்லை. அறிஞர் பிளேட்டோ கூறிய படித்த பண்பாளர் ஆட்சி இன்னும் கற்பனையாகத்தான் இருந்து வருகிறது. பிளேட்டோவின் "குடியரசு" ஆகட்டும் காந்தியடிகளாரின் கிராம் இராஜ்யம் ஆகட்டும் அல்லது உலகில் நடைமுறையில் உள்ள எந்தவித அரசில் அமைப்பிலாகட்டும் அங்கெல்லாம் படை ஒரு அரசின் உறுப்பு மறுக்கப்படவில்லை. மனிதஇனம் எப்படி ஒரேநாளில் புனித இனமாக மாறமுடியாதோ அதுவிதம் படையில்லா ஆட்சியும் அமைதல் அரிதோ அரிது. எனினும் படைகொண்ட நாடு கடைகெட்ட வழியில் சிந்திக்கக் கூடாதென்பது தான் நல்லறிவாளர்களின் விருப்பமாகும்.

இன்றைய நிலையில் படைபலம் அரசை மிருக வெறி நிலைக்கு இழுத்து செல்லுவதுதான் வேதனையாகும். போட்டியும், பொறாமையும் மனிதப் பண்பை, அன்பை விழுங்கி வருகின்றன. கருடனும், கருநாகமும் போல் அரசுகள் மாறி வருகின்றன. இதனால் நாம் அறியக் கூடியது ஒன்றுள்ளது. விஞ்ஞான விருத்திமட்டும் மனித வாழ்வுக்குப் போதியதன்று. மெஞ்ஞானம்! மனிதப் புனிதன் புத்தரும் மனிதநேயர் கிறிஸ்த்துவும் மகான் காந்தியும், நபிநாயகம் அவர்களும் காட்டிய வழியில், சித்தாந்த, உபநிடத நெறிகளை இலகுவாக நாம் மறந்து விட்டகாரணத்தால் உலகிலே பெரியதொரு நெருக்கடி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தோன்றியுள்ளது. உலகை அழித்து மறைக்கும் ஊழிக்கால சிவன்போல சக்திமயமாய் அணுகுண்டும் நீர்வளிக் குண்டும் புறப்பட்டிருக்கின்றன செருக்களத்தில் மார்பும், மார்பும் காட்டி மறப் போரிட்டு வீரமரணம் எய்தும் அறப்போர் பழங்கதையாகி விட்டது. கோடிக் கணக்கான மக்களின் சாம்பல் மேட்டில் நாங்கள் பூசிணியாக வாழலாம் என்று எண்ணுகின்றனர் வல்லரசுகள்! இவர்களின் போக்கை மானிடசமுதாயம் ஒப்புக்கொள்ளப் போகிறதா? முக்கால முனர்ந்த முனி என்று சொல்லப்படும் இராஜாஜி (இராசகோபாலச்சாரியர்) தொண்டை வறளக் கத்தினார்கள். உலகமே வேண்டாம் இந்த விடிவுப்பரீட்சை என்று கூறின. அந்த வரட்டுக் கௌரவம் கொண்ட மூர்க்க மதியரசுகள் கேளாக் காதாகி விட்டன. இன்றேல் விஷகுண்டுகளை வெடித்துப் பார்ப்பார்களா? இப்படி இவர்கள் போர்க்களத்தில் உபயோகிக்கும் அணுசக்தியால் ஏற்படும் பயன்தான் என்ன? அவர்கள் எந்த நாட்டைப் பிடித்தாள விரும்பினார்களோ, அந்த நாட்டை பிடித்து விடுவார்கள் தான் ஆனால் அந்நாடு ஊழல் கூத்தாடும் சுடலை நடனத்துக்குத்தான் பயன்படும்.

திருவாளர்கள் குருசேவும் ஐசனோவரும் சிவம் சக்தியாக நின்று ஊழிக் கூத்து ஆடுவார்களே தவிர, அதைப் பார்த்து சுவைக்க, கைதட்ட ஓர் உயிர் கூட இருக்காது அப்போது இத்தகைய அழிவினை நிகழ்த்தவல்ல சக்திதான் அணுசக்தி. இரண்டாவது உலகப் போரிலே இரண்டு இலட்சம் மக்களை எதுவுமறியா அப்பாவி மக்களை அணுகுண்டுப் பூதம் விழுங்கி ஏப்பம் விட்டது. அது தற்போது சற்றுக் கண்ணயர்ந்து இருக்கிறது. அணுசக்தியின் ஆற்றலை, அதன் அழிவை நாம் ஒரு காட்சியாக அனுபவித்தால் விளக்கமாக இருக்கும்.

## அணுகுண்டு:

குண்டு யப்பானில் வெடித்தது, கோடி சூரியப் பிரகாசமாக பேரொளி எங்கும் பாய்ந்தது. பார்த்தவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் உடன் குருடாயின அண்டம் கிடுகிடுக்கும் ஒலி கிளம்பியது, காதுகள் உடன் செவிடாகின வான் பரப்பிலே 5 கல் உயரத்திற்கு ஒரு நெருப்பு மண்டலம் பாய்ந்து கார்மேகங்களைச் சுட்டெரித்தது; வானளாவிய எ.்.குக் கோபுரங்கள் உருகி ஆவியாயின; ஒரு மைல் நீளத்திற்கு பூமிதன் வாயைப் பிளந்து உயிரினங்களை விழுங்கித் தீர்த்தது. சில நாடிக்குள் கோவென்று கோரப்புயல் அடித்தது. கண்ணிழந்தோர், காலிழந்தோர் லட்சம் வரும். இரண்டு லட்சம் ஜீவன்கள் மண்ணோடு மண் ஆனார்கள். மண்கூட உருகி பளிங்காகி அவர்களுக்கு சமாதி கட்டியது. இந்த அழிவு மானிடத்தின் அவலத்தை வெற்றித் தென்றலாக கருதினர் மேலை நாட்டினர் என்னே பரிதாபம்! என்னே மானிட நேயம்!

**குற்றம் மனிதன் மேல்:**

சக்தி என்பது ஒரு அடிமையைப் போன்றது. ஆக்கியவனையே பதம் பார்க்க வல்லது. மனிதனின் அறிவாற்றல், போர்வெறி ஆகியவற்றுக்கேற்ப அணுசக்தி இட்டவேலைகளை யானைபோல் செய்கிறது. உள்ளமேயில்லாத சடப்பொருள் சிந்தனை செய்ய முடியாத சடம், சிறியஅணு. அவ்வணுவில் அடங்கியுள்ள மகாபெரிய சக்தி எவ்வழியில் பயன்படுத்தப்படுகிறதோ அதன்படி நன்மையும் கெடுதலும் மனித சமுதாயத்துக்குக் கிடைக்கின்றன. அணுசக்தியின் விளைவு அதனைப் பயன்படுத்தும் மனிதனைப் பொறுத்ததாகும். ஆக, இத்தகைய கொடுமை வாய்ந்த அணுசக்தி எழில்மிகு உலகையும் ஏற்றம் பெற்ற மக்கள் சமுதாயத்தையும் ஆக்கவும் உதவலாம்.

அணுசக்தியை நாம் நல்லவழியில் மனித வாழ்வுக்குப் பயன்படும் வகையில் உபயோகித்தால், பாலைவனம், சோலைவனம் ஆகும். காய்ந்த வயிறு காணாது போகும். அறம் விளைந்து விண்ணும், மண்ணும் விருந்துண்ணும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணுசக்தியின் பயன்:

அணுசக்தி மூலம் நாம் உடனடியாகப் பெறவல்ல பயன் என்றும், எதிர்காலத்தில் பெறவல்ல பயன் என்றும் பயன்களை இருவகையாகப் பிரிக்கலாம்.

## மின்சார சக்திக்குப் பதில்:

இன்று உலகம் சமையல் செய்வதிலிருந்து செய்மதி அனுப்புவது வரை பயன்படுத்தப்படுவது மின்சக்தியாகும். மின்யுகமான இவ் யுகத்தில் இன்னும் மின்னொளி பெறாத நாடுகள் பல மின்சார வண்டிகளையும் பார்த்திருக்காத மக்கள் பலர்.

நீர்வீழ்ச்சியிலிருந்து பெரும்பாலும் மின்சாரம் பெறப்படுவதால் பேராறுகள் ஓடாத நாடுகளில் மின் பாவனை மிகக் குறைவு. இதனால் ஆறில்லா ஊர் மக்கள் பொறியியல் துறையிலோ, வாழ்வு அனுபவத்திலோ பின்தங்கியிருப்பது வியப்பல்ல. மின்சக்திக்கு மாற்றாக அணுசக்தி செயற்படுத்தப்பட்டு விட்டால் நாடுகள் அடையும் பயன்மிக அதிகமாகவும் செலவு மிகமிகக் குறைவாகவும் இருக்கும். மின்சாரத்திலும் பல்லாயிரம் பங்கு வேலைகளை அணுசக்தி கொண்டு செய்து முடிக்கலாம்.

இன்று எண்ணெய் சரி, மின் இவற்றால் இயங்கும் யந்திரங்களனைத்தும் அணு விறகின் வெப்பத்தினால் இயங்க முடியும். எந்திரங்கள் மனிதனுக்குத் தரும் சுகவாழ்வு மேலும் ஒருபடி மேலாக அவை சக்தியால் ஏற்படும். அணுசக்திக்கும் நிலக்கரிச் சக்திக்கும் உள்ள வேறுபாடு முன்பே சொல்லப்பட்டிருக்கிறது.

மூலப் பொருட்கள் இல்லாமையாலும், ஆராய்ச்சித் துறை அபிவிருத்தி யடையாமையாலும் பின்தங்கியுள்ள நாடுகள் கைத்தொழில் மயமாவதற்கு இவ்வணுசக்தி கைதரும். வாழ்க்கைச் செலவு குறையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி வேகம் கூடும். இதற்காக இந்தியா பெரியதொரு அணு உலையை உருவாக்கி வருகிறது.

மேலும் மத்திய கிழக்கிலே எண்ணெய் ஆலையால் இன்று உருவாகிவரும் யுத்தநிலை மாறிவிடும். நாடு இன்னொரு நாட்டைப் பிடிக்கும் எண்ணம் தோன்றாது. அணுசக்தியின் உதவியால் ஏந்திரங்களின் தேய்மானம், உட்கருவிகளில் ஏற்படக்கூடிய பழுதுகள் என்பன இலகுவாகக் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கும். றேடியக் கிளர்ச்சி வாய்ந்த அணுசக்தி பொருந்திய அயத்தை எஃகுடன் கலந்து யந்திரங்கள் செய்யப்படுகின்றன. இந்தக் கலவையிலிருந்து கம்மாக் கிரணங்கள் வெளிவருகின்றன. இக்கிரணங்கள் உட்புறத்தில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டிக் கொடுக்கின்றன. என்னே விஞ்ஞானத்தின் புதுமை!

## உடற் சுகத்தில் அணுசக்தி:

கான்சர் **(CANCER)** மயிர்களை உதிரச்செய்யும். மனிதனை மலடாக்கிவிடும். தீராப் புண்களையும் ஆறா வியாதிகளையும் உண்டாக்கி மனிதனை அணுசக்தி கொன்றுவிடும் விஷத்தைக் கூட அளவறிந்து உபயோகித்தால் அது மருந்தாகும் என்பார்களே. அதேபோல இவ்வணுசக்தியையும் அளவாகவும், வீரியக் குறைவாகவும் ஆக்கிப் பயன்படுத்தினால் தீராத வியாதிகள் எல்லாம் தீரலாம். ஆக்கி, காத்து, அழிக்கும் தெய்வமாக அணுசக்தி மாறிவிடும்.

கொலைத் தொழிலைப் புரியவல்ல றேடியம் அளவறிந்து உபயோகிப்பதால் கான்சர் போன்ற கொடிய வியாதிகள் மாறிவிடும். இறேடிய அணுசக்திகளிலிருந்து வெளிவரும் கம்மாக் கிரணங்கள் நோய் வாய்ப்பட்ட அணுக்களைத் தாக்கி அழித்து சாவின் வாசலில் இருந்த


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனிதனைக் காப்பாற்றுகிறது. றேடிய மருத்துவம் **(RADIAM THEROTY)** எல்லா நாடுகளிலும் எல்லாரும் பெற்றுக் கொள்வதரிது. இப்பொருள் மிக அருந்தலாக இருப்பதால் அதன்விலையோ அதிகம். இதற்குப் பதிலாக இனி அணுவின் கருப்பிளப்பால் ஏற்படும் கதிர்களை உடலுள் பாய்ச்சி குணப்படுத்தலாம். குறைந்த செலவுடன் கிராமங்கள் தோறும் இம்மருத்துவ நிலையங்களை நிறுவலாம்.

றேடியச் சிகிக்சையினால் நோய் மாறியது போலத் தோன்றினாலும் அதன் கதிர்வீச்சு உடலில் தங்கி மேலும் உயிருக்குப் பாதகமான விளைவுகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் காரணம் றேடியக் கதிர்சக்தி குறைந்து செல்ல கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளாவது செல்லுமாம். சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட செயற்கை றேடியம் தன் சக்தியை விரைவில் இழந்துவிடுமாம் இவ்வழியில் அணுசக்தியின் பயன்பாட்டை அறிவியல் மேதைகள் இடையறாது ஆராய்ந்து வருகிறார்கள்.

உணவோடு கலந்து றேடியக் கிளர்ச்சியுள்ள அயோடின் ஒன்றிய மருந்துகளைக் கொடுப்பதால் கண்டல் போன்ற நோய்கள் மாறிவிடுகின்றன. அயோடினது சீவியகாலம் சுருக்கமானது. ஆகவே இவ்வழி இலகுவானது கொடுக்கப்பட்ட மருந்து மக்னீசிய உப்பாக மாறிவிடுகிறது. **(MAGNESIUM)** இதனால் கெடுதல் இல்லை.

## உறுப்புக்கள் அழுகல், அறுவை மருத்துவம்

உடலின் ஒருபகுதி அழுகிவிட்டால் (புற உறுப்புகள்) அழுகிய காய்ப் பகுதியை வெட்டி எறிவது போல எறியவேண்டும். இல்லாவிட்டால் புடலங்காய் அழுகி இத்து விழுவதுபோல உடலின் அனைத்துப் பகுதியிலும் நோய் தாவி மனிதனைச் சாவடித்துவிடும். சிலநேரங்களில் அறுவை வைத்தியர் கூட **(SURGEON)** எந்த இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்ட வேண்டும் எனக் கண்டு பிடிப்பது கஷ்டம். இதற்கு அணுசக்தி ஆய்வு உதவியளித்துள்ளது.

கறியுப்பில் சோடியம் **(SODIUM)** என்னும் மூலகம் **(ELEMENT)** இருக்கிறது. சைக்கிளோட்டிராண் **(CYCLOTRON)** உதவியால் உப்பை றேடியக் கிளர்ச்சி உள்ள தாக்க முடியும். இப்படி மாற்றிய உப்பைச் சேர்த்து உணவைப் பணியாளருக்குக் கொடுத்தல் வேண்டும். இவ்வுப்பு இரத்தத்துடன் சேர்த்து உடல் முழுவதும் செல்லும். செல்லுமிடங்களிலெல்லாம் அந்த உளவாளி உப்பு அணுக்கள் வெடித்துக் கம்மாக் கிரணங்களை வீசும். அப்போது அழுகிய உறுப்பில் எண்கருவியை வைத்தால் எந்த அளவில் இரத்தோட்டம் நின்று விடுகிறது என்று மருத்துவர் காணமுடியும். அறுவை மருத்துவத்தில் அணுசக்தி ஆய்வு துணைபுரிந்து வருகிறது. பல் மருத்துவத்துறையிலும் இவ்வழி துணைபுரிகிறது.

**நடைபெறலாம் நாளை:**

அணுசக்தியின் ஒரு பாசமான ஏலமூக் கதிர்களை அளவறிந்து பாய்ச்சுவதால் பிறவிக் குருடர்களுக்கும் கண்கொடுக்கலாம். இதே முறையினால் கண் ஒட்டுதல் அறுந்த உறுப்புக்கள் உடைந்த எலும்புகள், வேலையை இழக்கவிருக்கும் இருதயம்**(HEART)** என்பவற்றை மீண்டும் இயக்குதல் என்பன அணுசக்தியினால் விரைவாகவும், இலகுவாகவும் சரிசெய்யக்கூடிய காரியங்கள் தான்.

அணுசக்தியில் பிறக்கும் ஒலி அலைகளைத் தூண்டி செவிட்டுத் தன்மையை நீக்கிடலாம். மேலும் பிளேக், அம்மை போன்ற வியாதிகளுக்கும் இச்சக்தி பயன்படுத்தப்படலாம். அணுசக்தியின் பயன்பாட்டால் கிடைக்கும் கலவைகளை, பூச்சு மருந்துகளை, குளிசைகளை நாம் உபயோகித்து சுகம் பெறும் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு தூரத்திலில்லை. இவற்றை கண்டு பிடித்து மனிதனைச் சாகாவரம் பெற்றவனாக்கும் விஞ்ஞான வித்தகர்களுக்கு விழா வெடுக்கும் காலம் தான் வரத்தான் போகிறது.

## கற்பனையின் பாற்பட்ட பயன்கள்:

மழையற்ற பாலை நிலங்களாலும், பசுந்தரைகளாக மாற்றி மானிடத்தின் பசியினை ஆற்றிடலாம். கடல் நீரினை கொதிக்கக், குண்டுவீசி ஆவியாக்கி செயற்கை மழை பொழிவிக்காலம். கடல் நீரினை சுலபமாக நன்னீராக்குதல் துருவப்பிரதேசம் பனிப்பாறைகளை உருகச் செய்து அதோடும் விளைநிலமாக்குதல் மனிதனின் நிறபேதங்களை இச்சக்தி கொண்டு ஒழித்துவிடல்! பெண்கள் விரும்பாத உரோமக் கட்டுக்களை நீக்கி விடுதல் எல்லாவற்றிற்கும் மேலாக, எக்ஸ்ரே மூலம் உள்ளூறுப்புக்களை பார்க்கும் முறைபோய் அணுக்கதிர் வீச்சின் முன் மனிதனை ஒரு கண்ணாடிக்குடுவை போலாக்கி அவரது சகல உறுப்புக்களையும் ஒரேயடியாக நேரில் பார்ப்பது போல பார்க்கக் கூடியவாறு செய்தல். ஒரு மனிதன் பேசுவதை, அவன் உருவினை, பார்க்கும் இன்றைய ஒலி, ஒளி அமைப்புக்களுடன் இன்னொருபடி மேலாக ஒரு மனிதன் எண்ண அலைகள் மற்ற மனிதனின் நினைவலைகளுடன் இணைதல். அதாவது ஒருவர் என்ன நினைக்கிறார் என்பதை மற்றவர் அறிதல் ஆகிய விஞ்ஞான வித்தைகளை அணுசக்தியின் நல் விளைவாக நாம் ஏன் கற்பனை பண்ணக்கூடாது.

**“வாழ்க மனித இனம்!”**

**“வளர்க ஆய்வு!”**

**பெருக “அணுசக்தியின் பயன்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சீர்திருத்தக் கொள்கையில்
## சுகனா.....

அமுதவிழாக் காணும் சுகணா அவர்கள் ஒரு சமூக சீர்திருத்தவாதி என்பதற்கு அவர் சார்ந்த வாழ்க்கை அனுபவங்கள் கட்டியங் கூறுவன. இந்த அனுபவ ரீதியான சுகணா அவர்கள் தான் சந்தித்த சாதிக் கொடுமைகள், வர்க்க பேதங்களை கருப்பொருளாக வைத்துச் சிறுகதைகள், குறுநாவல், நாடகங்கள், கவிதைகள் புனைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

அவருடைய கொள்கைகள், குறிக்கோள்கள் என்பவற்றை அடையாளப்படுத்தும் முகமாக அன்னாருடைய அமுதவிழா மலரில் இருசிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இன்றைய சிறுகதை இலக்கியம் சார்ந்த அமைப்பில் அவை எடுபடாவிட்டாலும் அவர் எழுதிய காலப்பகுதியான ஈழகேசரிப் பத்திரிகைக் காலச் சிறுகதைகளினூடே ஒரு குறுங்கதையாக இவற்றை மதிப்பீடு செய்யலாம்.




பொ.சதானந்தன்
மலர்க்குழுவின் சார்பில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கா

"ஏ முத்தையா"

"முத்தையா"

சிறைக் காவற்காரனின் குரல் வண்டியின் மூலை முடுக்கெல்லாம், எதிரொலித்து நின்றது. தப்பியோடிவிட்டான். தூங்குமூஞ்சியான ஒருவன் ஏங்கிப்போய் உளறினான்.

"தப்பியோடத்தான் வேண்டும். காதல் செய்யும் கவர்ச்சியான உடம்பினைப் பட்டினிக் காலனிடம் கொடுத்துவிட்டு, காலமெல்லாம் அக்காவுக்காக உருக் குலைந்து போன அவன் அக்காவைப் பார்க்க......"

யாழ்ப்பாணமிருந்து கொழும்புக்குச் சென்று கொண்டிருந்த புகையிரதம் மதவாச்சியைக் கடந்து "அவள் கிடக்க அவள் கிடக்க" என்ற வழமையான காம்போதி இராகத்தில் ஆலாபனை செய்து கொண்டே ஓடிக் கொண்டிருந்தது. வண்டியில் இதுவரை அரசியல்-அக்கிரமம்-பெண்கடத்து, உறவுமுறை இப்படியெல்லாம் அரட்டையடித்துக் கொண்டிருந்த சகல சீவராசிகளும் தென்றல் போல வந்த நித்திராதேவியின் ஸ்பரிசத்தில் கட்டுண்டு கிடந்தனர்.

எனக்குத் தெரிந்த கறுப்புச் சிவப்புச் சேலைகள் யாராவது இந்தப் பெட்டியில் இருக்கிறர்களா? எழுந்து நடந்தேன். அந்தப் பெரிய தூக்கத்தின் மத்தியிலே ஒரே ஒரு சீவன் மட்டும் வெளியே தலையை நீட்டி முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டிருந்தது.

"தம்பி!" இருபத்திரண்டு நிரம்பாத அந்த உருவம் ஆசையோடு என்னைப் பார்த்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெருப்புப்பெட்டி வைச்சிருக்கிறியளோ? இப்படி நான் கேட்டதும் இல்லையென்று தலையசைத்துக் கொண்டு எதிரேயுள்ள சீட்டிலே தன் பார்வையைப் பதியவைத்தது அந்த உருவம்.

யார் இவர்கள்? ஓ பிறிசினேர்ஸ்! ஆசானுபாகுவான இருவரும் கொறட்டை போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த உலக்கைக் கொழுந்துகளின் கோட்டுகள் கூட மேலேயுள்ள தட்டில் தூங்கிக் கொண்டிருந்தன இருந்து கொண்டே கிறுதா வாசிக்கும் காமாட்சி சுந்தரங்கள் எங்கே போகிறார்கள்?

எனது பார்வை திரும்பியது அவன் முகத்திலே வேர்வைத் துளிகள்! ஏக்கம் கலந்த அவனது இரக்கமான பார்வை என்னைப் பக்கத்திலே இருத்திவிட்டது. அவனது இரு கைகளும், கால்களுக்கிடையிலே மாட்டிக் கிடந்தன "தம்பி"! கையிலே ஏதாவது காயம்கீயமோ? "அப்படி ஒன்றுமில்லை" ஆனால்......................

ஆனால்?
"என் உள்ளத்திலேயுள்ள ஊமைக்காயங்கள்?"
"என்ன?"
தனது இருகைகளையும் வெளியே தூக்கி......
"ஆ! கைதியா?"
"என்னப்பா என்ன நடந்தது"? நான் பாசத்தோடு வினாவினேன். அவனது கண்கள் மடைகட்டிக்கலங்கின. நாக்குளறியது. "ஆ! கடவுளே! மரணத்திலும் கஷ்டமா?" என்று அவன் பெருமூச்சுச் சொல்லியது.

தம்பி எங்கே உன்னைக் கொண்டு போகிறார்கள்?

"கொழும்புக்கு"

"என்னூர் கொக்குவில்"

"உனக்குத் தாய் தந்தையர்"
"இல்லை! அம்மா காலமாகி ஆட்டுத்திவசம் இன்னும் முடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை"

"யாராவது சகோதரங்கள்?"

அவன் கீரிட்டுக் கத்தினான்.

துன்பத் தொட்டிலிலே மனிதனும் குழந்தையாகிறான் என்பது எவ்வளவோ உண்மைதான். விலங்கிடப்பட்ட கைகளுக்குக் கிட்டத் தன் முகத்தைச் சாய்த்துக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு...........

" ஒரே ஒரு அக்கா!"

என்னுயிருக்குயிரான அக்கா இரத்தப் பிணைப்பின் அத்தனை சக்தியும் அவன் மூச்சிலே கலந்திருந்தது.

கொறட்டைச் சத்தம் நின்றது. அவன் திரும்பி அவர்களைப் பார்த்தான். பழையபடி இராகம் தொடங்கவே அவனும் அமைதியோடு தொடர்ந்தான்.

"வாழ்க்கையிலே எனக்கொரேயொரு ஆசைதான் இருக்கு. "அப்படியென்ன?" நான் கேட்டேன்

"என் அருமை அக்காவின் சுகமான பிரசவத்தை என் கண்ணாலை".........

"இவ்வளவு பாசமுள்ள பண்பாடுள்ள நீ செய்த குற்றம்"

"டே டே முக்கியமான விஷயத்தை மறந்துபோய் விட்டேன். உன் பெயர்"

" முத்தையா"

"நான் செய்த குற்றம்!" அவன் கண்கள் மீண்டும் கலங்கின. நாக்குளறியது.அவனது களைப்பை புரிந்து கொண்டு

"தம்பி! கோப்பிவாங்கி வாறேன். பொறுத்துக்கொள்"

வேண்டாம் ஐயா" தன் விலங்கிட்ட கையைப் பார்த்துக் கொண்டே சொன்னான் இந்தப் பரிதாபகரமான நிலையில் என்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டே "இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லி எழுந்தேன்.

வண்டி ஓர் உலுக்கு உலுக்கி நான் வாங்கி வந்த அரைவாசிக் காப்பியைக் குடித்துக்கொண்டு புறப்பட்டுவிட்டது அநுராதபுரம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் சிக்னல் விழவில்லை"
இப்படிப் பேசிக் கொண்டார்கள்
நான் அவசர அவசரமாக நடந்தேன் பிரசவவேதனைப்படும் பெண்ணைப்போல மீண்டும் வண்டி முக்கித்தக்கி நகர்ந்தது. நான் அவ்விடம் வருவதற்கும்,
"அநுராதபுரம்!" "காப்பி! காப்பி!"
இந்த மன்றாட்டக் குரலுக்கும் சரியாக இருந்தது.
ஏ முத்தையா!

பிரம்ம இராட்சதர்கள் துடிதுடித்துக் கத்தினார்கள் தப்பியோடிவிட்டான்.

ஏமாந்த சோணகிரி இப்படிச் சொன்னான் எனக்குத் திகைப்பு! மறுபுரம் வியப்பு!

மற்றவன் எக்கேடு கெட்டாலும் என்ன என்று பகுத்தறிவு படைத்த மனிதனே விட்டு விட்டோடும் போது சட சம்பத்தான புகைவண்டியா இவர்களின் கூக் குரலுக்குச் செவிசாய்க்கும்.

வண்டியின் ஆட்டத்தோடு என் உடலும் ஆடி இதம் தந்தது, ஆனால் என்மனம் மட்டும் முத்தையனைச் சுற்றிச் சுற்றி வலம் வந்தது.

கொழும்புக் கோட்டையில் இறங்கும்வரை எனக்குத் தூக்கமே வரவில்லை. முத்தையன் அப்படி என்ன குற்றம் செய்திருப்பான்!

சிறைக்கைதி முத்தையன் தப்பியோடிவிட்டான். சிறீமான் இராசாச் செட்டியார் மகளின் நகையைத் திருடி, 7ஆண்டு சிறை விதிக்கப்பட்டவன். காட்டிக்கொடுப்பவருக்கு ரூபா 300 இனாம், இப்படி எல்லா நாளிதழ்களும் அடுத்த நாள் செய்தி தாங்கி வெளிவந்தன. அடுத்த திங்கள் ஊருக்குப் போனதும் எங்கும் இதே கதைதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருகாலமும் இல்லாத வசை, ஏன் பட்டினி கிடந்து செத்தால் என்ன? களவெடுக்க வேணும்" இப்படி எங்கள் வீட்டுப் பாட்டியும் அடுத்த வீட்டு ஆரோக்கியமும் பேசிக்கொண்டது என்காதில் விழுந்தது. இதுயாராக இருக்கலாம்?

சென்ற பத்து வருடமாய் வெளியூரிலே படிப்பிக்கிறேன். இந்த ஊர் இளவட்டங்களை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. கொழும்புக்கு மாறின பின்தான் அடிக்கடி மனைவி முகத்தைக் கூடச் சரியாகப் பார்க்கக் கிடைக்கிறது. அதுசரி களவு எடுத்தவன் யார்? யாரைப்பற்றி இவர்கள் பேசிக்கொள்கிறார்கள்?

"இஞ்சாருங்கோ நீங்களும் வாருங்கோவன்" அவளது மோகனவடிவு சுவர்க்க வாசலுக்கு என்னை இழுத்துச் சென்றது.
அவளது இன்னிசை பிரயாணக் கொதிப்பைக் குளு, குளு என்றாக்கியது.
"எங்கே இவ்வளவு தடல் புடல்?"
"என்ன ஒன்றுந் தெரியாதவர் போலப் பேசிறியள். ஆஸ்பத்திரிக்கு!! ஆ!"

அவளது அடிவயிற்றை நோக்கி என்கண்கள் பாய்ந்தன. பல ஆண்டுகளாக இந்தச் சிப்பி வயிற்றிலே ஒரு முத்துப் பிறக்கும் என்று அங்கலாய்த்துக் கொண்டேயிருப் பவன் நான். ஆனால் ஆண் சிங்கத்தின் வயிற்றைப் போல ஒட்டிப் போயிருந்தது அவள் வயிறு. பாவம் பெறுமாதப் பிள்ளைத்தாச்சி அங்காலையோ, இங்காலையோ என்று கிடக்கிறாளாம், முத்தையன் அப்படிச் செய்து விட்டான் என்றால் அவன் அக்காவை நாங்கள் கவனிக்காமல் விடலாமே.

முத்தையன்!

எனது நினைவுச் சக்கரம் பின்னோக்கிச் சுழன்றது. "சரிவர்" இப்படிச் சொல்லிக் கொண்டே சால்வையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதறிப் போட்டுக் கொண்டேன். முத்தையன் உனக்கு இனமா? “உங்களுக்கு எந்தநாளும் கேலிதான்” கண்ணகை தலையை வாரிக்கொண்டே சொன்னாள்.

முத்தையா என்கிற சுரங்கத்தைத் தோண்டிப் பார்க்க ஆசை கொண்டது என்மனம்.

கண்ணகை அந்த முத்தையன்?

நல்ல குடும்பத்துப்பிள்ளைதான், ஆனால் ஏழையாக்கப்பட்ட குடும்பம் அது. தகப்பன் வேலுப்பிள்ளை நல்ல உழைப்பாளி ஆனால் அவரிடமிருந்த குடிப்பழக்கம் அவர் உயிரை வாங்கி விட்டது என்று சொல்லிக் கொண்டே என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

இராமாயணத்தை என்மீது ஏவிவிட்டாள் கண்ணகை. குத்திக்காட்டிப் பேசவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் சாதுரியம் என்மனைவிக்கிருக்கிறதே என்ற பூரிப்போடு பூந்தோட்டத்திற்கு வரம்பாக்கப்பட்ட அந்த நூற்றுக்கணக்கான போத்தல்களையும் வீட்டு அலுமாரியில் குறையாகக் கிடக்கும் ஸ்பெஷலையும் ஒருமுறை பார்த்துவிட்டு...........

அது சரி

குடித்தால் இறந்துபோக வேண்டுமா?

இல்லை.

வேலுப்பிள்ளை சரியான தண்ணியிலே வந்தார். அந்த முசுப்பாத்தியிலே, டே சுப்பு நான் இறைக்கிறேன். என்னடா தண்ணி பாயாதாம்? என்று பட்டையைப் பறித்து இறைத்தார். முதல் பட்டை தண்ணியைக் கோலவில்லை. “டே டே டே” தன்பலம் கொண்ட மட்டும் அமர்த்திப்பார்த்தார். அப்படியே ஒரு தூக்குத் தூக்கி கிணற்றுள் அமிழ்த்தி விட்டது துலா!. அவரது நாற்றமெடுத்த வாயிலிருந்து மரண வாசனை வீசியது! கனகம் கனம் என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவர் வாயை மூடிக்கொண்டார்.

தாய்!

தாயும் பாயிலே படுத்துவிட்டாள். ஆண்டவன் அந்தக் குடும்பத்தை வலுவாகச் சோதித்து விட்டார். தாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்டாள். அப்புறம்,

அக்காவும் தம்பியும் அப்பம் சுட்டுச் சீவித்தனர். அவள் சுட்டுக்கொடுப்பாள். அவன் விற்று வருவான்.

அக்கா!

அவனது இரத்தப்பாசம்!

தம்பி!

அம்மாவின் அன்பு கலந்த குரல்.

முத்தையனின் படிப்பு மண்வெட்டியைப் பிடிக்கத்தான் உதவியது. அவனது பிஞ்சு உடல் கசங்கியது. உழைப்புக் கேற்ற பயனில்லை அவர்கள் வாழ்வில் களை இல்லை.

அக்கா!

தம்பி! இரண்டு சொற்களுந்தான் அவர்களை வாழ்வித்த சொற் செல்வங்கள்.

அக்காவிற்குக் கலியாணம் ஆகவில்லையோ? அதையேன் கேக்கிறியள்? கண்டியிலே புகையிலைக் கடையிலே இருந்தவனாம் கந்தசாமியை எங்கண்ணன் தான் பேசிச் செய்தவர். கனகம் நல்ல குணமானவள் மூக்கும் முழியுமான பெண் 35 வயதுக்குரித்தான கருங்காலிக் கட்டையன் கந்தசாமிக்கு இந்தத் திருமணம் ரேசிலே விழுந்த மாதிரித்தான். என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

கனகத்தின் தலைவிதியும் ஏழ்மையும் அவர்களைக் கட்டி அடித்தன தம்பிக்கு இது அறவே பிடிக்கவில்லை. என்றாலும் அக்காவின் விருப்பத்திற்கு மேல் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

நடையில் சுருதிதட்டியது. 12 மணியானால் மணிச்சத்தம் கேட்கும். உள்ளே போக முடியும் இப்போ 11.50.

“கனகத்துக்குக் கந்தசாமியைச் செய்ய விருப்பமோ” நான் கேட்டேன். இல்லை தன் தம்பிக்கு இன்னும் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது என்றே அவள்................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல அக்காவும் தம்பியும்!

நாலுமாதம் கந்தசாமி நாலுவருட வாழ்க்கையையும் அனுபவித்தான் போலிருக்கிறது! அந்தப்படுபாவிப் பயல் போனவன் திரும்பவேயில்லை. ஒரு கடதாசிகூட எழுதுவதில்லை. கம்பளையிலே யாரோ ஒரு சிங்களப் பெண்ணாம்.........

"உன்ரை கொண்ணன் செய்த கலியாணத்தைப் பார்த்தியே" இப்படிக்கிண்டல் பண்ணினேன்.

போங்கோ,

எங்கடை சமூகம் இப்படிப் பாழ்கிணத்துக்குள்ளை தானே பெண்களைத் தள்ளுகுது.

இந்த அடியைச் சமாளிப்பதற்கு நான் எவ்வளவோ கஷ்டப்பட்டேன். எனக்கு 45 வயது, கண்ணகைக்கு 31 வயது! ம்.........

ஓடிப்போன கந்தசாமி ஒரு பண்டத்தை வைத்து விட்டுத்தான் போனான் ஆறுமாதக் கொர்ப்பத்தால் அவள் பாயிலே விழுந்துகிடந்தாள். டாக்டரைக் கூட்டிவர முத்தையன் என்ன செய்வான்?

"மகனே கொக்கா" இந்தத் தாயின் வார்த்தை அவனை வேதனைப்படுத்தியது.

அடுத்த வருடம் நல்லூரிலேதான் தாலிகட்டுவதாகக் கந்தசாமி கேட்டுக் கொண்டானாம் அதுவரை தனக்குக் காலம் சுகமில்லை என்றானாம்.

முத்தையன் எத்தனையோ நாள் சாப்பிடாமல் இருந்திருக்கிறான்.

"தம்பி வாடா சாப்பிடு"

நான் சாப்பிட்டுவிட்டேன் அக்கா நீ சாப்பிடு,

உண்ணானைச் சாப்பிட்டேன்.

இப்படி எத்தனையோ நாட்கள்

இந்தா அக்கா ஊறுகாய்!

அக்கா மாங்காய்.

இப்படி அவன் அக்காவிற்காகவே வாழ்ந்தவன். கனகம் அடிக்கடி சாப்பிடாமலே இருந்து வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உதிரமெல்லாம் கந்தசாமியின் திருஉருவத் திற்கு உணவாக அவளுக்கு மட்டும் உணவு.........?

பாவம் ஒன்பது மாதம்

வீழ்ந்து விட்டாள் படுக்கையில்.

முத்தையன் யார் யாரிடமெல்லாமோ கை நீட்டினான். தன் பெரிய தகப்பனிடம் மன்றாடிக் கேட்டான்.

அக்கா எப்படியாவது அந்தமருந்தை வாங்கி வருகிறேன் அது வரை அடுத்த வீட்டுத் தங்கம்மா இங்கே துணையாக இருப்பார். என்று சொல்லி விட்டுப் புறப்பட்டவன் தான் அடுத் நாள் கோட்டிலே மறியற் கூண்டில் நின்றான் முத்தையன்.

அவன் செய்த குற்றம்?

"காவாலிப்பயலே உன்னை நம்பி 10 ரூபாவல்ல 10 வெள்ளைச்சல்லி கொடுப்பேனோ" என்று பெரிய தகப்பன் பேசினானாம் இந்தப் பேச்சு முத்தையனை விரத்தி கொண்ட வனாக்கி விட்டது. வீட்டிலே அக்கா மரணத்துடன் போராடுகிறாள். அவன் வெளியே மானத்துடன் போராடுகின்றான். அக்காவைத் தவிர அவனுக்கு உலகம் ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை.

இராசச் செட்டியார் மகள் அப்போதான் பாடசாலையி லிருந்து வந்தாளாம்! அவள் கழுத்திலே கோலம் போட்ட "தங்கச் செயின்" அவனது மனத்திரையில் நிழலாடியது.

தான் செய்வது திருட்டுத்தான் என்பதை முத்தையன் அறியாமலில்லை. அவன் கைக்கு அந்தச் செயின் அகப்பட்டது. ஓடினான்! கள்ளன் கள்ளன்! ஆ ஐயோ! பிடி! உலன்தான் நாலா பக்கமும் நெருங்கி வந்து விட்டார்கள். அவனது கால்கள் பின்னிக்கொண்டன. மரம் போல நின்று விட்டான்.

அவன் வாங்கிய அடி அவனை வேதனைப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. கேவலம் "கள்ளன்" இந்த வார்த்தை அவனைக் கொல்லாமற் கொன்றது.

கோட்டிலே அவன் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டான். ஐந்து வருடச் சிறைத்தண்டனை இதைக்கூட அவன் தன் பிழைக்கு பிராயச்சித்தமாக வரவேற்றுக்கொண்டான். ஆனால், அக்கா

ஆஸ்பத்திரி வாசலில் கால் வைக்கவும் மணி டனார், டனார் என்று ஒலித்து ஓய்ந்தது.

கனகம் கண்ணகையைக் கண்டதும் அவளது கண்கள் முத்துச் சொரிந்தன. அந்த முத்து ஒவ்வொன்றும் தம்பி தம்பி என்று சிணுங்கிக் கொண்டே தலையணையில் சங்கமாயின.

பிரசவவேதனையென்பது மரணத்தோடு போராடுவது தான். இந்த மரணப் போராட்டத்தில் வெற்றியீட்டும். பெண்மையை சத்தியின் வடிவம் என்பது எவ்வளவோ உண்மையானது இப்படி எண்ணிக் கொண்டே

"கனகம் இப்ப எப்படியிருக்கு"

இரத்தக்கொதிப்பு

இப்படி டாக்டர் சொல்லியிருக்கிறார்.அக்கா! முத்தையா? என்று வாய் ஓய்வதற்கிடையில் நர்ஸ் ஒருத்தி கடிதத்தோடு வந்து நின்றாள்.

கனகம் அதனை அவசர அவசரமாகக் கிழித்துப் படித்தாள் என் ஆசை அக்காவுக்கு,

அன்புத்தம்பி முத்தையன் எழுதுவது,

அக்கா!

உன்னை அநாதரவாக விட்டுவிட்டுப் போய்விட்டேன் கேவலம் ஆண் மகனுக்குப் பிறந்தது. ஒரு அக்காவை ஒரேயொரு அக்காவைக் காப்பற்ற திறனற்றவனாக இருந்து விட்டேன் அக்கா இதுவரை என் மனதறிந்து ஒரு தீமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் நான் செய்யவில்லை. உனக்கு மருந்து வாங்கப் போன நான் செய்த குற்றம் என்றும் மறையாது. ஆனால், உன்வயிற்றில் துடித்துக் கிடக்கும் என் ஆசை மருமகனை என் கண்ணால் காணக் கொடுத்து வைக்கவில்லை. உலகச் சிறையிலே வாடுவதை விட இந்தச் சிறையிலே இருப்பது எவ்வளவே நல்லது.

அக்கா எனக்கு மரண தண்டனை விதித்தாலும் அதை மகிழ்வோடு ஏற்றுக்கொள்ள இருக்கிறேன். ஆனால், உன் இன்பத் தாய்மையை என் கண்ணாலே கண்டுவிட்டுத்தான் நான் அகப்பட இருந்தேன் சங்கார காலத்து ஆலயமணிபோல ஆசுப்பத்திரி மணி ஒலித்தது. இருபத்தைந்து சதத்தை ஈரேழு புவனபோகமாகக் கருதும் அந்தக் காவற்காரன் கத்தினான்.

"மணியடித்து எவ்வளவு நேரம்"

அடுத்த நாள் இதழ்கள் எல்லாவற்றிலும் முத்தையன், அலாதியாக முத்தையனின் திருவுருவப்படமுமிருந்தது. அவனுக்குக் கிடைத்த பத்து ஆண்டு கடுழியச் சிறை பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கனகம் பாவம் எப்படியிருக்கிறாளோ? பார்ப்பதற்காக ஓடினோம் ஐயோ அவளைச்சுற்றி ஆசுப்பத்திரியே நின்றது. இரண்டு நிமிடங்களுக்கு முன்பே அவள் இந்த அநியாய உலகத்தை விட்டுப் போய்விட்டாள்!

கண்ணகை சகோதரர்களென்றால் இப்படியல்லோ இருக்கவேணும். இப்படி நான் சொன்னேன்.

ஒப்பாரி வைக்காமல் கண்ணகையின் துயர் தீராது போலிருந்தது,

வெளியே "ஈழநாடு சுடச்சுடச்செய்தி"

இராணுவத்தின் மிருகத்தனம்! தந்தை நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைது செய்யப்பட்டார்.

என் கையிலிருந்து பத்துச் சதம் பறந்தது. ஈழநாடு என்கைக்கு வரமுன்பே, கண்ணகை, அக்காவுக்காக வாழ்ந்த முத்தையன் எமக்காக வாழும் இந்தக் காந்தி நல்லவர் களுக்கு இந்த உலகம் தரும் பரிசு சிறை.

அடுக்கடுக்காக வந்த துன்ப நிகழ்ச்சிகளால் நாம் ஊமையானோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது 1962, 1963ம் ஆண்டுகளில் மாணவர் ஏடாக என்னால் பிரசுரம் செய்யப்பட்ட முத்திங்கள் இதழாக வெளிவந்த ஏடுகளில் 3வது இதழாக வெளிவந்த **"கண்கள்"** என்ற இதழில் என்னால் எழுதப்பட்ட பின்வரும் ஆக்கங்களான,

**"தமிழ்ப்பொங்கல்"** ஆசிரியத் தலையங்கம் மற்றும் மறத்தமிழன் என்ற புனைபெயரில் என்னால் எழுதப்பட்ட **"வாழிய சிங்களம்"**

**"நீதிதேவன்"** என்ற புனை பெயரில் எழுதப்பட்ட **"மேற் கோட்டு விசாரனை"**

**"இராசி"** ஏன்ற புனை பெயரில் எழுதி வெயிடப்பட்ட **"புதுச்சோறு"** சிறுகதை

**"கதிரவன்"** என்ற புனை பெயரில் எழுதப் பெற்ற **"திருமணம் செய்வதெப்படி?"** என்கின்ற இலக்கியக் காட்சி

ஆகிய இவைகள் எல்லாம் என்மனத் தெழுந்து பேனாவினால் வெளிவந்தவையே.

இவற்றில் புதுச்சோறு என்ற சிறு கதை மூலப்பிரதி கண்டெடுக்கப்படாமையால் 2002ல் இக்கதை பிரதி பண்ணப்படுகின்றது.

"உலகம் என்பது ஓர் ஏமாற்றம் நிறைந்த விசித்திரக் குகைதான் சிப்பிகள் முத்தைக் கொடுத்துவிட்டு இறந்து போகின்றன. அது போலவே தொழிலாளர்களும் உழைப்பைக் கொடுத்து விட்டு..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சோறு

"ஆச்சி. . . பசிக். . . . குது" என்று விக்கிக்கொண்டு இருந்தான் சிறுவன். அவனது இரண்டு கைகளும் கண்களைச் கசக்கி வற்றிப் போய்விட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தன. பொன்னியின் ஒரு தொடையிலே அவன் தலையைச் சாய்த்திருந்தான் "அப்பு எழும்பணை அடுப்பைத் தள்ளவேணும்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் பொன்னி.

கோடிப்புறத்திலே அண்டாவில் சோறு அவிந்து கொண்டிருந்தது. "எடி பொன்னி அந்த அண்டாவைப் பார்த்துக் கொள் அதுக்கு எரிக்கவேணும். கந்தப்புவும் நிக்கிறான் நாங்கள் கீரிமலைக்கு கல்லுப் போடப் போறம்" என்று சொல்லிக் விட்டுப் போய்விட்டார் மயில்வாகனம். பொன்னி "அதுக்கென்னவோ" என்று தன் பழக்கமான மரியாதையோடு சொல்லி எழுந்தாள்.

மூச்சுப் பறிந்த காலியில் கையாள் மாதிரி ஆகி விட்டாள் பொன்னி! அவளது கட்டுமட்டான மேனி காத்தான் போனதோடு போய்விட்டது. இரண்டு தேங்காய் சிரட்டையை அடுப்பினுள் தள்ளினாள். காற்றை தன் மூச்சாக உள்ளுக்கு இழுத்து அடக்கி ஊதினாள். இரண்டு நாள் அன்னத்தைக் காணாத அவள் உந்திக் கமலத்தை அம்மூச்சு தாக்கி அழுத்தியது விறகுக் கட்டையோடு போட்ட சண்டைக்குப் பிறகு பொன்னி வெற்றி பெற்றாள். தாழ்வாரத்துக்கு வந்தாள். சிரட்டையை நொறுக்கி எரிக்கப்பார்த்தது நெருப்பு சிரட்டையோ சீறிச்சினந்து கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவனின் அடிவயிற்றை எரித்துக் கொண்டு இருந்தது பசி! குடலைக் குடல் தின்கின்ற பசி! படுக்கப் போகுமுன் பனங்கட்டியைக் கடித்து ஒரு சிரட்டை தேநீர் குடித்த பின் இதுவரை அவன் எதையும் சந்திக்கவில்லை. "வா இண்டைக்கு அங்கே புண்ணியம் சோறு வாங்கித் தாறன்" என்று ஆசைகாட்டி அழைத்து வந்தாள் பொன்னி.

வழியிலே வேறோர் சிறுவன் அப்பம் வாங்கிக் கொண்டு போனான். காகம் ஒன்று தொடர்ந்து அவனை வட்டமிட்டது. காகம் "லபக்" என்று வீழ்ந்து பாதியப்பத்தைப் பிடுங்கிக் கொண்டு பறந்தது. இதனைக் கண்ட பொன்னி காகத்தைத் துரத்த ஓடினாள் காகத்தின் வாய்க்கெட்டியது கைக்கெட்டவில்லை. அதிட்ட மற்ற அந்தக் காகம் அப்பத் துண்டை தவற விட்டு விட்டது. பொன்னியின் செல்வன் அதை ஆசையோடு எடுக்கக் குனிந்தான். அதனை எடுத்து மண்ணை ஊதிவிட்டு மகனுக்கு கொடுக்கலாம் என்று ஓடினாள் பொன்னி பாவம்! அந்தச் குட்டை பிடித்த பெட்டை நாயுந்தான் இரண்டு நாளாக எதுவும் கிடைக்காமல் வீட்டுத் தாழ்வாரத்தில் அவர்களோடு அவர்களாய் படுத்துக் கிடந்தது. போதாக் குறைக்கு மூன்று குட்டிகளுக்கும் தாயாகும். பாவத்தையும் செய்திருந்தது. அணிவகுப்பாக பொன்னியின் பின்னே அவைகளும் புறப்பட்டு வந்தன. மூன்றடுக்குப் பெட்டியைப் பொன்னி தலையிலே வைத்தால் எச்சில் இலைக்கு வழியுண்டு என்பது அந்த நாய்க்கு பழக்கமாகி இருந்தது.

பொன்னி தலையிலே பெட்டியை வைத்ததுதான் கூனிக் குறுகிக் கிடந்த நாய் எழுந்து சோம்பலை முறித்துக் கொண்டது. பின்தன்வீட்டுக்காரியை ஒருமுறை வலம் வந்து அவள் கால்களை நக்கி அவளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டது. பட்டினியின் கோரரூபத்தைக் கண்டு சகிக்காதவளாய் நடந்து கொண்டிருந்தாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் அழுகை ஓய்ந்து பசியை மறந்து பின்னே வந்த நாய்க்குட்டிகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். மனிதனுக்கு இயல்பாய் உள்ள கலை உள்ளம் அவனை எங்கோ அழைத்துச் சென்றிருக்க வேண்டும். மீண்டும் பசி! பூமிக்கு வந்துவிட்டாள் இடுப்பிலிருந்த மகனை இறக்கிவிட்டு காகத்தின் பின்னே ஓடிய பொன்னி திரும்பி வருவதற்குமுன் விழுந்த அப்பத்தை நாய் கௌவிக்கொண்டது. "டீ, டீ" என்ற பொன்னியின் குரலை அது சட்டை செய்யவில்லை. பசி காதை அடைப்பது மனிதருக்கு மட்டுந்தான் என்று எண்ணியிருந்த பொன்னிக்கு அந்தப் பசி! காதடைக்கிற பசி உயிரினம் அனைத்துக்கும் தான் என்ற உண்மையை அன்று அறிந்து கொண்டாள்.

தேயிலைச் சாயத்தை விழுங்கி எரியும் வயித்தை தணிக்க பொன்னியால் முடியும் நாய்க்கு அந்த வாய்ப்புக் கூட இல்லையே.

அக்கம் பக்கத்து வீட்டுக்காரர் கூட அப்படி ஒன்றும் குபேரன் வீட்டுச் செல்வர்களல்ல. அன்றன்று சட்டியைக் கழுவிக் குடிக்கும் ஏழைகள். அந்த வட்டாரத்திலே பொன்னர் தான் சாடையான காசுக்காரன்! அவர் மனைவியுங்கூட அடுக்களைத் திறப்பைப் பொன்னரிடம் கொடுத்துவிட வேண்டும். அந்தத் திறப்பு பாதிரிமாரின் கழுத்திலே மின்னும் சிலுவை போல பொன்னரின் அரைஞான் கழுத்தில் ஆடிக் கொண்டிருக்கும்! இந்தக் கருமிகம் நிறைந்த ஊரிலே நாய்களுக்குக் கூட பட்டினிதான் வரப்பிரசாதம். ஏமாற்றம் அடைந்த சிறுவன் தாய் முகத்தைப் பார்க்க, தாய் கண்கலங்கியவளாய் நாயைப் பார்த்துக்கொண்டு நின்றாள். இதயத்தின் மூலையில் இருந்த இரக்கம் அவள் கண்கள் மூலம் அந்த நாயின் மீது பதிந்தது. பாவம்! இரவிரவாக அந்த மூன்று குட்டிகளும் தாயின் சுனையில்லாத முலைக் காம்புகளை ஈத்தலினால் வேதனை தாங்காது அடிக்கடி வீட்டைச் சுற்றி எழுந்தோடுவதும், தாய்மை உணர்வால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் அவற்றை அணைத்துக் கொண்டு படுப்பதுமான காட்சி பொன்னியைக் கருணை வடிவாக்கியிருந்தது. அந்த அப்பத்துண்டினைக் குட்டிகளுக்கு கொடுக்கப் போகிறது என்று பொன்னி எண்ணினாள் குட்டிகள் தாயைத் தொடர்ந்து வாலை ஆட்டின. ஆனால் தாய் நாயோ "லபக்" கென்று விழுங்கித் தீர்த்து விட்டது.

ஏமாற்றம்! உலகமென்பது ஏமாற்றம் நிறைந்த ஒரு விசித்திரக் குகைதான். இந்த இடத்திலே தான் மனிதன் மிருகங்களிலும் மேம்பட்டவன் என்பதைக் காட்டிக் கொள்கிறான். பொன்னி தன் பசியை மறந்து மக்களுக்காக எச்சிலுக்குத் திரிகிறாள். நாயோ தன் வயிற்றை மட்டும் பார்த்துக்கொள்கிறது. பசி வந்ததும் தன் வயிற்றில் பிறந்த குட்டிகளைக் கூடப் பார்ப்பதில்லை. இதனையெல்லாம் நினைக்கும்போது மனிதன் மிருகம் என்று தானே சொன்ன வாக்கியம் அவளுக்கு ஞாபகம் வந்தது.

"கந்தசட்டிப் பாறனைக்கு ஏதும் தருவார்கள் என்று பொன்னியும் நாலைந்து பேரும் வெளியில் இருந்தார்கள். காத்திகேயர் நாலைந்து மணித்தியாலையத்தின் பின் வெளியே வந்தார். பல்லைக் குத்தி விழுங்கிக் கொண்டே சொன்னார் "ஏன் இருக்கிறியள்?" கந்தசட்டிக்கும் சோற்றுக்குத் திரியிறியளே என்று. அவரது அருமை இல்லத்தரசியாம் அன்னலட்சுமி, "போங்கோ எத்தினை பேருக்கெண்டு கொடுக்கிறது?" இன்னும் சாப்பிடக் கனபேர் வருவினம்" என்று காத்திகேயருக்கு ஆலாபர்ணம் பாடினாள்.

கந்தசட்டி பிடித்த புண்ணியம் இவர்களுக்கு கிடைக்கும் என்றால் ஆண்டவனுக்கும் கண்ணில்லை என்று தான் சொல்ல வேண்டும். மிருகசாதிகள் பார்த்திருக்க தின்னும் சாதிகள்! போய்விட்டார்கள். மிருகங்கள் என்று மனிதரை அழைப்பது மிருக இனத்துக்கே அவமானம். மிருகங்கள் அகப்பட்டதைத் தின்று அவற்றிற்குப் பதிலாக சுரக்கும் பாலைக் குட்டிகளுக்குக் கொடுக்கின்றன. தம்மையே தியாகம் செய்து இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உடலை வளர்க்க உதவும் பயன் கருதாத இந்த மிருகங்களை காத்திகேயருடனும் மனைவி அன்னலட்சுமி யுடனும் ஒப்பிடுவது தவறு என்று கூட பொன்னிக்குத் தோன்றியது. செடிகொடிகள் கூட "தானுண்டநீரை தலையாலே தருகின்றனவே"

இந்த மனிதன் மட்டும் பிறரது உதவியைப் பெறுவதோடு மட்டும் நின்று தன்னலமே பெரிதென்று என்னுகிறானே என்று எண்ணிக்கொண்ட பொன்னிக்கு ஆறாம் வகுப்பில் படித்த குறள் ஒன்று ஞாபகத்துக்குவருகிறது. "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என்பது இப்படியெல்லாம் பலவிதமாக எண்ணிக்கொண்டிருந்த பொன்னிக்கு தன் கணவன் சொல்லிச் சென்ற அத்தனையும் வேதவாக்காகத் தோன்றின.

"பொன்னு, ஏழைத் தொழிலாளிகள், முத்துச் சிப்பிகள் அழகிகள் உல்லாசிகளின் கழுத்தை அலங்கரிக்க இந்தச் சிப்பிகள் தம் முயிரைக் கொடுக்கின்றன. அப்புறம் நாற்ற மெடுத்து அழுகிப் போகின்றன. அது போலத்தான் எம் உழைப்பை எல்லாம் தாங்கள் அனுபவித்துக் கொண்டு நம்மை நாற்றமெடுக்கும் சாதியாக ஒதுக்கி விடுகிறார்கள்.

பொன்னு அனுபவத்தால் சொல்லுகிறேன் நமது வீழ்ச்சியிலேதான் அவர்களின் எழுச்சி மிகுந்த வாழ்க்கை தங்கியிருக்கிறது. ஆகவேதான் அவர்கள் விழுச்சியிலே தான் நம் வாழ்வில் உயர்ச்சி உண்டு. என்ற முடிவுக்கு நான் வந்து விட்டேன்.

உயர் சாதி என்று சொல்லிக்கொள்பவர்களை, பணக்காரர்களை நம்பாதே. அவர்கள் நம்மை வதைக்கப் பிறந்தவர்கள். அவர்களை நான் குறை கூறவில்லை. கடவுள் அவர்களைப் படைக்கும் போது இதயத்தை உள்ளே வைக்க மறந்து விட்டான். சாக்கடைக்குள் பூவைப் போடுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் என்ன? ஆணவக்காரரிடம் அன்பு வைப்பகம் அதுபோலத் தான் நீ என்ன துன்பம் அனுபவித்தாலும் அவர்களிடம் மட்டும் போகாதே. படித்திருக்கிறான். என்று பெயர் வாங்கிய கணவன் காத்தானின் இந்த வார்த்தைகள் கோபுரத்து மணிபோல பொன்னியின் காதில் மீண்டும் ஒலித்தன.

மயில்வாகனத்தாரின் தம்பி சிவப்பிரகாசம் பெரிய குடிகாரன் காணிபூமி நியாயமாக உண்டு. அவரது பனங் காணியிலே தான் காத்தான் கள்ளுச் சீவி விற்று வந்தான். வைச்சான் வைச்சபடி தினமும் ஐந்து போத்தல் கள்ளு காலை மாலை ஓசியில் கொடுக்க வேண்டும். குழைவெட்டு, வேலியடைப்பு குடும்பத்தோடு எல்லாம் செய்ய வேண்டும் ஏழ்மை முத்திரை பொறிக்கப்பட்டவர்கள் இப்படி ஏதாவது செய்தால்தானே மூச்சைப் பிடித்துக்கொண்டு வாழமுடியும். பனம்பழம் ஈற்றில் ஊமல் காயாவது போல இவர்களும் பயன்படுகிறார்கள். அதனோடு விடவில்லை, ஊமலைப் பிளந்து உட்பருப்பையும் தின்றுவிடத் துடிக் கிறார்களே பணம் படைத்தவர்கள்.

சிவப்பிரகாசத்துக்கு வைத்த கள்முட்டியை ஆடொன்று தட்டி ஊற்றிவிட்டது. அதற்காக அந்த மனிதர் செய்த அட்டகாசம்! ஆயிரம். நான் தொண்டு செய்து காத்தவன் காத்தான் அவனைப் பனைக்கு ஏறவிடாமல் தடுத்தார் சிவப்பிரகாசனார். ஒரு காலமும் இந்தச் சங்கடத்தைப் பற்றி காத்தான் கற்பனை கூடப் பண்ணி இருக்கவில்லை என்றுமில்லாத கோபம் அவனுக்கு ஒரு கையால் அவரை விலக்கிக் கொண்டுபோய் பனையைக் கட்டிப் பிடித்து ஏற முயன்றான். சிவப்பிரகாசம் ஓடிப்போய் அவன் காலைப் பிடித்து இழுத்தார் உழைத்து உழைத்து பனைபோல வைரமேறிய காத்தானின் கால்கள் இடறிக்கொண்டு மேலே ஏறின காத்தான் மேலேதான் ஏறுகிறான். ஆனால் அவன் எண்ணமெல்லாம் கீழேதான். என்றுமில்லாத முறையிலே தான் நடந்து கொண்டதை நினைத்து உள்ளூர வருந்தினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான் கடைசியாக மரத்துக்கு ஏறினது அன்றுதான் அவனது சீவியத்தில் அவன் அதன் பிறகு ஒருதடவை கூட மரம் ஏற முடியவில்லை. "சே! என்ன மடைமைத் தனம் செய்து விட்டேன் வீட்டுக்குள்ளே ஒரு குமர் இன்னும் கரைசேர வழியில்லாமல் கிடக்கிறது. மனைவி என் மகன் இவர்கள் ஒரு வேளை கஞ்சியாதல் குடிக்க இந்தப்பனைகள் தானே தஞ்சம்" இப்படி எண்ணினான் காத்தான்.

விதானை வருமளவிற்கு காரியம் போய் விட்டதால் அவனது தன்மான உணர்வு மீண்டும் கொழுந்து விட்டெரிந்தது அன்றிரவு காத்தான் கண்ணுறங்கவேயில்லை மானமா? வாழ்வா? இப்படி அவன் மனம் கடிகாரப் பெண்குலம் போல் ஆடிக் கொண்டிருந்தது. காய்ச்சல் குணம் என்று பாயில் படுத்தவன் மூன்று நாட்களுக்குள் காத்தான்சுடலைப் பொடியாகி விட்டான். இவ்வளவு சீக்கிரமே காத்தான் கணக்கை முடித்துக்கொள்வான் என்று பொன்னி எண்ணி யிருக்க வில்லை. பொன்னி சோகச் சிலையாக குந்திவிட்டாள்.

நடந்து போன சங்கதிகள் எல்லாம் மீண்டும் நினைவுக்குவர சிறுவனைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்தாள். காத்தான் இறந்து ஐந்து மாதங்களாகி விட்டன. அவன் எந்த வீட்டுக்கு நீ போகாதே என்று சொன்னானோ அதே வீட்டுக்குத்தான் போய்க்கொண்டு இருந்தாள் பொன்னி.

பசி! பசி! கோர வறுமை! யாருமற்ற அநாதையாகி விட்ட பொன்னிக்கு மட்டுமல்ல வீட்டில் கொய்யாக் கனியாக அவள் குமர் மாற்றியுடுக்கச் சீலை இல்லாதபடியால் முடங்கிக் கிடக்கிறாள். ஐந்து வயதாகியும் கோவணமே ஆடையாக பசியே அணிகலனாக கொண்ட அவள்மகன் இந்த இருவருக்கு மாகத்தான் அவள் மூச்சைப் பிடித்துக் கொண்டி ருக்கிறாள். வறுமையும் பசியும் அவர்கள் இளமையை தின்று தீர்த்துக் கொண்டிருந்தன. இந்தப் பசி தீருமென்று தான், கணவன் சொல்லையும் மறந்து மயில்வாகனம் வீட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியத்துக்கு வந்தாள் சிவப்பிரகாசத்தின் தாய் கண்ணை மூடிக்கொண்ட தால் தான் இன்று புண்ணியம்.

பாவம்! எச்சிலாகுதல் கிடைக்கும் என்று தான் பொன்னி அடுப்புக்கு எரிக்கிறாள். இதற்கிடையில் மழை வேறு வந்து அவளை தாழ்வாரத்தில் குந்தச் செய்து விட்டது. நாய் மட்டும் மிருகமாய் பிறந்த புண்ணியத்தால் வீட்டுக்குள்ளே போய் மட்டைப் பரிசோடு தாழ்வாரத்தில் குந்தியிருந்தது.

துள்ளி விழுகின்ற சோற்றுப் பருக்கைகளை கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் சிறுவன். **"கீரிமலைக் கார் வந்துவிட்டது"** என்று எல்லோரும் சொல்லியபடி வாசற் பக்கம் ஓடினார்கள். இனியென்ன? பந்தி நடக்கும் ஏதாவது கிடைக்குமென்று எண்ணிக்கொண்டு அடுக்குப் பெட்டியை வரிசையாக தன் முன்னே வைத்துக் கொண்டாள். **"நாசமாய் போன ஐயர் இன்னம் வரவில்லையோ"** என்று மயில்வாகனத்தார் உறுக்கிக் கேட்டார்.

சரியாக மூன்று மணிக்குப் பந்தி தொடங்கியது இதற்கிடையில் தலைச்சுற்றால் சிறுவன் மண்ணிலே படுத்து விட்டான். அண்டாவின் அடியில் அடிப்பிடித்திருந்த சோற்றை வழித்துக் கொடுக்கலாம் என்றால்.... கைபட்டாலே குற்றம் யாராவது கண்டால்.........

முதற் பந்தி முடிந்ததும் வெளியே எச்சிலுக்குக் காத்திருந்தவர்கள் பெட்டிகளைத் தட்டி நிரையாக வைத்துக் கொண்டார்கள். நாய்கள் தங்களைத் தயார் பண்ணிக் கொண்டன. ஒன்று வெறும் மிளகாய்! இரண்டு பாகற்காய்த் துண்டு! மூன்று வெற்றிலை! இப்படியே எச்சில்கள் வீசப்பட்டன. அடுத்து சிவப்பிரகாசம் தூக்கி வந்த இலை பாரமாக இருந்தது. பொன்னி அவரோடு இரண்டு கையையும் நீட்டினாள். **"சீ விலத்து" "வள்ளி இந்தா"** என்று நீட்டினார் வேறொருத்தியிடம். தான் யாரும் செய்ய முடியாத ஒன்றைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து விட்டவர் போலவும். அந்த வடுவா காத்தான் பெண்டிலுக்கு நல்ல பாடம் படிப்பித்தவர் போலவும் மிடுக்காக நடந்தார் கள்முட்டிச் சிவப்பிரகாசம்.

பொன்னிக்கு பெருத்த ஏமாற்றம் தன்னையே நொந்து கொண்டாள். **"கடவுளே"** இப்படி எல்லாம் எங்களையேன் வதைக்கிறாய் ஒரு பனையை வீழ்த்தி என்னைச் சாகடிக்க முடியாதோ?" என்று துக்கப்பட்டாள். இதையெல்லாம் கண்கசிய கருணாகரன் பார்த்துக் கொண்டு நின்றான். இவன் சிவப்பிரகாசத்துக்கு பெறாமகன் முறையானவன். அந்தக் குடும்பத்திலே பிரமன் வைக்க மறந்துவிட்ட இதயங்களை கருணாகரனுக்கு ஒன்றாக வைத்திருக்க வேண்டும். அது பூவிதயம்!.

**"பகுத்துண்டு பல்லுயிரோம்பும்"** பண்பு தனி மனிதனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினை அழித்திடும் பாரதியின் உணர்வு எல்லாம் கலந்த ஒரு வடிவம்தான் கருணாகரன்!. இந்தச் சமுதாய அமைப்பு, பிராமணீயத்தின் சூழ்ச்சி இந்த ஆண்டான் அடிமை, வறுமை யாவும் என்று தான் மாறுமோ? என்று அவன் ஏங்கினான். இரண்டாம் பந்தியிலே குந்தியிருந்த கருணாகரன் படைத்த சோற்றைத் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை பொன்னியின் முகத்திலே தன் அருமைத் தாயின் சாயலைக் கண்டான்.

தன் தம்பி ஒருவன் பசியால் துவள்கிறான் எனவே அவனுக்குப்பட்டது நாயும் குட்டிகளும் தம் வயிற்றை ஒருவாறு கழுவிக்கொண்டன. ஆனால் அந்தப் பாவிச் சிறுவனும் தாயும்? இலையில் வைக்கப்பட்ட சோற்றை தொட்டுப் பார்க்காத கருணாகரனை பந்தி வைத்தவர் பார்த்து, **"ஏன்தம்பி சாப்பிடன்"** என்றதும் **"வயிற்றிலை ஒரு மாதிரிக் கிடக்கு"** என்று சொல்லி எழுந்து இலையை அணைத்துப் பிடித்தபடி வெளியே நடந்தான். பொன்னியின் பெட்டியுள் அதனைப் போட்டுவிட்டு அவன் போய்விட்டான்.இந்த நன்றியை ஏழேழு பிறவியிலும் நான் மறவேன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னியின் கண்கள் பேசின. பெட்டியை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு அவள் நன்றிப் பார்வையைக் கண்டு கண்கலங்கியவாறு தான் கருணாகரன் போனான்.

இலையை விரித்துப்பார்த்தாள் பொன்னி எச்சிலேயல்ல புதுச்சோறு, கைபடாத புதுச்சோறு! ஆ! கடவுளே! எச்சிலுக்கு ஏங்கியிருந்த எனக்குப் புதுச்சோறு அளித்தாயே. என்று கண்கலங்கக் கூறினாள்.

"சிவப்பிரகாசம் பிறந்த குடும்பத்திலே தானே இந்தப் பெடியனையும் படைத்தாய். ஆத்திரத்தால் நாம் என்ன பேசிக் கொண்டாலும் நல்லவர்களும் இங்கே இருக்கிறார்கள். கருங்காலிப் பனையிலே கருப்ப நீரைப் படைத்தாய்! முள்ளிலே றோசாவையும் இங்கே கல்லிலே மலரையும் படைத்து விட்டாயே! கருணாகரன் மலர்! இப்படி ஆயிரம் கருணாகரன்கள் பிறந்தால் புதுச்சோறுக்குப் பஞ்சம் இல்லை" என்று எண்ணியபடி எழுந்தாள் பொன்னி.

சிறுவனைத் தூக்கி இடுப்பில் வைத்தபடி வீட்டிலே வாடிக்கிடக்கும் கன்னிப் பெண்ணை நினைத்து நடந்தாள் பொன்னி அவள் தலையில் புதுச்சோறு இருந்தது.

◆◆◆◆
◆◆◆
◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகணாவின் ஆக்கங்கள் பற்றி அவ்வப்போது பத்திரிகையில் பல விமர்சனங்கள் வெளிவந்தன. அவையெல்லாவற்றையும் தேடிக் கண்டுபிடிப்பதில் சில கஷ்டங்கள் ஏற்பட்டன. எனினும் கிடைத்த விபரங்கள் கீழே தரப்பட்டுகின்றன.

1963ம் ஆண்டு வாக்கில் சுகணா அவர்களை இதழாசிரியரா கக் கொண்டு "கண்கள்" என்கின்ற முத்திங்கள் இதழ்பற்றி அறிஞர் பெருமக்கள் வழங்கிய மதிப்பீடுகள்.

முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான அமரர் மு.சிவசிதம்பரம்-

"கண்கள் மலரட்டும்
ஈழத்துத் தமிழர் துயர் தீரட்டும்
மாணவரிதயம் பொங்கட்டும்!
எங்கும் இன்பம் தங்கட்டும்
வாழ்க தமிழ்!
பொங்குக இன்பம்..!"

வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்த செய்தி -(10.01.1963) இவ்விதழில் சிறந்த கட்டுரைகள், இனிய கவிதைகள், கேள்விபதில், குழந்தை இலக்கியம், சிறுகதை என்பன இருக்கின்றன. இப்பத்திரிகை சிறப்பான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

தமிழகத்திலிருந்து வெளிவரும் "முத்தாரம்" என்ற சஞ்சிகையின் நாற்பத்தொன்பதாவது இதழில் தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி-

"காதல் செய்யும் விலங்கினம்" இக்கட்டுரை இலங்கையிலிருந்து வெளியாகும் "கண்கள்" ஏட்டிலிருந்து மறுபிரசுரம் செய்யப்பட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்கள்" சஞ்சிகையின் பொங்கல் வெளியீட்டில் தமிழகத்தின் பகுத்தறிவுத் தந்தை ஈ.வே.ரா பெரியார்,

என்னுள்ள மகிழ்ச்சியினாற் பொங்கு நாளி
லெனக்கினிய பொங்கல் விழாத் தம்பி யிநா
ளுள்ளம் பொங்குகின்றதென்றா னீதா
னுயர் பொங்கல் விழாவதனை யுவந்து காண்பாய்.

"கண்கள்" சஞ்சிகையின் பொங்கல் வெளியீட்டில் ஈழத்து தமிழறிஞர் கந்தமுருகேசனார்,

தன்னாட்சி தமிழர்க்கே யுலகிலில்லைத்
தலைவணங்கி வாழ நிலை தவிர்த்த பின்பே
பொன்னாட்சி நெல் விளைக்கு முழவன் பொங்கல்
போற்றரிய வவ்வழி செல் வாழ்வாய் நன்றே!

"கண்கள்" இதழ் பற்றி தினகரன் பத்திரிகையில் வெளிவந்த செய்தி-

இச்சஞ்சிகையின் முதலாவது இதழில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு எழுத்தோவியமும் படிக்கப்படிக்க இனிக்கும். பொறுக்கு மணியாக விளங்குகிறது.

இவ்விதழைப் படித்துப் பார்க்கும் யாவரும் அடுத்த இதழைப் பேராவலோடு எதிர்நோக்கத் தூண்டப்படுவர் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை. குறிப்பாக மாணவர்க்கு பயன்படக் கூடிய சிறந்த வெளியீடு.

1961ம் ஆண்டளவில் சுகணா அவர்கள் தமிழ் இலக்கியப் பாடநூலாக எழுதி வெளியிட்ட "கம்பனும் பாரதியும்" என்ற உசாத்துணை நூல் மிகவும் பிரசித்தம் பெற்றிருந்தது. அந்நூல் பற்றி தினகரன் ஞாயிறு இதழில் வெளிவந்த விமர்சனக்கட்டுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன் ஞாயிறு இதழ்
# புத்தக உலகம்

**"கம்பனும் பாரதியும்"**

**எழுதியவர் : சு.கணபதிப்பிள்ளை (சுகணா)**

**வெளியிட்டோர்: வட இலங்கா புத்தகசாலை பருத்தித்துறை.**

**பக்கங்கள் : 267**

**விலை : ரூபா மூன்று**

அல்வை வள்ளுவர் கலை மன்றத்தின் முதலாவது வெளியீடாக அமைந்துள்ள "கம்பனும் பாரதியும்" 1961-1964 ஆண்டுகளில் ஜீ.ஸி.ஈ பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான ஓர் "இலக்கிய விளக்கம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் முகப்பு அட்டையில் "அருட்பார்வைக்கு" என்ற தலைப்பில் அமைந்துள்ள "இச்சிறுவன் தன் பெயருக்கு முன்னே தந்தையின் முதலெழுத்து அன்றி எதுவுமிலான் பின்னே அதுவுமிலா" "தாயே உன் அருட்பார்வை எனக்குப் படவேண்டும். குற்றங்கள் களைந்து என்னை இந்நாட்டு மாணவர்க்கு அறிமுகம் செய்து வைப்பாய் தாயே" என்று இறைஞ்சுகிறார். ஆசிரியர்களுக்கு தன்னடக்கம் என்பதற்கோர் எல்லை யுண்டாயின் அதுவே இதுவெனக் கூறலாம்.

ஏனெனில் "கம்பனும் பாரதியும்" மாணவர் தேர்வுக்குத் துணைபுரியும் ஒன்றையே நோக்கமாகக் கொண்ட ஒருவிளக்க நூல் மட்டுமல்ல அதனிலும் சிறந்த வேறு பல பயன்களையும் விளைவிக்கவல்ல சாதனமானதோர் இலக்கியச் சிருஷ்டிஅது என்று திண்ணமாகக் கூறலாம்.

கம்பனின் தீந்தமிழ் கவிதைகள் சிலவற்றையும் பாரதியார் பாடலில் சிலவற்றையும் எடுத்துக்கொண்டுஆராய்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தும் ஆசிரியர் அந்தக் கவிதைகளில் அடங்கியுள்ள காட்சிகளையும், கதாபாத்திரங்களையும் படிப்போரின் உள்ளங்களில் அப்படியே படியவைத்து விடுகின்றார்.

கவிதைகளில் அடங்கிய நிகழ்சிகள் சிலவற்றை நாடக ரூபத்தில் சுவைபட படித்துக் காட்டியுள்ளார். ஆசிரியர் விளக்க நூல் வெளியிட்டுத்துறையில் புத்தம் புதிய அம்சமாகும்.

மாணவர்களுக்கு பொதுவாகக் கவிதை என்றாலே ஒரு தலையிடிதான் கவிதைகளுக்கு உரையாசிரியர்கள் எழுதும் விளக்கங்களோவெனில் இன்னும் ஒருபடி மேலே சென்று மாணவர்க்கு தலையிடி மட்டுமல்ல கபாலக் குத்தையும் ஏற்படுத்திவிடுவதுண்டு. ஆனால் சுகணாவின் விளக்கமோ அதற்கு நேர்மாறானது. காலப்போக்கிற்கேற்ப நவீன உத்திகள் சிலவற்றைக் கையாண்டு பாடம் பயிலும் மாணவர் உள்ளங்களில் பரீட்சைக்கென தெரிவு செய்யப்பட்டிருக்கும் பகுதிகளாற் நூல் முழுவதையும் கற்றுத் தெளிந்துவிட வேண்டுமென்ற ஆர்வத்தைக் காட்டி விடுகிறார். ஆசிரியர் தான் அணிந்துள்ள விளக்கத்தின் திறமையால்.

நூலுக்கு ஆய்வுரை வழங்கிய அன்பர் ஒருவர் குறிப்பிட்டது போல இலக்கியச் சுவை நுகர்தல் ஒரு கலை. தலை சிறந்த ஒரு பணி தமிழ் இலக்கியச் செல்வத்தை அள்ளித் தன்னுடன் அடக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்திற்கு உறுதுணைபுரியவல்லது சுவை நுகர்கலை, சுவை நுகர் கலையை வளர்ப்பது "கம்பனும் பாரதியும்"

ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ள அரும்பத உரைகள் இலக்கணக் குறிப்புக்கள் மாணவர்க்கும் மற்றவர்க்கும் துணை புரிவன. அறிவியல் வழியாகக் குறிப்பிடுவதனால் **"கம்பனும் பாரதியும்"** ஓர் இலக்கிய நூல் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனையே கலைவடிவில் சுட்டிக்காட்டுவதாயின்,
"பாடப்புத்தக உரை ஏடுகளின் வரலாற்றில்ஒரு திருப்புமுனை"
அல்லது,
"இலக்கியப் பூங்காவில் மாணவர்களை மயக்கி இழுத்துச் செல்ல வைக்கும் கன்னித்தமிழ் முயற்சி" எனக் கூறலாம். படித்துப் பாருங்கள் ஒப்புவீர்கள்.

ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டி ஆசீர்வதித்து ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டியது அனைவருக்கும் கடன். ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கண்கள்" இதழின் பொங்கல் மலரிலிருந்து சுகணாவின் ஆசிரியர் தலையங்கம் - [1963-தை]**

# தமிழ்ப் பொங்கல்

**அ**த்.........தான்!

கட்டவிழ்ந்த புது மலராள், கலசங்கள் தாங்கி வரும் காதற் பெண்ணாள், காராளன் கைப்பிடித்த கனியிதழாள், "அத்...தான்! போய்...... வருக; போர்க்களம் போய்வருக. என்று யான் நின்கையால் இசைமீட்டும் யாழாக ஆவேனத் தான் என்றிருந்தேன்; இன்று வந்ததந்தப் பொன்னாள். மணமாச்சு; மணமகனாம் தங்கள் கையால் அணிவித்த மலர்மாலை வாடவில்லை! கொழுவிய சிறுவிரலின் உள்ளுணர்வு தாழவில்லை! பொங்கி வந்த பூரிப்பு அடங்க வில்லை! ஓரிரவு ஆயுமில்லை; போர்முரசு ஒலிக்கின்றார் நம்மறவர்; போங்களத்தான், நம் தமிழ்காக்க நாடுகாக்கப் போய்வருக. வருகின்ற பொங்கற் புதுநாள் நான் காத்திருப்பேன். பொங்கும் இதயத்தின் தாகத்தைத் தணித்திட நீர் வருவீரத்தான். புத்தமுது படைத்துங்கள் கையால் தொட்டு, என்வாயில் தாம்வைக்க நானும் வைக்க எமக்கின்பம்! எங்கும் இன்பம் தங்கிடவே வருவீரத்தான்."

தைப்பொங்கல் தமிழர்தம் பண்பாட்டை சித்தரிக்கும் பொங்கல். உழுதுண்டு- உண்ணுவித்து வாழும் உழவர் பெருங்குடி மக்களின் புதுப்பொங்கல்; உலகப்பொங்கல்; பொங்கி வருமிடர்களெல்லாம் புத்தமுதாய் மாற்றுதற்கு ஆற்றல் பெற்ற அன்புப் பொங்கல். எங்கும் பொங்கும் இன்பப் பொங்கல் கந்தனும் கார்த்திகேயரும் கொண்டாடும் பொங்கல். பழம்பெரும் திராவிடப் பெருமக்களின் விழாவாக நடைபெற்றுவருகிறது. சிறப்பாக அழகும்-அறிவும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வீரமும் கொண்ட தமிழ்ப்பெண்கள் பொங்கல் நாளை வாழ்வின் புதுநாள்-துன்பக் கணக்கை முடித்து இன்பக்கணக்குத் தொடங்கும் நாள் என்று கருதிக் கொண்டாடி மகிழ்ந்து போயினர்.

மணம் முடிந்து இரண்டு நாழிகைகூட ஆகவில்லை; போர்முரசு ஒலிக்கிறது. முரசொலி கேட்ட மணமகன், "கண்ணே, கற்கண்டு மொழிப்பாவாய்! காவலன் போருக்குப் புறப்பட்டு விட்டான். காராளனாம் உன்துணைவன் நானும் பெயர் கொடுத்தேன், பெயர் எடுத்து வருகின்றேன். காட்டாந் தரையாவும் கலப்பைக்கொழுவால் பிளந்தெறியும் உன் அத்தான், வென்றுவர ஒன்றுதா" என்றிட்டான்; முத்தம் பெற்றிட்டான் முகராத மலராக, பருகாத தேனாக, மீட்டாத யாழாக காத்திருக்கின்ற புதுப்பெண் கூறியவை தான் அந்த வாக்கியங்கள்.

இத்தகைய நற்பெண்டிரைப் பெற்ற நம் தமிழ் நாட்டில் தைப்பொங்கல், எழிலும் இன்பமும் இயைந்த விழாவாகத்தான் இருந்து வந்தது. கனகமணிக்குவியல் போல் கதிர்மணிகள் நிறைந்திருக்கும் வேளாண் குடிசை! நாளெல்லாம் கழனியிலே உழைப்பவர்கள், கோழிக் குரலுக்குப் புறப்பட்டு காகம் அடைய வீட்டை அடைபவர்கள் அவர்கள் குடிசையழகு இழந்து தோற்றுவதில் கருத்துண்டு. செங்கரும்புச் சேல் விழியால்- உழவன் தன் மனைக்கிழத்தி, செங்கையாள் மண்வெட்டி, செம்மண்ணைத் தலையிருத்தி வீடுசேர்த்து, மெருகிட்டு மெழுகிக்கோலமிட்டு ஒயிலான இடையினிலே புதுக்குடமிருத்தி நீர்த்துறையில் நீராடி, நீர்மொண்டு, புத்தாடை தனையுடுத்து பனிநடுக்க நற்றேன் பிலிற்றும் பணிமலர்தான் ஆய்ந்து அழகு செய்து, முற்றத்தில் உலைநிறுத்தி, "அத்தானே போடுங்கள் புதுமணியை" என்று கூறி, செங்காந்தற் கைசிவக்க, செங்கலசிமிழ் அசைவில் தினவெடுத்த காராளன் உளமசைய, புத்தரிசி தீட்டுகின்ற தீட்டாத சித்திரத்தால்! பசும் பால் பொங்க உண்டான தூய்மையினால்,இதயம் பொங்க, இன்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்க புற்கை பொங்கி ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!! என்றிசைத்து, அத்தானே! அன்புச் செல்வங்காள்! என்னருமைத் தாயினமே,தம்பியரே, அண்ணாவே! அருமந்த வாழ்விற்கு விளக்கிட்ட மாமா மாமியரே! அற்புதமே! அங்கயற்கண்! விருந்துண்போம் வாரீர்கள்! கரும்புண்டு சுவைப்பது போல் கருத்து முண்போம்! என்று அழைத்து விழாவாடும் பொங்கற்புது நாள்- புதுவீடு, புதுக்கோலம், புதுவீடு, புதுப்புடைவை, புத்தடுப்பு, புதுப்பானை, புதுவிருந்து, புதுவாழ்வு எல்லாம் கண்ட தமிழர்கள் இற்றை நாள் பழமையை எண்ணிப் பெருமூச்சு விடும் நிலையில் இருக்கிறார்கள் களம் காண்பேன் களம் காண்பேன் என்ற வீரம் விலைப்பொருளாகி தன்மானம் அற்றவராய் வாழ்கின்ற நிலையிழந்தோ பொங்கல்வருகிறதே பொங்கி வரும் விழிக்கடையில் நீரன்றி நம்மிடம் எதுவுண்டு? நமக்கு மொழியுண்டோ பேச? நாடுண்டோ வாழ? பொருளுண்டோ விருந்தயர? எதுவுண்டு? என்றெண்ணி பொங்கட்டும் அவர் உள்ளம்! வெம்பட்டும், பொங்கி வெம்மித் தங்கட்டும் தன்மானம்! என்று வாழ்த்தி தமிழரசியாதல் கொண்டு புத்தமுது படைத்து புத்தர்களும், சித்தர்களும்! உலகம் யாவும் விருந்துண்டு மகிழுமாறு பொங்குக தமிழின் பொங்கல்! தங்குக எங்கும் பண்பு என்று வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாபொன்ஸ் - அல்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org